க. 174

# கருத்தும் எழுத்தும்

3550

PRESENTED BY:
V. PL. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

மா. பாலசுப்பிரமணிய முதலியார், எம். ஏ.

3550.

PRESENTED BY:
V. PL. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

# கருத்தும் எழுத்தும்

(உரைச்செய்யுள் தொகுதி)

மாங்காடு, பாலசுப்பிரமணிய முதலியார், எம். ஏ.
[சென்னை நகராண்மைக் கழக, பல்கலைக் கழக,
பவாநந்தர் கழக உறுப்பினர்]

மா. பாலசுப்பிரமணிய முதலியார்,
35, ஆண்டியப்ப நாய்க்கன் தெரு,
சூளை :: சென்னை
1943

## கடமை நவிற்சி

என்னைப் ‘ படித்த பிள்ளை ’ என்று பலரும் நல்லபடி
கூறுதற்கு முன்னிலையாய் இருந்து விளங்கும்
என் அருமைத் தந்தையார்
*புலவர், திரு. மாங்காடு, வடிவேலு முதலியார்*
அவர்களின் திருவடிகளில் நான் இடும்
முதல் மலர் இச்சிறிய நூல்.

மா. பா.

விலை : ரூ. 1—8—0

3550

# முன்னுரை

இந்த நூல் பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஏற்றது. இங்கிலிஷ் மொழியில் அவர்களுக்குப் பாடச் சுவடிகளாய் வைக்கப்படும் நூல்களோடு பல வகையிலும் ஒவ்வுமாறு இஃது ஆக்கப்பட்டிருக்கின்றது.

மாணவர்களுடைய அறிவுப் பரப்பில் பற்பல கருத்துக்கள் அடங்கவும், அவர்களுடைய எழுத்துத் திறன் சிறக்கவும் இந் நூல் ஆக்கப்பட்டிருத்தலின், இது கருத்தும் எழுத்தும் என்னும் பெயர் பெறும்.

இதில் மேனுட்டுக் குரவர்கள் எழுதிய சில கட்டுரைகளின் மொழி பெயர்ப்புச் சுருக்கங்களும், சில கலைப் பொருட்கட்டுரைகளும், நானே எழுதிய சில கட்டுரைகளும் அடங்கியிருக்கின்றன. இவற்றில் சில 'செந்தமிழ்ச் செல்வி'யில் அவ்வப்போது வெளியிடப்பட்டன. மற்றவை இந்த நூலாக்கத்திற்கெனவே எழுதப்பட்டன.

இந்த நூல் சுவடியாக்கப்படுங்கால் பிழை திருத்தம் பார்த்து உதவிய வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கு என் நன்றி உரித்தாகுக.

இந்நூலைப் பல்கலைக் கழகத்தார் கல்லூரிகளிற் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படுமாறு செய்வார்கள் என்று எண்ணுகின்றேன்.

மா. பா.

# பொருளடக்கம்


| பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|
| க. கட்டுரை | ... | ... | 1 |
| உ. மெய்ப்பாடு | ... | ... | 6 |
| ங. விலங்குகள் | ... | ... | 14 |
| ச. ஊர்ச்செலவு | ... | ... | 21 |
| ரு. ‘சொல்’ சொன்ன சொல் | ... | ... | 25 |
| சு. ‘அறஞ்செய விரும்பு.’ | ... | ... | 30 |
| எ. உழவு | ... | ... | 34 |
| அ. ஒரு புற்ருள் | ... | ... | 38 |
| கூ. இலக்கியப் பயிற்சி | ... | ... | 40 |
| க0. சிறு கதை | ... | ... | 47 |
| கக. நூலாக்குவோர் அளவளாவுதல் | | ... | 51 |
| கஉ. பிறப்பின் பெருமை | ... | ... | 58 |
| கங. தொழிலும் உடற்பயிற்சியும் | ... | ... | 61 |
| கச. ‘ஆறுவது சினம்.’ | ... | ... | 65 |
| கரு. உட்பாடு | ... | ... | 69 |
| கசு. தன்மை | ... | ... | 83 |
| கஎ. உயர்நிலை மாடம் தரும் எழுச்சி | ... | ... | 116 |
| சில மேனுட்டுக் கட்டுரையாளர் வரலாற்றுக் குறிப்புக்கள் | ... | ... | 121 |

க 3550

# கட்டுரை

கட்டுரை என்பது இங்க்லிஷ் மொழிப் பயிற்சியினால் தமிழிடைப் புகுந்த சில புதிய இலக்கிய வகைகளில் ஒன்று.

கட்டுரையின் அமைப்பும், கருத்தும், நடையும், நோக்கமும் பலவாறு இருத்தலின், அதன் தன்மையை வரம்பிட்டு வகுத்தறிதல் அரிது. ஒரு வகையான கட்டுரை, விரித்து விளக்கப்படாத ஆழ்ந்த கருத்துக்களை நெருக்கமாகக் கொண்டு, சில பக்கங்களுள் அடங்குவதாய் இருக்கின்றது; மற்றொரு வகையான கட்டுரை, ஆக்கியோனின் கருத்துக்களையும் பற்பல மேற்கோள்களையும் கொண்ட, ஒரு கலவையாய் இருக்கின்றது; வேறொரு வகையான கட்டுரை, கருத்தாழம் இன்றி, ஆக்கியோனின் நுகர்ச்சி - நவிற்சியாய் அமைந்திருக்கின்றது; பிறிதொரு வகையான கட்டுரை, நீண்டு, மெய்ப்பொருட் கோட்பாடுகளைப் பற்றிய கருத்துக்கள் நிரம்பியதாய் இருக்கின்றது; இன்னொரு வகையான கட்டுரை உண்மையில் ஒரு சிறு நூலாகவே அமைந்திருக்கின்றது. கட்டுரை என்னும் ஒரே இலக்கிய வகையைச் சேர்ந்த இவை இவ்வாறு வேறுபடுவதன்

முன்னிலை யாதெனில், ஒவ்வோர் ஆக்கியோனும் கட்டுரையின் தன்மையை ஒவ்வொரு வகையாக அறிவதேயாம்.

சிலர், "கட்டுரை என்பது உள்ளத்தின் மேற்போக்கான படர்ச்சியாகும்; அஃது ஒரு வரம்புக்கு உட்பட்ட உரைச்செய்யுள் அன்று," என்று கருதுவர். வேறு சிலர், "ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிக் கிளைத்தல் இன்றி, விரிந்த நடையில், போதிய நீளமாகச் செய்யப்பட்ட ஓர் உரைச்செய்யுளே கட்டுரையாகும்," என்பர். இவ்விரண்டு கருத்துக்களில் பின்னதே ஏற்புடையதாகத் தோன்றுகின்றது. ஏனெனில், கட்டுரை என்னும் பெயருக்கு ஏற்ற ஓர் உரைச்செய்யுள் நீளத்திலும், நுதல் பொருளிலும் ஓர் எல்லைக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். கட்டுரையின் நோக்கம் எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளைப்பற்றிய யாவற்றையும் குறிக்கவேண்டும் என்பதன்று; ஆதலால், அது நீண்டதாக அமைதல் ஏலாது. எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளைப் பற்றிய பிறர் கருத்துக்களை மறுத்துக் கட்டுரையாக்கியோனின் கருத்தை நிலை நிறுத்துவதும் கட்டுரையின் நோக்கம் அன்று; ஆதலின், ஒரு கட்டுரையின் நுதல் பொருள் எல்லை மிகுந்து விரிவதும் கூடாது.

ஆயின், 'யாதானும் ஒரு பொருளைப் பற்றிச் சுருங்கிய அளவில், மேற்போக்காக எழுதப்பட்ட ஓர் உரைச் செய்யுளே கட்டுரைபோலும்!' எனில், அதுவும் பொருந்தாது; ஏனெனில், கட்டுரை என்பது சுருக்கமாய் இருப்பதோடு கருத்தாழம் உடையதாயும் இருக்கவேண்டும். கட்டுரை எழுத விரும்பும் ஓர் எழுத்தாளன், தான்

எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றி, மிகச் சில கருத்துக்களையே அறிந்தவனாய் இருந்தால், அவன் எழுதும் உரைச்செய்யுள் மேற்போக்காகவும் சுருக்கமாகவும் இருக்கும்; அந்த எழுத்தாளன்பெரிதும் கற்றவனாயும், எழுதும் ஆற்றலில் சிறந்தவனாயும் இருந்தால், அவன் எழுதும் கட்டுரை, பல்கிய கருத்துக்களைக் கொண்டதாகவும் சுருக்கமாகவும் இருக்கும். இவ்விரு வகையான சுருக்கங்களில், முன்னது பயனற்றது; பின்னதே வேண்டப்படுவது. சுருக்கமுண்மை ஒன்றாலேயே நாம் ஓர் உரைச் செய்யுளைக் கட்டுரை எனக் கோடல் தவறு. சுருக்கத்துடன் கருத்தாழமும் இருந்தாலன்றி, ஓர் உரைச் செய்யுள் கட்டுரையாகாது.

'சுருங்கிய அளவில் நெருங்கிய கருத்துக்களைக் கொண்ட ஓர் உரைச்செய்யுள் தெளிவு குறைந்து தோன்றுமன்றோ?' எனில், தெளிவு குறையாதவாறு திறமையுடன் எழுதப்படுவதே ஏற்ற கட்டுரையாகும் என்பதை ஈண்டு அறிதல் வேண்டும். 'அஃது எவ்வாறு கூடும்?' எனில், ஏற்பில்லாக் கருத்துக்களை நீக்கி, ஏற்புடைக் கருத்துக்களையே புகுத்தும் திறமையினாலும், அந்த ஏற்புடைக் கருத்துக்களையும் வன்மையுடன் பொருத்தி வைக்கும் திறமையினாலும், தெளிவு குன்றாமல் சுருக்கமாகவும் கருத்தாழத்துடனும் கட்டுரை எழுதுதல் கூடும் என்பது உறுதி.

'எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளைப் பற்றிய யாவற்றையும் குறித்தல் கட்டுரையின்நோக்கம் அன்று எனவும், அப்பொருளைப் பற்றிய பிறர் கருத்துக்களை மறுத்துத் தம் கருத்தை நிலைநிறுத்துவதும் கட்டுரையின் நோக்கம் அன்று எனவும் மேலே கூறியபடி கருதி

ஞல், அக்கருத்துக்கு இணங்க எழுதப்பட்ட ஒரு கட்டுரை **பொருள் நிறைவின்மை** என்னும் குற்றத்தை உடையதாகுமன்ருே?' எனின், ஆகாது என்றே கூற வேண்டும். ஒரு பொருளேப்பற்றி எழுதவேண்டின், இரண்டு முறைகளில் எழுதலாம்: ஒரு பொருளேப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு பிரிவு பற்றியும் சில பல எழுதுதல், ஒரு முறை; ஒரு பொருளேப் பல துறைகளில் ஆராய்ந்து எழுதுதல் மற்ருெரு முறை. இவ்விரண்டு முறைகளேயும் ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவாம்: **அன்பு** என்னும் பொருளேப் பற்றி எழுதவேண்டில், அஃது இரண்டு முறைகளால் செய்தல் கூடும். குழவியிடத்தன்பு, உறவினரிடத்தன்பு, நண்பரிடத்தன்பு, நன்மை செய்தாரிடத்தன்பு, தீமை செய்தாரிடத்தன்பு என்பவை போன்ற பிரிவுகளே முதலில் அமைத்துக்கொண்டு, ஒவ்வொரு பிரிவு பற்றியும் சில பல எழுதுதல் ஒரு முறை. இல்லறத் துறையில் அன்பின் ஆக்கம் என்ருதல், அரசியல் துறையில் அன்பின் ஆக்கம் என்ருதல், கடமையுணர்ச்சியில் அன்பின் பகுதி என்ருதல் கருதக்கூடிய பல துறைகளில் யாதானும் ஒரு துறையிற் சென்று ஆராய்ந்து எழுதுதல் மற்ருெரு முறை. அன்பைப் பொருளாக உடைய ஓர் உரைச் செய்யுளில் நினைக்கக் கூடிய எல்லாப் பிரிவுகளேப் பற்றியும், ஆராயக்கூடிய எல்லாத் துறைகளிலும் எழுதின், அவ்வுரைச் செய்யுள் ஒரு நூலாகவே விரியுமன்றி, கட்டுரைஆகாது. யாதானும் ஒரு பொருள் துறையிலாதல், ஒரு சில பொருட் பிரிவுகளேப் பற்றியாதல் எழுதப்படுவதே எல்லேக்கு உட்பட்ட கட்டுரையாகும். ஆனுல், எழுதும் பொருளெல்லேக்குள் குறிக்க வேண்டிய கருத்துக்கள் யாவும் குறிக்கப்படவேண்டும்.

அப்பொழுதுதான் அக்கட்டுரை எடுத்துக்கொண்ட பொருளெல்லேக்குள் பெறக்கூடிய நிறைவை உடைய தாய் இருக்கும்; பொருள் நிறைவின்மை என்னும் குற்றமும் இல்லதாகும்.

இனி, ஒரு கட்டுரைக்குச் சிறப்பாக உள்ள ஒரு தனை மையை நன்கு அறிதல் வேண்டும். அஃது யாதெனில், எடுத்துக்கொள்ளப்பட்ட பொருட்டுறையைப் பற்றி யாதல், பொருட்பிரிவுகளைப் பற்றியாதல், ஆக்கியோ னின் முடிந்த கருத்துக்களை அது கொண்டிருக்கவேண் டும் என்பது. வாளா, பிறர் கருத்துக்களையே எடுத்துக் கூறுதல் கட்டுரையின் நோக்கம் அன்று. கட்டுரையை எழுதப் புகுந்த எழுத்தாளன் தான் ஆராய்ந்தறிந்த கருத்துக்களையும் முடிவுகளையும் நுவலுவதே கட்டுரை யின் நோக்கம்.

முடிவாகக் கூறுமிடத்து, ஒரு கட்டுரை உரைச் செய்யுளாகச் சுருக்கமாகவும், கருத்தாழம் உடையதா கவும், பொருள் தெளிவு உடையதாகவும், பொருள் நிறைவு உடையதாகவும், ஆக்கியோனின் முடிந்த கருத் துக்களைத் தெள்ளிதில் புலப்படுத்துவதாகவும், குறுகிய பொருளெல்லே உடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பது துணிபு.

உ

# மெய்ப்பாடு

**மெய்ப்பாடு** என்பது ஒருவன் உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சி, அங்கு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் வழியால் வெளிப்படுதலாம். இதனை, **வீரசோழிய உரைகாரர்** '**மெய்க்கட்பட்டு விளங்கிய தோற்றம்**' என்பர். ஒல்காப் புகழ்த் **தொல்காப்பியர்** மெய்ப்பாடுகளை **எண்** வகையாக வகுத்தனர். அவை, **நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை** என்பன. மேல்நாட்டு உளநூற்புலவர் மேலும் பல வகை மொழிவர். ஆயினும், அவையெல்லாம் இவ்வெட்டனுள் அடங்குவன என்பது ஒருதலை.

உள்ளத்தே நிகழும் உணர்ச்சிகளாகிய நிகழ்ச்சிகள், முகமாற்றத்தாலும், மற்ற உறுப்புக்களின் நிலை வேறுபாட்டாலும், புறத்தார்க்குப் புலனும். எனவே, அவை மெய்ப்பாடுகள் எனப்பட்டன. ஆங்கிலத்தில் அவை **இமோஷன்ஸ் (Emotions)** எனப்பட்டன. புறத்தார்க்குப் புலனாகாமல், நுகர்வான் ஒருவனுக்கே புலனும் உள்ள உணர்ச்சிகளும் உள. அவைகளை **நுண்ணுணர்ச்சிகள்** எனக் கூறலாம். ஆங்கிலத்தில் அவை **பீலிங்ஸ் (Feelings)** எனப்பட்டன.

### பொதுவியல்பு

மெய்ப்பாட்டின் தன்மையைப் பற்றி மூவேறு கொள்கைகளை உளநூற்புலவர் கொண்டிருக்கின்றனர்:

1. **உடலின் உள் உறுப்புக்களில் உண்டாகும் நிலை வேறுபாட்டால்,** *அல்லது ஒரு வகை நெகிழ்ச்சியால்,* **ஏற்படும் உணர்ச்சிதான் மெய்ப்பாடாகும்** *என்பது ஒரு கொள்கை.*

2. **முன்னர் நுகர்ந்த இன்பங்களையும் துன்பங்களையும் தொடர்புபற்றி மீண்டும் நினைத்தலால் ஏற்படும் உணர்ச்சியே மெய்ப்பாடெனப்படுவது** *என்பது மற்றொரு கொள்கை.*

3. **உணர்ச்சிகளை வெளிப்படப் புலப்படுத்துவதாகிய உறுப்புக்களின் அசைவு முதலிய செய்கைகளே மெய்ப்பாடுகளாம்** *என்பது பிறிதொரு கொள்கை.*

*இம்மூன்று கொள்கைகளையும் விடுத்து, எடுத்துக்காட்டுக்களால் மெய்ப்பாட்டின் தன்மையை ஆராய்வோம் :*

1. **பரந்த தன்மை:** *மெய்ப்பாடு ஒரு குறிப்பிட்ட இனத்திற்கே உரியதன்று;* **எல்லா இனங்கட்கும் உரியது.** *ஓரறிவுபடைத்த உயிர்கள் தொடங்கி ஆறறிவுபடைத்த மக்கள் இறுதியாக உள்ள பல இனங்கட்கும்மெய்ப்பாடு உரித்து. பூனையும் தன் குட்டியைத் துன்புறுத்துவார்பால் சினங்கொள்ளும். குழவியும் தன் விளையாட்டுக் கருவிகளைக் கவர்ந்துகொண்டார்பால் கோபமுறும். 'குணமென்னும் குன்றேறி நின்ரு'ரும் மடமையுள்ள மக்கள்பால் பெருஞ்சீற்றம் கொள்வர். அவ்வாறே அச்சம், உவகை முதலிய பிற மெய்ப்பாடுகளும் எல்லா இனங்கட்கும் உரியன. எனவே, மெய்ப்பாடு பரந்த தன்மையையுடையது என்பது புலனாகின்றது.*

2. **பன்மைச் சார்பு:—ஒரு குறிப்பிட்ட மெய்ப்பாடு பல வகைச் சார்புகளாலும் எழும்.** எடுத்துக்காட்டாக, சினம் அச்சத்தாலும் எழும், பெரு வன்மையுடைமை யாலும் எழும், பொறாமையாலும் எழும், பிற சார்பு களாலும் எழும். ஒரு நாய்க்குப் பல சார்புகளால் கோபம் உண்டாக்கலாம். எலும்பைக் கடித்துத் தின்னும்பொழுது அதற்கு இடையூறு செய்தாலும், அதன் வாலைப்பற்றி இழுத்தாலும், அதன் குட்டி களைத் துன்புறுத்தினாலும், நாய்க்குக் கோபம் உண் டாகும்.

3. **முன்னிலைமைத் தொடர்பு:**—ஒரு குறிப்பிட்ட மெய்ப்பாடு தோன்றுவதற்கும், அதன் வன்மைக்கும் சிறந்த சார்பாகவுள்ளது, **உள்ளத்தின் முன்னிலைமையே** யாகும். விளையாட்டுக் கருவியைக் கவர்ந்துகொண்ட வர்பால் குழவிக்குச் சினம் எழுவது, அக்குழவிக்கு விளையாட்டின்மேல் உள்ள விருப்பத்தாலேயாம். அவ் வாறே, எலும்பின்மேலுள்ள விருப்பத்தால், அதைப் பிடுங்கினவர்பால் நாய் கோபம் கொள்கின்றது. ஒரு தீய விலங்கைக் கண்டு அச்சம் என்னும் மெய்ப்பாட் டினை அடைகின்றவன், உயிரிச்சை என்னும் முன்னிலை மைச் சார்பாகவே அம்மெய்ப்பாட்டினை அடைகின் றான். தான் விரும்பியிருந்த கூட்டுறவு இன்பத்துக்குத் தடையாக இருப்பதால்தான் ஒரு சேங்கன்று மற்றொரு சேங்கன்றிடத்துக் கோபம் என்னும் மெய்ப்பாட்டினை அடைகின்றது.

4. **மெய்ப்பாட்டுப் பின்னிலையல்:**—இஃது ஆங்கி லத்தில் **இமோஷனல் மூட் (Emotional Mood)** என்று கூறப்படும். மெய்ப்பாட்டின் தோற்றத்துக்குரிய

நிலைமை நீங்கின பிறகும், **அம்மெய்ப்பாட்டின் தன்மை, உள்ளத்தின்கண் சில காலம் ஆழ்ந்து நிற்கும்.** இதுவே **மெய்ப்பாட்டுப் பின்னிலையல்** எனப்படும். வீட்டில் மனையாளுடன் சினம் கொண்ட ஆசிரியர், பள்ளியில் மாணவர்கள்மேலும் சினங்காட்டுவதும், தலைவனால் கண்டிக்கப்பட்டு வீடு சென்ற வேலையாள் தன் மனைவி மக்களிடத்தே கோபம் கொள்ளுவதும், சில எடுத்துக் காட்டுக்களாம்.

## மெய்ப்பாடுகளும் உறுப்பசைவுகளும் Emotions and Expressive Movements

நகையாலும் விளையாட்டாலும் ஒரு குழவி இன்பமாயிருத்தலை அறியலாம். வாலாட்டத்தால் நாய் இன்பமாயிருத்தலை அறியலாம். மனிதனுடைய முகத்தாலும் குரலாலும் அவனுடைய மெய்ப்பாட்டின் தன்மையை அறியலாம். புன்னகை, பெருநகை, கைகொட்டல், உரத்துப்பேசல், தேம்பிப் பேசல், அலறல், வீறிட்டுக் கூவல், குதித்துப் பேசல் முதலிய செய்கைகள் மெய்ப்பாட்டின் அறிகுறிகள். சில உளநூற்புலவர்கள் இச்செய்கைகள் யாவும் விலங்குப் பிறப்பிலிருந்து மானிடப் பிறப்பு ஏற்பட்ட காலத்து உடன் தொடர்ந்தவை என்பர். எடுத்துக்காட்டாக, இதழ்களை விரித்துப் பற்களைக் கடித்தல் இன்றளவும் மனிதனுடைய கோபக் குறியாய் இருக்கின்றது. இது, புலி, சிங்கம், நாய் முதலிய விலங்குகளின் கோபக் குறியை ஒத்திருத்தலை நாம் அறிவோம். "வேண்டா," "இல்லை" என விடை கூற விரும்புவான் ஒருவன், தன் தலையை ஒரு புறத்திருந்து மறு புறம் அசைத்தல் குழவிப் பருவத்திருந்து தொடர்ந்து வந்திருக்கின்றது. பேச அறியாத

குழவி தனக்கு வேண்டாத உணவை உட்கொள்ள மறுத்தற்குத் தலையை அசைக்கின்றது. அவ்வழக்கம் ஆண்டு பலவாயினும் நீங்காமல் தொடர்ந்தே நிற்கின்றது. வெறுப்புக் குறிப்பைக் காட்டுவதற்கு நாம் மூக்கால் " ங்ஹூ, ங்ஹூ " என்பது வழக்கம். முதன் முதலில் இச்செய்கை தீய நாற்றம் மூக்குள் புகாமற் காத்தற்கு ஏற்பட்டுப் பிறகு வெறுப்பினை உணர்த்தும் அறிகுறி ஆயிற்று. மனிதனுக்கு வயது ஏறஏற மெய்ப்பாடுகளைப் புறத்தார்க்குப் புலனாகாவண்ணம் அடக்கும் வன்மையும் வளர்கின்றது. சிறப்பாக, கோபம், அச்சம், வெறுப்பு முதலிய தீய பயன் தரும் மெய்ப்பாடுகளை, மனிதன் தன்னலத்திற்காகவே, வெளிப்படுத்தாமல் இருக்கவேண்டிய நிலைமையில் நிற்கின்றான்.

மனிதனுடைய முகக் குறிப்பால், நாம் நற்பயனுடைய மெய்ப்பாடுகளை மிக எளிதில் அறியலாம். துன்பச் சார்பான மெய்ப்பாடுகள் மனிதனுடையஅடக்கும் ஆற்றலை மீறி, அவன் முகக் குறிப்பில் புலனாகின்றன. " **அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்**," என்னும் குறளும், " நெஞ்சம் **இனித்தது** காட்டும் முகம்" என்னாமல் "நெஞ்சம் **கடுத்தது** காட்டும் முகம்," என்றே குறிப்பிட்டமை ஊன்றி உன்னற்பாலது. நம் பழந்தமிழறிஞர் உளநூற் புலமையை எத்துணை பெற்றிருந்தனர் என்பது இதனாற் புலனாகின்றது.

## மெய்ப்பாடும் குரல் மாற்றமும்
## Emotion and Vocal expression

முகக் குறிப்பால் மெய்ப்பாடுகளை அறிவதைவிட, குரற்குறிப்பால் அவற்றை அறிதல் மிகவும் எளிது.

நாடகத்தில் நடிகர்களுடைய மெய்ப்பாடுகளை அவர்களுடைய முகக் குறிப்பால் அறிவதைவிட, குரற் குறிப்பால் எளிதாக அறிகிறோம். பாடுங்குரலால் அறிவதைவிட, பேசுங்குரலால் மிக எளிதாக மெய்ப்பாடுகளை அறியலாம். பாடும்பொழுது இசை விரவியிருத்தலால் நாம் மெய்ப்பாடுகளை எளிதில் பிரித்துப் புலப்படுத்தவும் உணரவும் இயல்வதில்லை. ஆனால், பேசும்பொழுது, கோபத்துடன் வினவல், கோபத்துடன் விடை கூறல், இரக்கத்துடன் மொழிதல், துன்பத்துடன் பேசல், வெறுப்புடன் புகலல், மன வன்மையுடன் முடிவு கூறல், ஏளனமாக மொழிதல், அன்புடன் சொல்லாடல் முதலிய பல வேறு நுணுக்கங்களைக் கொண்ட மெய்ப்பாடுகளை நாம் அறியலாம். ' இல்லை ' என்னும் சொல்லைக் கூறுமிடத்து இன்பத்துடனுதல், அன்புடனுதல், வெறுப்புடனுதல், சீற்றத்துடனுதல், துன்பத்துடனுதல், இரக்கத்துடனுதல் கூறலாம். இவ்வின்பம், அன்பு, வெறுப்பு, சீற்றம், துன்பம், இரக்கம் என்னும் மெய்ப்பாடுகளை நாம் குரலின் உரத்தாலும், நயத்தாலும், இடைப்பட்ட பல குரல் மாற்றங்களாலும் மிக எளிதாக அறியலாம்.

## ஒன்றற்கொன்று தொடர்புள்ள மெய்ப்பாடுகள்
## The Interconnections of the Emotions

இன்பம், வருத்தம், சினம், அச்சம் என்னும் நான்கு மெய்ப்பாடுகளும் ஒன்றற்கொன்று தொடர்புள்ளவை என்பது சில உளநூற் புலவருடைய கொள்கை. இன்பமும் சினமும் ஊக்கத்தை அளிக்கும் மெய்ப்பாடுகள் என்பதும், வருத்தமும் அச்சமும் சோர்வினைத் தரும் மெய்ப்பாடுகள் என்பதும் சிலருடையகொள்கை.

அச்சத்தால் சினம் உண்டாதலும், சினத்தால் அச்சம் உண்டாதலும் உண்டு. உடல் வன்மையுடையவனைப் பகைக்கும் உடல் நலிந்தவன் ஒருவன், முதற்கண் அச்சங்கொண்டு, பிறகு சினங் கொள்வது நாம் அறிந்ததே. "சினம் அளவுக்கு மிஞ்சினுல் என்ன தகாத காரியத்தைச் செய்துவிடுவோமோ!" என்று அச்சங் கொள்ளும் மக்களையும் நாம் அறிவோம். நாய்க்கு அஞ்சும் பூனை, அச்சம் அளவுக்கு மிஞ்சினுல் மிகுந்த சினங் கொண்டு நாயின்மேற் பாய்வதும் நாம் அறிந்ததே.

## மெய்ப்பாட்டைப் பற்றிய ஒரு கொள்கை

மெய்ப்பாட்டைப் பற்றிச் சில உளநூற் புலவர் கொண்டுள்ள கொள்கையை ஓர் எடுத்துக்காட்டைக் கொண்டு ஆராய்வோம். ஒருவன் தனிவழியாகச் செல்லும் பொழுது ஒரு வேங்கையைக் கண்ணுறுகின்றுன். உடனே ஓடி ஒளிந்துகொள்கின்றுன். அவன் ஓடத் தொடங்கின பிறகே அச்சங் கொள்கின்றுன் என்பது சிலருடைய கொள்கை. ஆனுல், உளநூல் வல்லாருள் பெரும்பகுதியாருடைய கொள்கை, அச்சங் கொண்ட பிறகே ஓடுகின்றுன் என்பது; இவ்விரண்டனுள் பின்னர்க் கூறப்பட்டதே நேர்மையான கொள்கையாம். அம்மனிதன் ஓடாவிட்டால், அவன் அஞ்சுகின்றுன் என்பது புலனுகாது; அன்றியும், அவன் அஞ்சாவிட்டால், ஓடவேண்டுவதில்லை; எனவே, ஓட்டமும் அச்சமும் தொடர்புடையவை; எனவே, ஓட்டமே அச்சம், அச்சமே ஓட்டம் என்பர் மேற்குறிப்பிட்ட கொள்கையர். இது தொடர்புள்ள இரு பொருள்களை ஒரு பொருளாக மயங்கும் குற்றமாம். மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டில், வேங்கையைக் கண்டவுடன், அம்மனிதன் தன்

உயிருக்கு நேரும் கெடுதியை உணர்ந்து அச்சம் கொண்டு, மேலும் வாழவேண்டும் என்னும் விருப்பினை உடையவனாதலின், ஓடி ஒளிந்துகொள்கின்றான். **உயிரிச்சை** என்னும் உள்ளத்தின் முன்னிலைமையால், வேங்கையைக் கண்டவுடன் அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்றுகின்றது என்பதுதான் உண்மையான முடிபு.

## ௩

## விலங்குகள்

(மைக்கேல் லார்ட் மாண்டெய்ன் எழுதிய 'ஆப் பீஸ்ட்ஸ்' என்ற கட்டுரையின் சுருக்கம்.)

செருக்கு மாந்தர்க்கு இயற்கையான முதல் நோய். வாழும் உயிர்கள் யாவற்றுள்ளும் நேரில்லாத இழிவும் மெலிவும் உடையவன் மானிடன்; எனினும், இறுமாப்பில் தலையாயவன். படைப்பு அடங்கலிலும், கேடு உடைமையானும் உயிர்ப்பற்ற தன்மை உடைமையானும் நிகரற்றது இந்நிலவுலகம். இதன் புழுதியிலும் ஊழலிலும், இருப்பாணி கொண்டு கடாவப் பட்டவன்போல, கீழ்மையின் வரம்பில் உள்ள விலங்குகளுடன் மானிடன் குடியிருத்தலை அவனே கண்டு உணர்கின்றான். எனினும், கற்பனையில், திங்களின் ஒளி வட்டத்துக்கு அப்பால் தான் இருப்பதாகவும், வானத்தைத் தன் கால்மாட்டில் கொண்டு வருவதாகவும் அவன் எண்ணுகின்றான். அந்தக் கற்பனையுடைமையின் வீண் பெருமையால் அவன் தன்னைக் கடவுளோடு ஒப்பிடுகின்றான்; தனக்கு இறைமைப் பண்புகள் இருப்பதாகக் கொள்கின்றான்; பிற உயிர்க் கூட்டங்களிலிருந்து பிரிந்து நிற்கின்றான்; விலங்கினங்களின் உரிமைகளைக் குறைத்து, அவற்றிற்கு அறிவுகளையும் ஆற்றல்களையும் தான் நினைத்த வண்ணம் பகிர்ந்து அளிக்கின்றான். விலங்குகளின் உள்ளே

மறைந்து இயங்கும் அசைவுகளை அவன் தன் அறிவைக்கொண்டு எவ்வாறு அறிதல் கூடும்? அவன் எவ்வாறு மாந்தர்க்கும் விலங்குகட்கும் ஒப்பு நோக்கி, அவற்றிற்கு மடமையுடைமையை முடிவாகப் பண்பு படுத்துதல் கூடும்?

சனியாட்சியின் பொற்காலத்தைச் சொல்லோவியத்தால் வரைந்து காட்டிய ப்ளேடோ,* அக்காலத்து மானிடன் பெற்றிருந்த சிறந்த வாய்ப்புகளில், அவன் விலங்குகளுடன் உரையாடும் திறனுடன் இருந்தமையை ஒன்ருகக் கருதுகின்ருர்: என்னெனில், அக்காலத்து மானிடன் விலங்குகளை வினவித் தெரிந்து கொண்டவற்ருல், அவற்றின் உண்மைத் தன்மைகளையும், அவற்றிடை உள்ள வேற்றுமைகளையும் அறிந்து, அறிவையும் முன்னறிக்கையோடு இருக்கும் பழக்கத்தையும் நிரம்பிய அளவு பெற்று, இக்காலத்து மாந்தரின் மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடாத்தி வந்தான். நமக்கும் விலங்குகட்கும் இடையில் சொல்லுறவு ஏற்படா வண்ணம் தடை செய்யும் குற்றம் விலங்குகளின்பாலதே போன்று நம்பாலதும் ஆகும் என்று ஏன் கருதுதல் கூடாது? அவற்றை நாம் அறியாதிருத்தல் போல, நம்மை அவை அறியாதிருத்தலும் கூடுமாதலாலும், அக்காரணத்தால் நாம் அவற்றை விலங்குகள் என்று கருதுதல் போல அவை நம்மை விலங்குகள் என்று கருதுதலும் கூடுமாதலாலும் குற்றம் யாவர்பாலது என்பது இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை.

நிற்க, நம்மிடை உள்ளதாய் விலங்குகளிடை இல்லதாய் இருக்குமது யாது? தேனீக்களின் ஆட்சிமுறை

---

* Plato

யினும் ஒழுங்குபட அமைந்த பிறிதொன்று உண்டோ? அவற்றின் தொழில் வகைகள் அவற்றால் நன்கு வகுக்கப்பட்டும், தவறாமல் செய்யப்பட்டும், காக்கப்பட்டும் இருத்தல் போல வேறிடத்து உண்டோ? பகுத்தறிவும் தந்நல அறிவும் இலவாயின், ஈக்களிடை இத்தகைய இனவாழ்க்கை அமைப்பும், தொழில்வகைப் பகுப்பு முறையும் உளவென நாம் கற்பனையில் கோடலும் கூடுமோ?

இளவேனிலொடு வந்து, நம் இல்லங்களில் புகுந்து, தக்க இடம் நாடி, மூலைகள் யாவும் தேடி, ஆயிரத்தில் ஒன்று ஏற்றது கண்டு, தங்கள் கூடுகளை அமைக்கும் குருகினங்கள் வாய்ப்பறியும் திறனும் தேர்ந்தறியும் திறனும் இல்லன எனல் கூடுமோ? பொருந்திய அழகும் வியத்தகு நெய்வும் நிரம்பிய அந்தக் கூடுகளில், அந்தப் பறவைகள், வட்ட வாயில்கள் அமைக்காமல் நேர் நான்மூலை வாயில்கள் அமைத்தலும், உள்முகத்தில் நேர்மூலைகள் நேராவண்ணம் விரிமூலைகள் அமைத்தலும் மூலை வகை முதலியவற்றின் இயல்புகளை நன்கு அறிந்துள்ள முன்னிலையாலன்றோ? அவ்வறிவு இன்றேல், அவ்வாறு கூடமைத்தல் அப்பறவைகளால் கூடுமோ? உலர்ந்த களிமண்ணை நீர்கொண்டு ஈரமாக்கும் அப்பறவைகள் நீரால் களிமண் இளகும் இயல்பை அறிந்தனவே அன்றோ? அவற்றின் மாளிகைகளின் தரையில் அவை பாசி கொண்டும் தூவி கொண்டும் மெல்லிய பாயல்கள் விரித்தல், அவற்றின் பார்ப்புகள் மிக்க நலனுடனும் காவலுடனும் படுத்தற்காம் என்ற முன்னறிவால் அன்றோ? மேலும், அவை மழைக்காற்றால் நேரக்கூடும் ஊறு ஏற்படாவண்ணம் காத்துக்கொள்ளுதலும், கூடுகளைக் கீழ்த்

திசை நோக்கி அமைத்தலும், பலவகைக் காற்றுக்களின் இயல்புகளையும் கீழ்த்திசையால் பெறக்கூடிய நன்மைகளையும் அறிந்திருந்த முன்னிலையாலன்றோ? சிலந்தி அதன் கூட்டினை ஓரிடத்தில் நெருக்கமாகவும் மற்றோரிடத்தில் விசாலமாகவும் அமைப்பது ஏன்? மேலும், அக்கூட்டில் ஓரிடத்தே ஒரு வகை முடியும் மற்றோரிடத்தே வேறொரு வகை முடியும் அமைத்தல், அதனிடத்தே சீர்தூக்கும் மனப்பான்மையும், முன்னறிவும், முடிவு கொள்ளும் திறனும் இருக்கின்றன என்பதைப் புலப்படுத்துகின்றது. இது நிற்க.

பேச்சியல்பு ஓருயிரின்கண் இயற்கையான் அமையாததாயின், வேண்டப்படுவது அன்றாம். ஆயினும், மாந்தர் இன வாழ்க்கைக்கு அப்பால், வெறுந் தனிமையில் வளர்க்கப்படும் குழவியும் அதன் கருத்தைத் தெரிவிக்க யாதானுமொரு பேச்சு முறையைக் கைக்கொள்ளவேண்டும்: பல விலங்கினங்களுக்கு இத் திறனை அளித்த இயற்கை நமக்கு இதனை அளியாது விடும் எனக் கொள்ளுதல் கூடாது. இயற்கை விலங்கினங்கட்கு இத்திறனை அளித்தமை எவ்வாறு பெறப்படும் எனில், அவற்றிடை நாம் காணும் குறை வேண்டுந் தோற்றமும், மகிழ்ச்சி பெறும் காட்சியும், ஒன்றையொன்று உதவிவேண்டி அழைத்துக்கொள்ளும் காட்சியும், காமம் விரும்பிச் சிறு ஒலியுடன் ஒன்றோடொன்று பழகும் காட்சியும் அவற்றிடை நிகழும் ஒரு வகைப் பேச்சுத்திறனின் தோற்றங்களேயாமாகலான் என்க. அவை ஒன்றோடொன்று ஏன் பேசிக் கொள்ளுதல் கூடாது? அவையும் நாமும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளுதல் உண்டன்றோ? நம் நாய்களுடன் நாம் எத்தனைவகைக் குரல்களிற் பேசுகிறோம்!

அவ்விலங்குகளும் அக்குரல் தரங்களை அறிந்து நமக்கு விடை தருகின்றன. ஒரு வகை உயிரினராய மாந்தர் இருந்து வாழும் பல நாடுகளில் பல மொழிகளைப் பேசுதல் போல, ஒரேவகை விலங்கினம் இருந்து வாழும் பல நாடுகளில் பல பேச்சு முறைகளைக் கொண்டிருத்தல் புலனாகின்றது. இதனை மெய்ப்பிக்க **அரிஸ்டாட்டில்,** ஒரு **பார்ட்ரிஜ்** என்னும் பறவை வகை பல இடங்களில் பலவாறு கூவுவதைக் காட்டாக எடுத்துக் கூறியிருக்கின்றார்.

**கிரிஸிப்பஸ்** என்பார், மற்ற மெய்யறிவாளர் போல, பிற விலங்குகளின் தன்மைகளை வெறுப்பொடு கருதும் இயல்பினராயினும், தலைவனையேனும் உணவையேனும் தேடி முக்கூட்டு வழி முதலில் வந்துற்ற ஒரு நாய், முதற்கண் ஒரு கிளை வழி மோந்து சென்று, தேடு பொருள் காணப்பெறாமல், பிறகு மற்றொரு கிளைவழி மோந்து சென்று, அப்பொருள் அவ்வழியும் காணப் பெறாமல், இறுதியாக மூன்றாம் கிளைவழியில் மோவாமல் செல்லும் துணிவைக் கண்டு அந்நாயின் அகத்தே கீழ்க்குறித்தபடி ஓர் அறிவு நிகழ்ச்சி ஏற்படுகின்றது என்று உடன்படுகின்றார். "யான் என் தலைவன் காலடி தொடர்ந்து இவ்விடம் வந்தேன்; அவன் இம் மூன்று வழிகளில் யாதானும் ஒன்றில் நடந்து போயிருத்தல் வேண்டும்; இவ்வழியாக அவன் போகவில்லை; மற்றிவ்வழியாகவும் அவன் சென்றவனல்லன்; எனவே, இம்மூன்றாம் வழியிற்றான் அவன் தவறாமல் சென்றிருத்தல் வேண்டும்," என்று இவ்வாறு பகுத்தறிந்து, அந்நாய் மூன்றாம் வழியாகச் செல்லுங்கால் மூக்கைத் தரைமீது வைத்து மோவாமலே, பகுத்தறிவின் துணிபால் உந்தப்பட்டே செல்கின்றது. இதனால்,

கருத்துக்களைப் பிரித்து நோக்குதலும், பிரித்தவற்றைப் பொருத்தி நோக்குதலும், இவ்விரண்டு முறையாலும் ஒரு கருத்தைத் துணிந்து கோடலும் ஆய அளவை முறைகளை எல்லாம் இந்நாய் ஓர் அளவை நூற்புலவன் பால் அடுத்துக் கற்றதுபோலக் காண்கின்றதன்றோ ?

இந்நாயின் செயலொடு ஒருங்கு வைத்தெண்ணத் தக்க அறிவுச் செயல் ஒன்று கட்புலனற்றவர்க்கு வழித் துணை செல்லும் நாய்கள்பால் விளங்குதலை நான் கண்டு வியத்தலுண்டு. அத்தகைய நாய் ஐயம் தருவோர் இல்லத் தலைவாயிலிடத்தே நிற்கும் செயலும், தெருவைக் கடந்து செல்ல அதன் அளவுக்கு இடம் இருப்பினும், வண்டிகள் செல்வழியில் தலைவனைக் குறுக்கே செலுத்தாமல் சுற்றி அழைத்துச் செல்லும் செயலும், கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ள பகுதியில், அக்கால்வாய்களால் தலைவனுக்கு இடர் நேரா வண்ணம், மென்மையான பாதை அடியோடு இருப்பினும் கரடுள்ள தரைமேல் கடினத்துடன் செல்லும் செயலும் நான் உற்று நோக்கினவேயாம். அதன் கடன் தலைவனது காவலையே கருதுதல் எனவும், அதனது சிற்சிறு நலன்களைக் கருதுவதன்று எனவும் அதனுக்கு மானிடன் எவ்வாறு தெரிவித்திருத்தல் கூடும்? அது செல்லுதற்கு ஏற்றவளவு அகன்றுள்ள இடம் அதன் தலைவன் செல்லுதற்கு ஏற்றவளவு அகன்றதன்று என அந்நாய் எவ்வாறு அறிகின்றது? பகுத்தறிவு இன்றேல் இவை யாவும் கூடுமோ ?

நமக்கு வியப்பானவற்றையும், நம் அறிவுக்கு உட்படாதவற்றையும் நாம் தகாதன எனத் தள்ளுகிறோம். இப்பழக்கமே, விலங்குகளைப்பற்றி நாம் கொள்ளும்

கருத்துக்களிலும் தலையிடுகின்றது. நம்மிடைக் காணப் படும் நிலைமைகள் போன்றவை அவற்றிடைக் காணப் படுகின்றன ; அதனுல் நாம் அவைபற்றிய சில கருத்துக் களை நுணுகி அறிகின்ருேம். ஆயின், அவற்றுக்கே சிறப்பாக உள்ள சில தன்மைகளை நாம் கண்டு கருது வது யாதென்பது புலப்படவில்லை.

௩

## ஊர்ச் செலவு

*[பிரான்ஸிஸ் பேக்கன் எழுதிய "ஆப் ட்ராவெல்" என்னும் கட்டுரையின் சுருங்கிய தமிழ் அமைப்பு]*

ஊர்ச்செலவு இளைஞர்க்குக் கல்வியாம்; முதிய வர்க்கு மூதறிவாம். ஒரு நாட்டிற்குள், அதன் மொழி யில் ஒரு சிறிதும் பயிற்சி இன்றி நுழைவோன், பள் ளிக்குச் செல்வோனேயன்றி, ஊர்ச்செலவு செல்வோன் அல்லன். இளைஞர்கள் தக்க குரவர்களோடாயினும் பெருந்தன்மை பொருந்திய கையாட்களோடாயினும் ஊர்ச்செலவு செல்லுதல் எமக்கு மிகவும் உடன்பாடு; ஆயின், அவ்வாறு துணை செல்வோன், செல்லும் நாட் டின் மொழியில் பயிற்சி பெற்றவனாகவும், அந்நாட்டில் பழகினவனாகவும் இருத்தல்வேண்டும். அத்தகையவனே ஊர்ச்செலவு செல்வோர்க்கு அவர்கள் செல்லும் நாட் டில் காண்டற்குரிய சிறந்த பொருள்களையும், நட்டற் குரிய தக்கோரையும், மேற்கொள்ள வேண்டிய அந் நாட்டுச் சீலங்களையும் ஒழுக்கங்களையும் தெரிவிக்கத் தக்கவன்: அவன் துணையின்றேல் ஊர்ச்செலவு செல் லும் இளைஞர் திரை நீக்கிப் புறங்காணாது முகமூடி அணிந்து செல்வோரை ஒப்பர்.

வானமும் கடலும் தவிர்த்து வேறியாதும் காண்டற்கில்லாக் கடற்செலவில், மாந்தர் நாட் குறிப்பு எழுதி வைத்தல் விந்தை; அவ்வாறன்றிக் காண் டற்குத் தக்கனவாகப் பற்பல நேரும் தரைச்செலவில்

நாட்குறிப்பு எழுதாமலும் ஒழிகின்றனர். வலிந்து கண்டன பற்றி வரைந்து வையாது தற்செயலாக நேர்ந்த சிற்சில பற்றிக் குறித்து வைத்தல் பொருத்த முடையது போலும்! அன்றுதலின் தரைச்செலவு செல் வோர் இனியேனும் நாட் குறிப்பு எழுதக்கடவர். காட்சிக்கும் நாட்டத்திற்கும் தக்க பொருள்கள், தூதர்க் குக் காட்சி அளிக்கும் மன்னர்தம் மன்றங்கள், வழக் காராயும் வழக்கறிமன்றங்கள், கோயிற்குரவர் தம்முள் முறை வழங்கும் மன்றங்கள், கோயில்கள், கோயிற் குரவர் மாடங்கள், அம்மாடங்களிற் காணப்படும் சிலை கள், சிறியனவும் பெரியனவுமான பட்டணங்களின் மதில்கள், அவற்றின் காவற்சுவர்கள், இயற்கை யானும் செயற்கையானும் அமைந்த துறைமுகங்கள் பழமையின் குறிகள், பாழ்கள், சுவடித்திரள் மனைகள் (Libraries), கல்லூரிகள், சொற்போர்கள், சொற் பொழிவுகள், வாணிப நாவாய்கள், போர் நாவாய்கள், பெரிய பட்டணங்களை அடுத்துள்ள இன்பச்சோலைகள், மகிழ்ச்சி மாளிகைகள், படைக்கலத் திரள் மனைகள், படைக்கலத் தொழிலகங்கள், வெடி மருந்துச் சாலைகள், பணமாற்று நிலையங்கள், கருவூலங்கள், உடை மனைகள், பரிப் பயிற்சிக் கூடங்கள், வாட் பயிற்சிக்கூடங்கள், போர் வீரர் பயிற்சிக் கூடங்கள், தக்கோர் சென்று காண்டற்குரிய நாடக மேடைகள், ஆடை அணிகல ஈட்டக் கூடங்கள், மரப்பொருள்கள், அரும்பொருள்கள் முதலியனவும், சென்று காணும் நாட்டை நினைவில் இருத்துதற்கேற்ற பிறவுமாம் இவற்றைப்பற்றிய உண்மைகள் யாவற்றையும துணை செல்வோன் நன்கு கேட்டறிதல் வேண்டும். வெற்றி விழாக்கள், முகமூடி விழாக்கள், விருந்துகள், திருமண

விழாக்கள், இறுதிக்கடன் காட்சிகள், தலை துணிக்கும் ஒறுத்தற்காட்சிகள் முதலியன காண்டலும் தள்ளாமற் கொள்ளப்பட வேண்டும்.

ஓர் இளைஞன் அவனுடைய ஊர்ச்செலவைச் சுருக்கமாகவும் குறைந்த காலத்திலும் மிக்க பயனோடு முடிக்கக் கருதினல், பின் வருவனவற்றைச் செய்யற்பாலன் : சுற்ற விரும்பும் நாடுகளின் மொழிகளை முதலில் சிறிதளவேனும் கற்றல் வேண்டும்; முன்னர்க் கூறியாங்கு ஏற்ற துணைவனைத் தேடிக் கோடல் வேண்டும்; தான் சென்று காணும் நாட்டின் வழி, வாய்க்கால், வரம்பு முதலியன விளக்கப்பட்டுள்ள ஏடேனும் சுவடியேனும் கைக்கொள்ள வேண்டும்; நாட்குறிப்புச் சுவடியும் பெற்றிருத்தல் வேண்டும்; வேண்டிய காலத்துக்குமேல் ஓரிடத்தில் தங்குதல் கூடாது; ஒரு பட்டணத்தில் தங்குங்கால் அதன் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்துக்குப் பெயர்ந்து, அவ்வாற்றான் பல தக்கார்களுடைய அறிமுகத்தைப் பெறுதல் வேண்டும்; அந்நாட்டார்தம் நட்பும் நல்லுணவும் உளவாகுங்கால் ஆங்குள்ள தன் நாட்டவரோடு சேர்தலைத் தவிர்தல் வேண்டும்; ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் செல்லுங்கால் ஆங்குத் தனக்கு வேண்டிய சிறு நலன்கள் யாவற்றையும் பெறுதற்கு வழியாக ஆங்குள்ள தக்கார்க்குத் தன் ஊரிலுள்ள தக்காரிடமிருந்து அறிமுகக் கடிதங்கள் கொண்டுபோதல் வேண்டும்.

ஊர்ச்செலவு செல்லுங்கால் ஒருவன் பயனுடைய அறிமுகம் பெறவேண்டின், தூதர்தம் வினையாளரோடும் கணக்கர்களோடும் அறிமுகம் கொள்ளவேண்டும்; அவ்வாற்றால் பலருடைய மூதறிவை ஒருவன் பெறுகின்

ருன். பற்பல வகைகளிற்சிறந்து பெயர் பரவவிளங்கும், பற்பல பெரியோர்களேயும் ஊர்ச்செலவு செல்வோன் சென்று கண்டு, அவர்களோடு நன்கு பழகவேண்டும்; அவ்வாற்ருல் புகழப்படுவோர்தம் வாழ்க்கைத் தன்மை நன்கு அறியப்படும்.வம்பிடும் பான்மையரோடும் அவன் நன்குபழகி, அவர்தம் வம்பில் கலவாமல் நின்று,நட்பின் நற்பயன் ஒன்றையே பெறும் வழியில் தேர்தல் வேண்டும்.

ஊர்ச்செலவு முடிந்து தாய்நாடு சென்று சேர்ந்த பிறகும் ஒருவன் அவனுடைய அறிமுகத்தாருள் சிறந்த வரோடு முடங்கல் மாற்றிக்கொள்ளுதல் வேண்டும்; ஊர்ச்செலவின் பயனுகத் தாய்நாட்டு நடையுடை முதலிய பழக்க வழக்கங்களேக் கைவிட்டுப் பிறநாட்ட வைகளே மேற்கொள்ளுதல் கூடாது. பிறரோடு உரை யாடுங்கால் அவன் ஊர்ச்செலவு சென்று அறிவு பெருகி மீண்டமை ஒன்று புலப்படுதலே சாலும். அன்றியும், அவன் கண்ட நாடுகளேப்பற்றிய வெறுங்கதைகளேக் கூறிப் பரவ விடுதல் தவறு; அதனினும் அவைபற்றிய மாற்றம் எழுங்கால் சொற்காப்புடன் இருத்தல் நனி நன்ரும். அங்ஙனமே பிற நாட்டுச் சீலங்களே முழுதும் மேற்கொள்ளுதலின் அவற்றுள் நனி சிறந்தன சில வற்றைத் தாய்நாட்டுச் சீலத்துடன் கலந்துகோடல் ஏற்புடைத்தாம்.

5

# 'சொல்' சொன்ன சொல்

[ஒரு கட்டுரை எழுதப் புகுந்தேன். இடையில் ஓர் ஐயம் உண்டாயிற்று : இரண்டு சொற்களில் எஃது ஏற்புடைத்து என்பது எளிதில் புலப்படவில்லை. நெடுநேரம் ஓர்ந்து பார்த்தேன். பார்த்தபடியே சொல்லுலகத்துள் நுழைந்தேன். சொற்கள் வந்து என்னைச் சூழ்ந்தன. அவற்றுள் ஒன்று எனக்குக் கூறிய மாற்றத்தை ஈண்டுப் பொறிக்கின்றேன். வேண்டுவார் விரும்பிப் படித்துப் பயன் பெறுக—முற்குறிப்பு.]

நான் ஒரு சொல்; என் உற்றார் உறவினர் யாவரும் சொற்கள். நாங்கள் எல்லோரும் சொல்லினத்தைச் சேர்ந்தவர்கள். சொல்லினத்தார் அனைவரும் நுண்மை உடையவர்கள்.

எங்கள் இனத்தில் கட்டுப்பாடு மிகுதி. ஒரு சொல் இருக்கவேண்டிய இடத்தில் வேறொரு சொல் இருக்கக் கூடாது. ஒரு சொல் வரவேண்டிய காலத்தில் மற்றொரு சொல் வரக்கூடாது. அப்படி இருந்தாலும், வந்தாலும் முட்டுப்பாடே மிகும். எங்களுக்கென உரிமைகளும் கடமைகளும் உள. உரிமைகளைக் கொண்டாடுவதிலும் கடமைகளை நிறைவேற்றுவதிலும் எங்களுக்கு முனைப்பு மிகுதி.

எங்கள் நுண்மையை அறிந்து, எங்கள் கடமைகளையும் உரிமைகளையும் உணர்ந்து, எங்களைப் போற்றினால், நாங்கள் தகுதியுடன் விளங்கி இருப்போம்;

இன்றேல், நிலை வேறுபடுவோம். நாங்கள் இயற்கையில் அழகுள்ளவர்கள்: ஆனால், எங்களை இடம் தப்பியும், காலம் தப்பியும் பொருத்தினால், எங்கள் அழகு குற்றப்படும். எங்களுள் ஒருவரை மற்றொருவராக மயங்குதல் மாந்தர்க்கு இயல்பு. அப்படி மயங்காமல் எங்களைத் தேர்ந்தெடுத்து வைத்தால், நாங்கள் அழகு மிகுந்து விளங்குவோம்; இன்றேல், எங்கள் அழகை மறைத்துக்கொண்டு மாந்தரை மயங்க வைப்போம். காலத்தாலும் இடத்தாலும் பொருந்துமாறு எங்களில் ஒருவரை ஒரு கற்றவர் தெரிந்தெடுக்க முனைந்தால், அவர் நினைவுமுனையில் எங்களுள் ஒருமுகப்பட்ட பலர் விரைந்து வந்து சூழ்ந்து அவரை மயக்க முயல்வார்கள்: அஃது எங்கள் இயல்பு. எங்கள் முயற்சியால் மயக்குறாமல் எங்களில் ஏற்ற ஒரு சொல்லை அந்தக் கற்றவர் தேர்ந்தெடுத்து வைத்தால் அந்தச் சொல் அழகு பெருகி விளங்கும். அன்றியும், அச்சொல் தக்க துணைவர்களோடு பொருத்தப்பட்டால், மேலும் அழகு மிளிரும்.

எம்மவரில் வீரர்களும் உளர், கோழைகளும் உளர்; வன்மையாளரும் உளர், மென்மையாளரும் உளர்; காதலரும் உளர், துறவியரும் உளர். எமருடன் நன்கு கலந்து பழகினாலொழிய எம்முள் இன்னவர் வீரர் இன்னவர் கோழையர் என்றுதல், இன்னவர் வலியவர் இன்னவர் மெலியவர் என்றுதல், இன்னவர் காதலர் இன்னவர் துறவியர் என்றுதல் ஒருவருக்கு எளிதில் புலப்படாது. வீரச்சொற்கள் அமைக்கப்படவேண்டிய இடங்களில் கோழைச் சொற்கள் பொருந்தா; அவ்வாறே வலிய சொற்கள் இருக்கவேண்டிய இடங்களில் மெலிய சொற்கள் பொருந்தா: ஆதலின், எம்மவர் தம்

தன்மைகளைத் தெரிந்து போற்றுதல் கற்றவர்க்குக் கடனும்.

எங்களுள் ஒவ்வொருவர்க்கும் இயற்கையாகவே ஒரு நுண்ணிய ஆற்றல் உண்டு. ஆனால், அவ்வாற்றல் பலதரப்பட்டது. காலமும் இடமும் அறிந்து, முறையும் பொருளும் தெரிந்து எங்களை ஏவினால், நாங்கள் ஏவுவார் விரும்பும் ஆக்கமும் கேடும் விளைவிப்போம். ஊழித்தீப் போல விரைந்து மாந்தர் உள்ளத்தே பரவி, அவரிடை உணர்ச்சித் தீயினை மூட்டுதல் எங்களால் கூடும். ஊழிக்காற்றினும் கடிது பரவி மாந்தர் மன அமைதியைக் கலக்குதலும் எங்களால் ஆகும். இதனாற்றான் கைதேர்ந்த எழுத்தாளர்களும் நாத்தேர்ந்த சொல்லாளர்களும் எங்களைப் போற்றி வளர்க்கின்றார்கள்.

அறிவியல் உலகமே எங்களாற்றான் நிலைபெற்று நிற்கின்றது. ஏன்! படைப்பின் முதலே நாங்கள்தாம். (In the beginning was the word; the word was with God, and the word was God) "முதலில் சொல்லே இருந்தது; அது கடவுளோடு இருந்தது; அதுவே கடவுளாய் இருந்தது," என்னும் பெரியோர் மொழியினை நினைத்துப் பாருங்கள்! எங்கள் பழமையான பெருமை என்றும் அழியாதது. அதனுடன் காலப்போக்கில் எங்களுக்குப் புதுப்புதுப் பெருமைகளும் உண்டாகின்றன.

[பிற்குறிப்பு—சொல்லுலகத்திருந்து மீண்டேன்; கருத்துலகத்துள் நுழைந்தேன். தமிழ்வள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய சில குறள் வெண்பாக்கள் நினைவுக்கு வந்தன.]

'ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.'

எனவும்,

'திறன் அறிந்து சொல்லுக சொல்லை ; அறனும்
பொருளும் அதனி னூஉங்கு இல்லை.'

எனவும்,

'சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.'

எனவும் அவர் கூறியுள்ள பாக்கள் மிகவும் உன்னுதற் குரியன அல்லவா ? ஒரு சொல்லின் உரிய பொருளைத் தெரிந்து அச்சொல்லை ஆளுதலே மொழிப் புலவரின் வழி. என்னை ?

'குன்றக் கூறல், மிகைபடக் கூறல்,
கூறியது கூறல், மாறுகொளக் கூறல்,
வழூஉச்சொல் புணர்த்தல், மயங்க வைத்தல்,
வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல்,
சென்றுதேய்ந் திறுதல், நின்றுபய னின்மை
என்றிவை ஈரைங் குற்றம் நூற்கே.'

என்ற **நன்னூல்** பொதுப் பாயிரச் செய்யுளில் பவணந்தி யார் சொல்லாட்சிக் குற்றங்களாக, **வழூஉச்சொல் புணர்த்தல், வெற்றெனத் தொடுத்தல், நின்று பயனின்மை** என்னும் மூன்றையும் குறித்தமையானும்,

'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்,
நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல்,
ஓசை யுடைமை, ஆழமுடைத் தாதல்,
முறையின் வைப்பே, உலக மலையாமை,
விழுமியது பயத்தல், விளங்குதா ரணத்தது
ஆகுதல் நூலிற் கழகெனும் பத்தே.'

என்னும் அந்நூல் பாயிரச் செய்யுள் பிறிதொன்றில் அவர் சொல்லாட்சி அழகுகளாக **நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல்** என்ற மூன்றையும் குறித்தமையானும், முப்பத்திரண்டு உத்திகளில் **தொடர்ச் சொற் புணர்த்தல்** என்ற ஒன்றையும் அவர் குறித்தமை யானும் மொழிப்புலவர்கள் சொல்லாட்சித் திறனைப் பெரிதும் போற்றி வந்தனர் என்பது புலனாகின்றது. இது நிற்க.

**மதுரைக் கண்ணங்கூத்தனார்** இயற்றிய **கார் நாற்பது** என்னும் நூலில்,

**'முல்லைக் கொடிமகிழ, மொய்குழலார் உண்மகிழ**
**மெல்லப் புனல்பொழியும் மின்னெழில்கார்-தொல்லை நூல்**
**வல்லார் உளமகிழத் தீந்தமிழை வார்க்குமே**
**சொல்லாய்ந்த கூத்தர்கார் சூழ்ந்து.'**

என்னும்சிறப்புப்பாயிரச் செய்யுளில்நூலாக்கியோரான கூத்தர், **சொல்லாய்ந்த கூத்தர்** என்று பாராட்டப்பட்டமையின், முன்னாள் தமிழ்ப் புலவர் சொற்பயிற்சியில் மிகுந்த கருத்துடையராய் இருந்தனர் என்பது மேலும் தெளிவாகின்றது. அன்றியும், திருக்குறளின் சிறப்புப் பாயிரமாகக் கருதப்படும் திருவள்ளுவ மாலையில்,

**'தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்**
**பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்**
**குயலில்லை ; சொற்சுவை ஓர்வில்லை ; மற்றும்**
**செயலில்லை என்னும் திரு.'**

என்னும் **உறையூர் முதுகூற்றனார்** செய்யுளால் 'சொற் சுவைஓர்வினைத்தாராதநூல் பெருமைக்குரியநூலாகாது' என்பது பெறப்படுதலின், சொல்லாட்சித் திறன் மொழிப் புலமைக்கு இன்றியமையாது வேண்டப்படுவ தொன்று என்னும் உண்மை நிலை நாட்டப்படுகின்றது.

சா

# ‘அறஞ்செய விரும்பு.’

தமிழ்க் கிழவியாரான அவ்வைப் பெருமாட்டியார் திருவாய் மலர்ந்தருளிய **‘அறஞ்செய விரும்பு’**, என்னும் அறக்கருத்தின் நுணுக்கங்களை ஆராய்ந்து அறிதலே இக்கட்டுரையின் நோக்கம்.

‘அறம்’ என்பது நல்வினை. மாந்தர் யாவரும் நல்வினை செய்ய விரும்புதல் வேண்டும் என்பது அவ்வையாரின் கட்டளை. இதனை நம் **தமிழ் வள்ளுவரும்** தம் திருக்குறளில் வலியுறுத்திக் கூறியுள்ளார். அக்குறள்,

> **‘செயற்பால தோரு மறனே; ஒருவற்**
> **குயற்பால தோரும் பழி.’**

என்பது. ஈண்டுச் **‘செயற்பாலது ஓரும் அறனே’** என்றது **‘அறஞ்செய விரும்பு’** என்றதனோடு ஒக்கும். உரையாசிரியர் பரிமேலழகரும் இக்குறளில் **அறன்** என்னும் சொல்லுக்கு ‘நல்வினை’ என்றே பொருள் கொண்டார்.

**‘அறஞ்செய விரும்பு’** என்பது, நல்வினை செய்ய விரும்பு என்னும் பொருட்டு. **அறஞ்செய்** என்றுதல், **அறஞ்செய்க** என்றுதல் கூறுமல், **‘அறஞ்செய விரும்பு’** என்று அவ்வையார் கூறியதன் கருத்து ஓர்ந்து உணரப்பட வேண்டும். ‘ஆறுவது சினம்’ எனவும், ‘இயல்வது கரவேல்’ எனவும், ‘ஈவது விலக்கேல்’ எனவும், இன்ன பிறவும் செயலிடத்துத் துணிவு பிறக்கக் கூறிய அவ்வையார், முதற்றொடரில் செயலிடத்துத் துணிவு பிறக்கக் கூறுமல் நினைவிடத்துத் துணிவு பிறக்கக் கூறியதன் கருத்து ஆய்ந்தறியப்படுதல் வேண்டும். செயல் துணி

பாகக் கூற விரும்பியிருப்பின் அம்முதல் தொடர் **அறஞ்செய், அறஞ்செய்க** என்னுந்தொடர்களில் ஒன்ருய் அமைந்திருத்தல்வேண்டும். அவ்வாறுஅமையாமையின், அவ்வையாரின் கருத்து அவ்வாறு கூறுதல் கூடாது என்பதாதல் வேண்டும். என்னை? விருப்பம் கொள்ளினும், முயற்சி செய்யினும், ஓரொருகால் அறம் செய்ய இயலாது போதலும் உண்டு. அக்கால் அறஞ் செயல் நிகழாதேனும், அறஞ்செய்தற்கண் விருப்பம் ஒன்று இருத்தலே சாலும் என்பது அவ்வையாரின் கருத்து. இக்கருத்தை ஒன்றியே பொதுப்பட அவ்வை யார் '**அறஞ்செய விரும்பு**' என்று அருளிப் போந்தார்.

ஒருவன் ஒரு நல்வினை செய்தற்குப் பெருவிருப் புடையனுய் முயற்சி தளராமல் முற்படுகின்ருனெனி னும்,

> **'பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்**
> **இருடீர வெண்ணிச் செயல்.'**

என்னும் குறளில் கூறியபடியே **பொருள், கருவி, காலம், வினை, இடம்** என்பன கருதிச் செய்யாமை யானும்.

> **'எண்ணிய வெண்ணியாங் கெய்துப எண்ணியார்**
> **திண்ணிய ராகப் பெறின்.'**

என்னும் குறளில் கூறியபடி, எண்ணிய நல்வினையை எளிதில் எய்த வேண்டப்படும் திண்மை இன்மை யானும், வாய்ப்பு இன்மையானும், பிறவற்ருனும் அந் நல்வினையைச் செய்யமாட்டாமல் நிற்பது கண்கூடு. அவ்வொருவன் முயன்று மேற்கொண்ட நல்வினையைச் செய்திலனுயினும், அது செய்ய விருப்பம் கொண்ட மையே அதை அவன் செய்ததனோடு ஒக்கும் என்பது அவ்வையாரின் உட்கருத்து.

அறநூல் ஆராய்ச்சி செய்த மேனுட்டு அறிஞர்களும் இக்கருத்தை மேற்கொண்டிருந்தனர். எடுத்துக்காட்டாகக் **காண்ட்** (Emmanual Kant) என்னும் ஜெர்மனி நாட்டு அறிஞர் இயற்றிய 'Fundamental Principles of the Metaphysic of Morals' ('அற நூல் மெய்ப் பொருளின் அடிப்படையான கொள்கைகள்') என்னும் நூலில் கண்ட இயைபுடைய வரிகள் சில வற்றை ஈண்டுக் குறிப்போம் :

"A good will is good, not because of what it performs or effects, not by its aptness for the attainment of some proposed end, but simply by virtue of the Volition, that is, it is good in itself, and considered by itself is to be esteemed much higher than all that can be brought about by it in favour of any inclination, nay, even of the sum total of all inclinations·

"Even if it should happen, that, owing to special disfavour of fortune, or the niggardly provision of a step-motherly nature, this will should wholly lack power to accomplish its purpose, if with its greatest efforts it should yet achieve nothing, and there should remain only the good will (not, to be sure, a mere wish, but the summoning of all means in our power), then, like a jewel, it would still shine by its own light, as a thing which has its whole value in itself·"

"ஒரு நல்வினையைச் செய்து முடிப்பதனாலும், அதனைச் செய்தற்கு ஏற்ற தகுதி உடைமையினாலும் ஓர் எண்ணம் நல்லெண்ணம் என்று கருதப்பட மாட்டாது;

அது தன்னுள் நல்லதாக இருத்தல் வேண்டும்; வாய்ப்பு இன்மையாலும், யாதானுமொரு முன்னிலையாலும் ஒரு நல்லெண்ணம் ஒரு நல்வினையைச் செய்யாது ஒழிந்தாலும், அதனைச் செய்ய ஆற்றலில்லாது நின்றாலும், அது தன்னுள் நல்லதாய் இருக்கும் ஓரே தன்மையால், ஒரு மணி போன்று, ஒளி விட்டு விளங்கும்," என்பது **காண்ட்** என்பாரின் கருத்து. நிற்க, '**அறஞ்செய விரும்பு,**' என்றதனால், '**மறஞ்செய விரும்பற்க,**' என்றும் கூறியவாறும். இதனால், மறஞ் செய்யாமை ஒன்றே சாலாது என்பதும், மறஞ்செய்ய விரும்பாமையே நனி வேண்டப்படும் என்பதும் அறியக் கிடக்கின்றன. மாந்தர் யாவரும் **மறம்** (தீவினை) செய்ய விருமபுதல் **கூடாது** என்பது அவ்வையாரின் ஆணை. என்னை? மறஞ்செய்தலினும், அது செய்ய விரும்புதல் துவரத் தீதுடைத்து. ஒரொருகால் மறஞ் செய்தல் இன்றியமையாது வேண்டப்படுகின்றது ஆகலின், '**மறஞ் செய்யற்க,**' என்பது பொருந்தாது. ஒறுத்து நல்வழிப்படுத்துதல் கருதி ஆட்சி முறையிலும், போர் முறையிலும், வழக்கு முறையிலும் மறஞ் செய்தல் நிகழ்வது யாம் அறிந்ததே. ஆயின், ஆண்டு மறஞ் செய்தன்மேல் விருப்பம் இன்று.

> **"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
> **மறத்திற்கு மஃதே துணை."**

என்ற குறளின்படி, நல்வழிப்படுத்தும் அன்பான விருப்பமே ஆண்டு மறஞ்செய்தற்கு முன்னிலையாம். ஆகலான், '**மறஞ்செய்யற்க,**' என்னும் அறமொழியினும் '**மறஞ்செய விரும்பற்க,**' என்னும் அறமொழியே நனி ஏற்புடைத்து. அம்மொழியை எதிர்மறை வாயிலாகப் பெறுமாறு, '**அறஞ்செயற்க**' என்னுமல், '**அறஞ்செய விரும்பு,**' என்று அமைத்தது அவ்வைப் பெருமாட்டியாரின் ஆழ்ந்த புலமையைக் குறிக்கின்றது.

# உழவு

*[ஏப்ரஹ்ஆம் கௌலி எழுதிய ‘ஆஃப் அக்ரிகல்சர்’ என்னும் கட்டுரையின் சுருங்கிய மொழிபெயர்ப்பு.]*

**விர்ஜில்** கொண்ட முதல் விருப்பம், நல்ல மெய்யறிவாளனாய் இருத்தல் வேண்டும் என்பது; இரண்டாம் விருப்பம், நல்ல உழுதுண்ணும் உழவனாய் இருத்தல் வேண்டும் என்பது; கடவுள் **சாலமன்** என்பானுக்கும் அருளினார்; அவன் முதலில் மெய்யறிவை விரும்பியதனால் அதன் பின் விரும்பத்தக்க யாவற்றையும் கூட்டி அருளினார்; சிறந்த மெய்யறிவாளர்களுள் ஒருவனாகவும், சிறந்த உழுதுண்ணும் உழவனாகவும், இவ்விரண்டு ஆற்றல்களையும் சேர்க்கும் பொருட்டும் இவற்றிற்கு மேலும் அழகு செய்தற் பொருட்டும் சிறந்த பாவலனாகவும் அவனை ஆக்கினார்; இவற்றுக்கும் மேம்பட்ட சிறப்பாக அவனைச் செல்வனாகவும், மேற்கொண்ட செல்வம் விரும்பாதவனாகவும் செய்தார். உழவனாக இருத்தற்கு ஒருவன் பட்டண வாழ்க்கையிலிருந்து ஒடுங்கவேண்டும். மெய்யறிவாளனாக இருத்தற்கு ஒருவன் உலக வாழ்க்கையிலிருந்து ஒடுங்கவேண்டும்; அல்லது மானிட-உலக வாழ்விலிருந்து கடவுள் - உலக வாழ்க்கையுள் ஒடுங்க வேண்டும். உலகத்துள்ள தொழில்கள், திறன்கள், கலைகள் யாவற்றுள்ளும் தொழிலும் திறனும் கலையுமான அறிவுக் கோட்பாட்டின் பகுதி மிகுதியாக உண்டு. அஃதறிந்தே **ஸிஸரோ**, ‘உழவனின் இன்பங்கள் மெய்யறிவாளனின் இன்பங்களோடு பெரும்பாலும் ஒருங்கு

வைத்து எண்ணத்தக்கன,' எனக் கூறியிருக்கின்றனர். சொலல் வலனுடைய ஒரு சொற்பொழிவாளனால் புகழ்ந்துரைக்கப்படுதற்குப் பற்பல வகைகளில் வாய்ப்புத் தரும் வாழ்க்கை முறை, உழவின் வேறன்று. அஃது உழவனுக்குப் பயன் தருமாறும், மாந்தர் யாவராலும் வேண்டப்படுமாறும், அதன் கள்ளமற்ற தன்மையும், அதனால் நேரும் இன்பமும், அதன் பழைமையும், அதன் பெருமையும் என இத்தொடக்கத்தனவான பல வகைகளால் உழவு புகழ்ந்து பேசப்படுதற்கு உரியது. உழவால் வரும் வருவாய் இந்நாள் இந்நாட்டில், பட்டண வாணிகத்தால் வரும் வருவாய்போலப் பேரளவினதாயில்லை; பின்னதிலிருந்தே நாட்டின் சிறந்த உடைமைகளும் பெருமைகளும் இன்று முகிழ்க்கின்றன. ரோம் நாட்டில் அக்காலத்தில் பெரிய உழவர்களுள் தக்கவர்களை ஆணையாளர்களாகவும் தலைவர்களாகவும் ஏற்படுத்துவதுண்டு. அது போல இக்காலத்தே பகடு நடத்துவார் நிலையிலிருந்து தலைவர்கள் தோன்றுவதில்லை. அதன் முன்னிலை ஏழைகளைத் தவிரச் செல்வர்களுள் தக்கவர்கள் தங்கள் மைந்தர்களை வாணிகம் முதலான துறைகளில் பயிற்சி செய்விப்பதுபோல, உழவுத்துறையில் பயிற்சி செய்விப்பதில்லை என்பதாம். பயிற்சி பெற்ற ஏழை மைந்தர் வளர்ந்து கடமையுணர்ந்த மாந்தரான பிறகும் சிறு கழனிகளையே உழுதற்கு இயலும். அக்கழனிகளின் வாரமோ, உழுவானின் உயிர்க்கு இடந்தந்து, வருவாயின் பெரும்பாகத்தை உட்கொள்ளுகின்றது. உடைமையாளரின் மைந்தரோ, உழவுப் பயிற்சி இன்மையாலும், ஒரோருகால் செருக்காலும், வாணிக வளர்ச்சி போன்று உழவு வளர்ச்சியும் நன்கு எய்துதற்கு உறுதி

யின் ஏற்றதாயினும், அவ்வாறு செய்து பயன்பெறுமல், வறிதே இருக்கின்றனர்.

உழவுத்திறன் வேண்டப்படுவதே என்பது, அது பிற திறன்களின் உதவியின்றி நிலைக்கக் கூடியது ஆகலானும், பிற திறன்கள் அதன் உதவியின்றி நிலைத்தல் ஆகாது ஆகலானும் நன்கு புலப்படும். மாந்தர் இன வாழ்க்கை, பேச்சுத்திறன் இன்றேல் காக்கப்படுமாறு இலதாதல் போல, உழவின்றேல் பிற தொழில்கள் நின்று நிலவுமாறிலது. என்னெனில், அணிகள் யாவும் பேச்சுத் திறன்போல இன்றியமையாதன ஆகாதது போல, அப்பிற தொழில்கள் யாவும் உழவு போல இன்றியமையாதனவாகா. இன்றும் சில நாட்டினர் வேறு தொழில் யாதும் கைக்கொள்ளாமல் வெறும் உழவால் வாழ்கின்றனர்.

உழவர் வாழ்க்கையின் குற்றமற்ற தன்மை அதற்கொரு சிறப்பேயாகும்; அச்சிறப்பை உழுதுண்போர் காவாவிடில் பழியுடையோரேயாவர். என்னெனில், தீயன செய்தற்கண் எழும் ஓர் ஆவலால் கட்டுப்படாமல் வாழ்வோர் இவரே. நிலம் திருத்தி உண்போர் இவர்; மாந்தரை வருத்தி உண்போர் ஏனையோர். இயற்கைத்தாய் அளித்த உடைமை கொண்டு வாழ்வோர் இவர்; உடன் பிறந்தாரை ஏமாற்றிப் பெற்ற உடைமை கொண்டு வாழ்வோர் ஏனையோர். ஆவும் ஆடும்போல இயற்கை அளித்தவை கொண்டு வாழ்வோர் இவர்; நாயும் நரியும்போலக் கொள்ளைகொண்டு வாழ்வோர் ஏனையோர். ஈண்டு ஆவும் ஆடும் மாந்தர்க்குப் பயன்படுமாறு நாயும் நரியும் பயன்படா என்பதை அறியவேண்டும். மாந்தர் யாவருள்ளும் உழவரே மிக்க அமைதி உடையோரும், அமைதியின்மைக்கு அடிமைப்

படாதோருமாவர். அவர்கள் வாழ்க்கை முறையும் நன்மை விருப்பமும் அவர்களை என்றும் அமைதியை விரும்புவோராகச் செய்கின்றன. பெருங்கள்ளமற்ற தன்மையொடு பெருமகிழ்ச்சி தரும் பான்மையும் என்றும் மென்மையொடு உழவின் கண்ணதாக, மாந்தர் அதனிடத்தே அவ்விரண்டையும் துய்த்தல் செய்யாமல், பட்டினங்களிலும், வழக்கறி மன்றங்களிலும், இடர்ப்பட்டு வருந்தி முயன்று நாடித் திரிதல், தீமை பயப்பதேயாம்.

உழவிடத்தே நாம் அகன்ற காட்சிகளுக்கிடையே இருக்கின்ரும்; பட்டினப்பாங்கரில் ஆட்சியியல் அசைவுகளிடை உழல்கின்ரும்; ஈண்டுக் கடவுள் தந்த ஒளி நிறைந்த திறந்த வெளிகளில் உலவுகின்ரும்; ஆண்டு மாந்தர் பகை எனும் இருண்ட சுழல்வழிகளில் தடுமாறுகின்ரும்; ஈண்டு நம் புலன்கட்கெல்லாம் தூய விருந்து அளிக்கின்ரும்; ஆண்டுத் தூய்மைபோன்றதும் தூய்மை அற்றதுமான விருந்தே அளிக்கின்ரும்.

உழவன் பெறும் ஒப்புயர்வற்ற, இயற்கையான, என்றுமுடனுள்ள, மகிழ்ச்சி ஒன்றுண்டு: அவனைச் சுற்றி அவனது திறமையாலும் அறிவாலும் ஆக்கப்பட்ட வளர்ச்சிகளையும் புதுமைகளையும் காண்டொறும் எழும் மனநிறைவே அஃதாம். அன்றியும், அவனது முயற்சியின் பலனை அவ்வப்போது கைக்கொள்ளுதலும், பின்னர்க் கைக்கொள்ளுதற்கு ஏற்ற பலன்கள் அரும்புதலைக் காண்டலும், அவன் முயற்சியால் தோன்றின அழகிய பொருள்கள் நிலமெங்கும் பரவி இருத்தலைக் காண்டலும், கடவுள்போல அவன் தொழில் யாவும் நல்லனவாக இருக்குமாறு காண்டலும் அந்த மன நிறைவின்பாற்படும்.

அ

# ஒரு புற்ருள்

(ஜான் ரஸ்கின் எழுதிய 'எ ப்ளேட் ஆஃப் க்ராஸ்' என்னும் கட்டுரையின் சுருங்கிய மொழிபெயர்ப்பு.)

ஒரு புற்ருளை எடு. சற்று நேரம் அதன் மெல்லிய, வாள் வடிவு கொண்ட, பசுங்குழல் போன்ற அமைப்பை உன்னிப் பார். குறிப்பிடற்கு ஏற்ற நல்ல தன்மை யேனும் அழகேனும் அதன்பால் இலது. அது மிகக் குறைந்த பலமுள்ளது ; மிகக் குறுகிய உயரமுள்ளது ; ஒரு சில நீண்ட கோடுகள் ஒரு புள்ளியாகச் சேரும் அமைப்புள்ளது. அப்புள்ளிதானும் குற்றமற்ற புள்ளியன்று ; மழுங்கியும் நிறைவு எய்தாமலும் உள் ளது. இயற்கையின் திறன் அதனிடத்து முனைப்புப் பெறவில்லை. இன்று யாவராலும் நன்கு மிதிக்கப்படு தற்கும், நாளை அடுக்களைக்குள் எறியப்படுதற்குமே அது படைக்கப்பட்டது போலும்! எனினும், வேனிற் காற்றில் மலரும் பன்னிற மலர்கள் யாவற்றுள்ளும், கண்ணுக்கினியனவும் உணவுக்கு நல்லனவுமான நல்ல வன்மையுள்ள மரங்கள் யாவற்றுள்ளும், இந்நொய்ய பைங்குறும் புள்ளியினும் கடவுளால் மிக அருள் செய் யப்பட்டதும், மாந்தரால் மிக விரும்பப்பட்டதுமான ஒன்று இலது.

இப்பைம்புள்ளியைப் பற்றிக் கருதுங்கால் குறி யீடாக நாம் தெரிந்துகோடற்கு ஏற்றனவான பல கருத் துக்கள் உள : இதனிடத்தே வியக்கத்தக்க இரு வேறு தன்மைகள் இருத்தல் கண்கூடு ; அவை **பணிவு, களிப்பு**

என்பன. இவ்விரண்டும் இதனை மாந்தர் பணிக்கு ஏற்றதாகச் செய்கின்றன. உணவாகக் கொள்ளப்படு தற்கும் காற்கீழ் மிதிக்கப்படுதற்குமே படைக்கப்பட் டது போல, இடந்தந்து நிற்பதால், இது **பணிவு** நிறைந் தது என்பது போதரும். பல வகைப்பட்ட வன்கண் மைக்கு உட்பட்டும், துன்பங்கட்கு ஆட்பட்டும், மாருக் களிப்புடன் மீண்டும் தன்னியல்புடன் நிற்கும் பான்மை யால் இது **களிப்பு** நிறைந்தது என்பதும் போதரும். இதனை மிதிபொறி கொண்டு மிதித்தால், அடுத்த நாள் வலி மிகும்; கருவி கொண்டு துணித்தால், நன்றியுடன் பலபடக் கிளைத்திடும்; காற்கீழ் மிதித்தால், மிக்க நறு மணம் தரும். இளவேனிற்காலம் வந்துற்ருல், உலகத் தொடு ஒத்து, மகிழ்ந்து, வலிவுடன் கூடிய இளம் பசுமையாய்த் தலை சாய்த்துச் சாய்த்து விளங்கும். நளிர் தரும் காலத்தே இனத்தோடு கூடி வாடி வருந்திடா மலும், அவற்றைக் கண்டு எள்ளி நகையாடி ஓங்கி வளர்ந்திடாமலும் இலையுதிர்ந்தும் நிறம் மாறியும் வருந் தாமலும், இயற்கையாகவே விளங்கும். என்றும் பசுமை இதன் உண்மை.

௯

# இலக்கியப் பயிற்சி

## 1

ஒரு நூல் இலக்கியமாகக் கருதப்படுவதற்கு அஃது இரண்டு தன்மைகளை உடைத்தாயிருத்தல் வேண்டும். ஒன்று, மாந்தர் யாவர்க்கும் பொதுவாகப் பயன்படும் பொருளையே நுதலும் தன்மை ; மற்றொன்று, நுதலும் பொருள் இன்பம் பயக்கும் வகையில் அழகுற அமைக்கப் பெற்றுள்ள தன்மை.

வாழ்க்கையில் தாங்கள் கண்ட உண்மைகளையும், நுகர்ந்த நுகர்ச்சிகளையும், பொதுவாக மாந்தர்களுக்குப் பயனுறும் பொருள்களைப் பற்றித் தாங்கள் கொண்டுள்ள எண்ணங்களையும் திரட்டிப் புலவர்கள் எழுதும் நூல்களே இலக்கியமாம். சுருங்கக் கூறுமிடத்து, வாழ்க்கையின் வழிகளை மொழியின் வாயிலாக விளக்குவதே இலக்கியம் என்பது பொருந்தும்.

இலக்கியம் தோன்றுதற்கு முன்னிலையான எழுவாய்கள் நான்கு. ஒன்று, தன்மை நவிற்சியில் புலவனுக்கு விருப்பம் உண்டாதல் ; மற்றொன்று, பிற மாந்தர் வாழ்க்கையின் தரத்தை அறிய அவன் மனம் செலுத்தல்; பிறிதொன்று, இப்பரந்த புலனறி உலகத்தும் மனக்கற்பனை உலகத்தும் அவன் மனம் செலுத்துதல் ; வேறொன்று, அழகில் ஈடுபட்டு யாதொன்றையும் அழகாக அமைக்க விரும்புதல்.

இந்நான்கு மனவியல்புகளும் மாந்தர் ஒவ்வொரு வர்க்கும் உள என்பது கூர்ந்து கருதுவார்க்குப் புலனாகும்; இறுதியில் கூறப்பட்டது, எந்நூல் எழுதுவார்க்கும் பொதுவாக உண்டு. ஏனைய மூன்றும் மாந்தர் உள்ளத்தில், தனித்தனியாகப் பிரித்துணர இயலாத வகையில் கலந்தே நிற்கும்.

இந்த எழுவாய்களால் எழும் நுதல் பொருள் வகைகளை வரம்பிட்டு வகுத்தறிதல் அரிது. என்னெனில், இலக்கியத்தின் நுதல் பொருள் வாழ்க்கையேயாதலானும், அவ்வாழ்க்கையோ வரம்பிலது ஆதலானும் என்க. ஆயினும், ஒருவாறு வகுத்துக் கூறுமிடத்து இலக்கியத்தின் நுதல் பொருள் ஐவகைப் படும் எனலாகும். முதல் வகை, புலவனுடைய தன்னுகர்ச்சிகள் என்பது. இரண்டாம் வகை, மாந்தர் தம் பொதுப்பட்ட வாழ்க்கை நுகர்ச்சிகள் என்பது. மூன்றும் வகை, தனியொருவனுடைய இனத் தொடர்பு வாழ்க்கை நுகர்ச்சிகள் என்பது. நான்காம் வகை, புலவனுடைய புறவுலக வாழ்க்கை நுகர்ச்சிகள் என்பது. ஐந்தாம் வகை, இலக்கிய அமைப்பு வகை வரலாறு என்பது. இந்த ஐந்து நுதல் பொருள் வகைகளைப் பற்றியும் வகுக்குமிடத்து,இலக்கியமும் ஐவகைப் படும். அவை முறையே தன்மை இலக்கியம், மன்பதை இலக்கியம், இனத்தொடர்பு இலக்கியம், புறவுலக இலக்கியம், இலக்கிய இலக்கியம் எனப்படும்.

ஓர் இலக்கிய ஆக்கத்திற்கு வேண்டப்படும் உறுப்புக்களை இரண்டு வகைகளாகப் பிரித்துக் கூறலாம்: ஒன்று, இயற்கையாகவே தோன்றுவது. அது பா, கட்டுரை, நாடகம், புனை கதை, சிறு கதை என்பவற்

றைக் கொண்டது. மற்றொன்று, புலவனால் தோற்றுவிக்கப்படுவது. அது கருத்து, உணர்ச்சி, கற்பனை என்பவற்றைக் கொண்டது. ஒரு புலவன் தான் காணும் ஒரு வாழ்க்கை நிகழ்ச்சியைப் பாவாக யாக்க விரும்புவன்; மற்றொரு நிகழ்ச்சியைக் கட்டுரையாகச் செய்ய விரும்புவன்; பிறிதொன்றை நாடகமாக அமைக்க விரும்புவன்; வேறொன்றைப் புனை கதையாக எழுத விரும்புவன். இவ்விருப்ப வேற்றுமைகளுக்கு முன்னிலை, அவ்வந்நிகழ்ச்சிகள் அவனது உள்ளத்தில் எழுப்பும் உணர்ச்சிகளும் கருத்துக்களும் வேறு வேறாக இருத்தலேயாம். அப்புலவன் அந்நிகழ்ச்சிக்கு ஏற்றவாறு பா முதலிய உறுப்புக்களில் ஒன்றால் இலக்கியத்தை ஆக்கத் துணிந்த பின், தன் திறமையினால் தன்னுடைய கருத்து, உணர்ச்சி, கற்பனை என்பவற்றைத் தக்கவாறு கலந்து, படிப்பார்க்கும் கருத்து, உணர்ச்சி, கற்பனை என்பன தோன்றுமாறு தன் வினையைச் செய்து முடிக்கின்றான். அவ்வாறு அவன் செய்யுங்கால், அவ்விலக்கியத்துக்குள் அழகு, முறைமை, கட்டமைப்பு, வன்மை (Beauty, Order, Symmetry, Effectiveness) என்பன விளங்குமாறு அவன் சில யாப்பு முறைகளைக் கையாள வேண்டும். கருத்து, உணர்ச்சி, கற்பனை என்பவற்றோடு யாப்பு முறையும் புலவன் கையாளும் ஆக்கவுறுப்பாம்.

## 2

வாழ்க்கையின் வழிகளை மொழியின் வாயிலாக விளக்குவதே இலக்கியம் என்றதனால், விளக்குவானுடைய கருத்துக்களும் நுகர்ச்சிகளுமே இலக்கியத்தைப் படிப்பார் கவனிக்க வேண்டுவன. அவ்வாறு கவனிக்குங்

கால், ஆக்கியோனது வாழ்க்கை நுகர்ச்சி சிறிதாயி னும் பெரிதாயினும், அவனது எழுதுந் திறமை சிறி தாயினும் பெரிதாயினும், அவனுடைய கருத்துக்கள் ஏற்றனவாயினும், அவன் தான் கண்டவற்றையும், எண்ணினவற்றையும், உணர்ந்தவற்றையும் உண்மை யுடன் உரைக்கின்ருஞ என்று தெரிந்துகோடல் இன்றி யமையாதது. ஏனெனில், ஓர் இலக்கியத்தின் மதிப்பு அதை ஆக்கியோனது உண்மை நவிற்சியைச் சார்ந்து நிற்கும். அவ்வுண்மை நவிற்சி இல்லாதது இலக்கிய மாகாது.

ஆக்கியோனது கருத்துச் செல்லும் வழியிலும் உணர்ச்சி போகும் போக்கிலும் படிப்பானது கருத்தும் உணர்ச்சியும் கலந்து சென்று, வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆக்கியோனது உள்ளத்தில் எண்ணங்களைத் தூண்டின வகையையும், உணர்ச்சிகளை எழுப்பின வகையையும் நுணுகி உணர்ந்து, ஆக்கியோன் அந்நிகழ்ச்சிகளில் கண்ட உண்மைகளையும் அவன் மேற்கொண்ட கருத்து முடிபுகளையும் அறிய முயல்வதே இலக்கியப் பயிற்சி யாம். இவ்வகைப் பயிற்சியினுல், கற்பான், ஆக்கி யோனது தன்மை, கருத்து, உரம், நலிவு முதலியவற்றை நன்கு அறிதல் கூடும். ஆக்கியோன் தன் இலக்கியத்தில் தன்னை எவ்வாறு வெளிப்படுத்துகின்ருனே, அவ் வாறே அவனை அறிதல் இலக்கியப் பயிற்சியின் நோக் கம். பல இலக்கியங்களை நன்கு பயில்வதால் ஒருவன் உலக வாழ்க்கையைப் பற்றிய பல புலவர்களின் கருத் துக்களையும், உணர்ச்சிகளையும், கற்பனைகளையும், அவர் தம் தன்மை, உயர்வு, தாழ்வு முதலியவற்றையும் தெரிந்துகொள்ள வழி ஏற்படுகின்றது. இதனுல், அவனது உலகியலறிவு விரிவடைகிறது.

## 3

இலக்கியப் பயிற்சியில் கருத்துடையான் ஒருவன் மனம் போகும் போக்காக யாதானும் ஓர் இலக்கியத்தை எடுத்துப் படித்தல் கூடாது; ஓர் ஒழுங்கு முறையாகக் கற்றல் வேண்டும். முதலில் அவன் ஓர் ஆக்கியோன் எழுதிய இலக்கிய நூல்களைத் தொடர்ந்து கற்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு கற்றால் மட்டுமே ஆக்கியோனது உள்ள வாழ்க்கையின் வளர்ச்சியையும், அவனுடைய கருத்துக்களும் உணர்ச்சிகளும் கற்பனைகளும் விரிந்து செல்லும் முறையையும், உலகியல் நுகர்ச்சி ஆக்கியோனது நெஞ்சினைப் பண்படுத்தும் திறத்தையும் நன்கு அறிதல் கூடும். ஒரே ஆக்கியோன் எழுதிய பல இலக்கியங்களையும் ஒப்பிட்டுக் கற்பதால், கற்பானுக்கு ஆக்கியோன் கையாளும் நடைத் திறமும், இலக்கிய அமைப்பு முறைகளும் நன்கு புலனாகும். ஒரே புலவன் எழுதிய இலக்கியங்களைக் கற்கும்போதும் கற்பான் கொள்ள வேண்டிய முறை ஒன்றுண்டு: அஃது யாதெனில், அப்புலவன் எழுதிய முதல் நூலை முதலாகவும், இரண்டாம் நூலைப் பிறகும், மூன்றும் நூலை அதன் பின்னுமாக, நூல்கள் எழுதப்பட்ட கால முறைப்படி இறுதி நூல் வரையில் கற்க வேண்டுவதே. அவ்வாறு கற்றால், புலவனது நெஞ்சப் பண்பு வளரும் வகையும், அவனது உலகியலறிவு விரியும் முறையும், அவனது நடைத்திறம் வளரும் வழியும், பிறவும் தெளிவாகத் தோன்றும். இனி, ஓர் ஆக்கியோனது ஓர் இலக்கியத்தைக் கற்குங்கால், அதே நுதல் பொருள் பற்றி வேறு புலவர்கள் இயற்றிய இலக்கியங்களையும் ஒருங்கு வைத்து, ஒப்பு முறையால் கற்றல் வேண்டும். இவ்வாறு கற்பதால்

கற்பானது இலக்கிய அறிவு மிகவும் விரியும் என்பது கூறாமலே அமையும்.

## 4

ஒரு புலவன் எழுதிய இலக்கியங்களை மேற்காட்டிய முறையின்படி கற்பவன் ஒருவன், அப்புலவனது வாழ்க்கை வரலாற்றினையும் நன்கு அறிவானாயின், அவ்வறிவு அவ்விலக்கியங்களை மேலும் நன்றாகப் பயில்வதற்குப் பெரிதும் துணையாகும். என்னை? ஒரு புலவனது வாழ்க்கையில் இன்ன நிகழ்ச்சி நிகழ்ந்தமையால் அவன் இன்ன நூலில் இன்ன வகைக் கருத்தும் கற்பனையும் தோன்ற எழுதினான் எனவும், அவனது வாழ்க்கையில் இன்ன இடர்ப்பாடு வந்துற்றமையால் அவன் இன்ன நூலில் உள்ளம் வெதும்பி இன்னவாறு வரைந்தான் எனவும், அவனது வாழ்க்கையில் இன்ன மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி நடைபெற்றமையால் அவன் இன்ன நூலில் களி துளும்ப இன்ன முறையில் கூறினான் எனவும் நுணுகியறியும் வாய்ப்பு அவனது வாழ்க்கை வரலாற்றை நன்கு தெரிந்தால்தான் கைகூடும். ஆயின், இது கருதி ஓர் ஆக்கியோனது வாழ்க்கை வரலாற்றைப்பற்றி, அவன் எழுதிய இலக்கியப் பயிற்சிக்கு வேண்டப்படாத பற்பல சிறுசிறு உண்மைகளை ஆராய்ந்தறிய முனைதல் பயனற்ற செய்கையாம்.

## 5

ஒரு புலவனுடைய இலக்கியங்களை முறைப்படி கற்குங்கால் அவனது நடையும் நன்கு கவனித்தற்கு உரியது. முதல் நூலில் புலவன் எழுதிய நடையும், அஃது அடுத்தடுத்து எழுதப்பட்ட இலக்கியங்களில் சீர்மை அடைந்த வகையும், அவன் சொற்களைப் பொருளறிந்து ஆளும் திறனும், சொற்றொடர்களைத் தொடுத்தாளும்

தரமும், சொன் முடிபுகளைக் கோத்து வைக்கும் ஒழுங்கும், ஒலியின்பம் பயக்குமாறு சொல்லடுக்கும் பான்மையும், அவன் எளிய சொற்களில் வலிய பொருளைப் புதைத்து வைக்கும் புலமையும், உவமைகள் காட்டும் நுணுக்கமும், இன்ன பிறவும் அவனுடைய நூல்களைக் கற்பான் நன்கு ஓர்ந்து அறிய வேண்டும். இவ்வாறு அறிந்து இலக்கியம் பயிலுங்கால், ஒவ்வொரு சிறப்பான நடை அமைகின்றது என்னும் உண்மை புலனுகின்றது. அன்றியும், அந்நடை அப்புலவனது மனப்பான்மையைப் புலப்படுத்துகின்றது என்னும் உண்மையும் தெளிவாகின்றது. மொழி ஒன்றேயாயினும், அம்மொழியில் வல்லுநர் பலர் ஒரு கருத்தை அம்மொழியில் கூறுங்கால் ஒரே வகையாற் கூறுதல் யாண்டுமில்லை; பற்பல வகைகளாற்கூறுதலே கண்கூடு. கூறும் வகைகளும் இங்ஙனம் பற்பல ஆதல் அன்னவர்தம் தன்மைகள் பல்வேருக இருத்திலினுலேயாம். அவ்வையாரின் ஆத்திசூடிச் சொன்முடிபுகளையும் (Sentences), வள்ளுவர் குறட்பாக்களையும் ஒப்பு நோக்கிப் பார்ப்பார்க்கு இது புலனுகும். 'அறஞ்செய விரும்பு,' என்பது அவ்வையாரின் கட்டளை. இதனையே வள்ளுவர் பத்துக் குறட்பாக்களால், பயன் வகை காட்டிச் செயல் வகை கூறும் முறையால் அறிவுறுத்தியிருக்கின்ருர். இதனல், கற்பார் அறிய வேண்டுவன எவையெனில், அவ்வையார், அக்கால் கட்டளையிடும் கருத்தொடு, அம் மனப்பான்மையுடன் நூல் செய்தார் என்பதும், வள்ளுவனுர் மாந்தர்தம் அறிவுக்கு எடுத்துக் காட்டும் கருத்தோடு, அம்மனப்பான்மையுடன் நூல் செய்தார் என்பதுமாம். இது போலப் பிறவும் தெரிந்து கோடல் வேண்டும்.

## சிறு கதை

கட்டுரை போலவே சிறு கதை என்பதும் தமிழில் அண்மையில் ஏற்பட்ட இலக்கிய வகையாம். திங்கட்டாள், வாரத்தாள் முதலிய போதுத்தாள்கள் (Periodicals) இந்நாள் மிகுந்து பரவும் நிலைமையே, சிறு கதை விரைவில் ஓர் இலக்கிய வகையாக மேற்கொள்ளப்படுவதற்கு இசைவாயிற்று. சிறு கதை, நீண்ட அளவினதாய புனை கதையை விரைவில் இலக்கிய வகையிலிருந்தே விளக்கிவிடக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். அது கூடாது. ஏனெனில், புனை கதையின் நோக்கம் ஒன்று; சிறு கதையின் நோக்கம் பிறிதொன்று. புனை கதையின் அமைப்பு ஒன்று; சிறு கதையின் அமைப்புப் பிறிதொன்று. வாழ்க்கையில் அறியக் கிடக்கும் பல படியவான பண்புகளையும் நிகழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டும் நோக்கமுடையது புனை கதை; அந்த நோக்கத்துடன் பல காட்சிகளையும் உறுப்புக்களையுங் கொண்டு புனை கதை ஆக்கப்படும். சிறு கதையின் ஆக்கம் அத்தகையதன்று.

சிறு கதை என்பது ஓரே முறை அமர்ந்து படித்து முடித்தற்கு ஏற்ற அளவினதாய ஒரு கதை. ஆயின், நீண்டதான புனை கதையின் சுருங்கிய ஆக்கமே சிறு கதை போலும் எனில், அக்கூற்றுப் பொருந்தாது. நோக்கத்தாலும், அமைப்பாலும், ஆக்கத்தாலும் சிறுகதை புனைகதையின் வேறும். சிறு கதையின் நுதல் பொருள் சிறிய வரம்புக்குள் அழுத்தமும் அகலமும் பொருந்துமாறு விரிக்கத் தக்க

**தாக இருத்தல் வேண்டும்.** மேன்மேலும் விரிப்பினும் பெறும் பயன் யாதொன்றும் இன்று என்னும் எண்ணம் படித்தவர் உள்ளத்தே எழுமாறு ஆக்கப்பட்ட சிறு கதையே ஏற்புடையதாம். அன்றியும், அது தெளிவான எல்லைக்கோடு (Outline) பெற்றதாகவும், அளவோடு இயைந்த அமைப்பினைக் கொண்டதாகவும், கதைக் கருத்தினை விளக்கப் போதிய நீளமுள்ளதாகவும், கருத்து நெருக்கமும் நிகழ்ச்சி நெருக்கமும் இல்லாப் பாங்குடையதாகவும், மேற்கொண்ட எல்லைக் கோட்டினுள் நிரம்பிய பான்மை உற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

ஆயின், ஒரு தனி நிகழ்ச்சியை முளையாகக்கொண்டு ஆக்கப்படுவதே சிறு கதை போலும் எனில், அக்கூற்றும் பொருந்தாது. என்னை ? **ஒரு கதையின் முளை வேறுபட்ட பலவற்றுள் யாதானும் ஒன்றாக இருத்தல் கூடும்.** ஒரு செய்தியை இலக்கிய அமைப்புக்கு உட்படச் செய்து சிறு கதையாக முடித்தலுங் கூடும் ; ஒருவர் தம் பாலேனும் பிறர்பாலேனும் காணக் கிடக்கும் யாதானும் ஒரு பண்பின் பகுதியைப் பற்றி ஒரு சிறு கதை யாத்தலுங் கூடும் ; மாந்தர்தம் வாழ்க்கை நுகர்ச்சிகளில் யாதானும் ஒன்றைப் பொருளாகக் கொண்டு ஆக்கப்படும் சிறு கதையும் உண்டு ; புனைகதை வகைகளிற் பெறப்படும் கதை - நிகழ் - கால அளவுக்கு மேற்பட்ட அளவுடைய கால நீளத்தையும், புனை கதைகளில் எதிர்ப்படும் நிகழ்ச்சிகளுக்கு மேற்பட்ட எண்ணுள்ள நிகழ்ச்சிகளையுந் தழுவி ஆக்கப்படும் சிறு கதை வகையும் உண்டு.

**ஏற்புடைய எச்சிறுகதையிலும் நடு நாடியாக ஒரு யாப்பியைபு இருத்தல் வேண்டும். அவ்வியைபின் உறுப்புக்க**

ளாவன நான்கு: அவை, இயக்கு கருத்தின் ஒருமை (Unity of motive), நோக்கத்தின் ஒருமை (Unity of purpose), வினையொருமை (Unity of action), மனப் பாட்டொருமை (Unity of impression) என்பன. எளி தாகக் கூறுமிடத்து, ஏற்புடைய ஒரு சிறு கதை ஒரே ஒரு கருத்தைத் தெரிவிக்கத் தொடங்கி, அதை ஒரே நோக்கத்துடன் நேர் முறையிற் கூறி முடிப்பதாக இருக்கவேண்டும். இந்தச் சிறந்த தன்மையோடு கூடிய ஒரு சிறு கதையை யாத்தல் எளிதன்று. ஆகலாற்றான் புனை கதையிலும் சிறு கதையே சிறந்தது என்று ஆராய்ச்சியாளர் (Critics) பலர் கருதுகின்றனர். யாதானுமொரு சிறு கதையை யாத்தற்கு முன்னர் ஒரு சிறந்த மன விளைவைப் படிப்பார் உள்ளத்தே பதிவிக்க வேண்டும் என்னும் திண்ணிய எண்ணம் இலக்கிய வினைஞனுடைய உள்ளத்தில் வேரூன்ற வேண்டும். ஊன்றிய பிறகு அவன் முன்னிய மன விளைவை எய்துவித்தற்குத் துணையாக ஏற்ற சில செயல்களைக் கற்பித்துக் கூட்டிக்கொண்டும் ஒரு சிறு கதையை அமைத்தல் வேண்டும். அங்ஙனம் அமைக்குங்கால், நின்று பயனின்மை என்னுஞ் சொற்குற்றம் நிகழாதவாறு அவன் காத்துக்கொள்ள வேண்டும். அன்றியும், அச்சிறு கதையின் முதல் வாக்கியமே அவன் முன்னிய மன விளைவை முற்படுத்திக் காட்டுவதாக இருத்தல் வேண்டும். இலக்கியச் சுவையை நுகர்வதில் தேர்ந்த எவரும், அதனைப் படித்து முடித்த பிறகு மன நிறைவு பெறுமாறு, சிறு கதை அமைக்கப் பட வேண்டும்.

சிறு கதையின் யாப்பு முறையை வரையறுத்தல் கூடாது. பொருளும் நோக்கமும் கருதி யாப்பு முறையை இலக்கிய வினைஞன் துணிந்து கோடல்

வேண்டும். தன்மையில் வைத்துச் சிறந்த சிறு கதை யாத்தாரும் உளர்; ஓரிருவர் உரையாடல் வாயிலாக ஓர் உயிர்ப்பு நிறைந்த சிறு கதையை யாத்தலுங் கூடும்; படர்க்கைச் சொல்லாக முறைப்படுத்தி ஒரு சுவை மிகுஞ் சிறுகதையை அமைத்தலும் அரிதன்று. பொரு ளும் நோக்கமும் கருதி, சிறு கதையை மூவகைப்படுத்து வது கூடும். அவை **வினை நவில் சிறு கதை, பண்போர்ப்புச் சிறு கதை, மனப்பாட்டுச் சிறு கதை** (Story of plot, story of character, story of impression) என்பன. வினை நவில் சிறு கதை, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றி ஆக்கப்படுவது. பண்போர்ப்புச் சிறு கதை, யாதானுமொரு குறிக்கத் தக்க பண்புப் பகுதியைப் பற்றி ஆக்கப்படுவது. மனப்பாட்டுச் சிறு கதை, படிப் பார் உள்ளத்தே எழுதுவான் முன்னிய மனப்பாடு தோன்ற ஆக்கப்படுவது.

# நூலாக்குவோர் அளவளாவுதல்

*[வில்லியம் ஃஆஸ்லிட் எழுதிய ‘ஆன் தி கான்வர்சேஷன் ஆஃப் ஆதர்ஸ்’ என்னும் கட்டுரையின் சுருக்கம்.]*

பொதுவாக, அறிவு நினைவுகூர்தலான் விளக்கம் எய்துகின்றது. நண்பர்களிடை இருக்கும் ஞான்று அவர்தம் அறிவின் திறத்தைக் கண்டு நின் திறனைப் பயன்படுத்த வேண்டும். அவர் கூர்த்த அறிவினராயின், நீ நுண்ணறிவுடன் சொல்லாட வேண்டும். அவர் மழுங்கிய அறிவினராயின், நீ எதனையும் விளக்கமாக எடுத்து மொழிய வேண்டும். நின் சிறந்த கருத்துக்களையும் ஏற்ற மேற்கோள்களையும், பன்றியின் முன்னர் முத்துக்களை எறிவது போல, அறியும் ஆற்றல் இல்லாதார் முன் மொழிதல் கூடாது. நின் சொல்லை நன்கு அறிகின்றனர் என்றெண்ணி விரைந்து பேசிக்கொண்டே செல்லுங்கால், ஓர் அறிவற்ற கேள்வி நின்னை எவ்வாறு தடை செய்கின்றது! நின் கூற்றின் அடிப்படையான கருத்துக்களை அவர்கள் அறிந்தார்களில்லை எனத் தெரிதலும், எத்துணை தடையாகின்றது! ஆயின், அறிவு விளக்கமும் சொற்றேர்ச்சியும் நிரம்பிய சிலர் கூடி ஒரு கேள்வியைப் பற்றி அவர்க்குள் பேசுங்கால், அக்கூற்றுக்களைக் கேட்டல் பயன் தரு கேள்வியாம்.

முன்னர், **சார்லஸ் லாம்** வீட்டில் இத்தகைய கூட்டங்கள் கூடுவது உண்டு. ஒவ்வொரு வியாழன் மாலையிலும் கூடிச் சுறுசுறுப்போடு சொற்போரிடுதல் வழக்



3550

கம். அக்கூட்டங்களில் முதன்மையிடம் பெறத்தக்க வர் லாமே. கூட்டத்தில் அவருக்கு இணையாக மகிழ்ச்சி யுடன் பேசுவார் ஒருவருமிலர்; அவர் போலக் கேட் பார் மனத்தில் கருத்துக்கள் தோன்றப் பேசுவாரும் இலர்; அவர் போலத் தக்கவாறும் நுண்ணறிவுடனும் பேசுவாரும் இலர். ஒரு மாலை முடிதற்குள் குழுமியிருக் கும் நூல் ஆக்குவோர்கள் சொற்ற இருபொருளொரு சொற்களில் சிறந்ததும், கருத்துக்களில் சிறந்ததும் லாம் சொல்லியனவாகவே இருக்கும். அவர் எழுத்துக்களில் முனைந்து எழுதியனவே சிறந்தனவாதல் போல, அவர் மாற்றங்களிலும் முனைந்து மொழிந்தனவே சிறந்தன வாம். ஒரு சில நிறைவெய்தா வாக்கியங்களால் நேர்த் தியும், மேற்சென்றிடித்தலும், ஆழமும், அகலமும் பொருந்திய பொருள்களைக் கூறுவார் வேறு எவரு மிலர். அவர் கூறும் குறும்புகள் வெங்கண்ணீர் போலத் தீய்க்கும் ஆற்றல் உடையன. விதந்து கோடற்கு ஏற்ற பொருளில் சிறுத்துள்ள குற்றப் பகுதியையும் பகுத் தறிந்து அவர் காட்டும் நுட்பம் வியத்தற்குரியது. ஆரவாரமும் ஆணவமும் அவர்பால் இல. அவர்தம் இன்சொற்களும் வன்சொற்களும் நடிப்புடன் கூடி யவை அல்ல; நன்னோக்கத்துடன் கூறியனவேயாம்.

அந்நாட்கள் எல்லாம் கழிந்தொழுந்தன! யான் கூற விரும்பாத ஒரு நிகழ்ச்சியால் எங்கள் கூட்டம் கலைந் தது. இப்பொழுது நாங்கள் கூடுவது மிகு அருமை. லாம் முன் இருந்த இடத்தில் இப்பொழுது இலர். இருக்கை மாறியதுபோல அவர்தம் கருத்துக்களும் மாறியன போலும்! அவர்தம் உடையும் மாறியது போலும்! லேஃஅண்ட் ஒரொருகால் அவர் வீட்டுக்குச் செல்வது உண்டு. உணர்ச்சிகள் ததும்பவும் மகிழ்ச்சி பொங்

கவும் மிக விரைந்து பேசும் திறன் அவர்பால் உண்டு. ஆனால், அவர் தம் சொற்குத்துக்கள் லாம் சொற்குத்துக்கள் போல உறுத்துவனவல்ல. மறுநாள் அவற்றை நினைவு கூர முயன்றிடில், அவை நினைவுள் படா. அத்துணை மேற்போக்கானவை அவை. இயற்கையான அமைதியுடன் பேசுதற்கு, அவரைச் சூழ்ந்து அவரை வியப்போரும் விரும்புவோரும் இருந்து அவர் சொல்லை நன்கு பாராட்டவேண்டும். அத்தகையோர் கூட்டத்தில் அவர் அழகுடனும் மகிழ்ச்சியுடனும் தலைமையாக அமர்வர்; அழகிய பாங்கும் நல்ல உறுப்பு அசைவும் தோன்ற இருப்பர்; அறிவும் கற்பனையும் ததும்ப, களிப்புத்தரும் சொற்போர் செய்வர்; ஒப்புயர்வற்ற திறத்தொடு கதை கூறுவர்; அறிமுகமானவர்களையும் நடர்களையும் வியத்தற்கேற்றபடி போலிசெய்வர்; அவரே கூறிய குறும்புச் சொல் பற்றியும் பிறர் கூறிய குறும்புச்சொல் பற்றியும் நல்ல பான்மையுடனும் பெருங்களிப்புடனும் நகைப்பர்; பிறர் இரட்டுறமொழிவதன் உட்கருத்தைத் தெளிவுடன் உடனே அறிவர்; இசை பற்றியும் சுவடிகள் பற்றியும் சுவை உடையராவர்; சொல் வழக்கைத் திறமையுடன் முடிப்பர்; சீர்மை தோன்ற நடப்பர்; மாற்றூர்க்கு இடந்தந்து வெல்வர்; கேட்பார் நகைக்கும் வண்ணம், ஒரு சில நேர்த்தியான மேற்கோள்களும் பழமொழிகளும், விரைந்து கூற, மனத்தில் கொண்டிருப்பர். அவர்பால் குற்றம் ஒன்று உண்டாயின், அஃது, 'அவர் திறமையுடன் பேசுதல் போலத் திறமையுடன் செவி சாய்த்துக் கேட்டல் அரிது,' என்பதாம். அவர் ஆற்றொழுக்காகப் பேசுங்கால் பிறர் தடுத்து மொழியின், பொறுமை இழப்பர். தகவிலரும் அவர் நாத்திறத்தை நோக்கி நிற்க விரும்புவர்.

அளவளாவும் திறன் எனப்படுவது, மொழிவது கேட்கும் திறனும், கேட்க மொழியும் திறனும் ஆய இரண்டும் கொண்டது. நூலாக்குவோர்கள் பொதுவாக நல்ல கேள்விப் பழக்கம் அற்றவர்கள். இப்பழக்கம் இன்மையால் சில சிறந்த பேசுந்திறனுடையார் தோழமைக்கு ஏலாதவராகின்றனர். அன்னரே, கேட்பார் போல வெற்றெனச் செவி சாய்த்திருப்போரும், சிறந்த பேசுந் திறனுடையோராயினும் தோழமைக்கு ஏலாதவராகின்றனர். ஒரு கூட்டத்தே, கேட்பார் அயர்வேனும் மகழ்ச்சியேனும் பெறுமாறு, மிக்க நேரம் பேசுந்திறனுடைய ஒருவர், கேட்பாருள் ஒருவன் குறுக்கிட்டு யாதானுமொன்று மொழிந்தால், எதிர் பாராமல் சுடப்பட்டவன்போலவும், திடுமென வாயெலும்புகள் அசையாமல் நின்றவன் போலவும், முகம் தாழ்ப்பர். பொறுமையுடன் கேட்போனே திறமையுடன் அளவளாவத் தக்கவன். ஓவியம் வல்லார் **திருவாளர் நார்த்கோட்டு** என்பவரைப்பற்றி ஈண்டு யான் குறிப்பிடுகின்றேன். ஓவியத்தொழிலோர் பேசுந்திறனுடையராக இருத்தல் இன்றியமையாது வேண்டப்படுவதன்று; எனினும், அவர் அளவளாவலின்கண் சிறக்கின்றனர். தற்செயலாகக் காதில் விழும் கேள்வியையும், விரும்பிச்சொல்லப்படும் ஒரு செய்தியை ஆவலாகக் கேட்பவர்போல **நார்த்கோட்டு**, செவி தந்து கேட்பது வழக்கம். அன்றியும், அதனுல் அவருக்கே நன்மை ஏற்படுவதுபோல எண்ணிக் கேள்வியுள் கருத்தைச் செலுத்துவர். பழங்கதை ஒன்றை மீண்டும் உரைக்குங்கால், முதல் முறையாகக் கூறுவதுபோலப் புதுமையழகு தோன்ற உரைப்பர். அன்றியும், வாய்ப்புக்கு ஏற்பவும் ஆக்கத்திறன் பொருந்தவும் அது

மிளிரும். கிள்ளைபோலக் கூறியது கூறல் அவர்பால் இன்று. அவர் முகமே ஒரு சுவடி. அவர் கூற்றுக் களுக்கு வியப்புக்குறியும் கேள்விக்குறியும் வேண்டி யனவாகா. என்னெனில், அவர் பேசும் பான்மை ஓவி யம்போலப் பண்பு விளக்கம் நிறைந்தது. அவரிடத்து ஒழுக்கமும் வெள்ளையான மனப்பான்மையும் என்றும் தளராமல் நிற்பன. அவரிடத்துள்ள வாய்ப்புக்கு ஏற்ற சிறுகதைகளின் கருவூலமும், விந்தையான உண் மைகளின் ஈட்டமும், நாடொறும் வெளிப்போந்து ஊண் கொள்ளும் குறும்பன் ஒருவனுக்குப் பெரு விருந்து அளிப்பனவாம். ஆயின், அச்சிறு கதைகளும் அவ்வியத்தகு உண்மைகளும் ஒரு கோவையாக அவர் வாயிலிருந்து வெளிப்படுவனவல்ல. யாதானும் ஒரு கூற்றை எடுத்துக்காட்டால் விளக்கவேனும், ஓர் ஒழுக்க நுணுக்கத்தைப் புலப்படுத்தவேனும் அவை கூறப்படும்.

உயிர்ப்புள்ள சொற்போரும், தொடர்புள்ள சொற்பொழிவும் இரு வேறு இயற்கையன. பொறுமை யற்ற தன்மையும் அமைதியற்ற மனமும் உடைய பலர், ஒரு கூற்றின் முடிபை அறிய ஒரு நொடியேனும் நில்லாராகவும், ஒரு சொல் வழக்கின் ஒழுங்கைப் பின் சென்று கருதாராகவும் இருக்கின்றனர். அளவளா வலின் விரைவில் அன்னவர்தம் கருத்துக்கள் ஒருவாறு பொருள் தந்து நிற்கின்றன; ஆயின், இடைப்பட்டு எண்ண நேரின், பொருட்போக்கில் பெரும்பிளவுகள் நேரும். தக்க சொற்களைத் தேர்தற்குள் அவர் சொல்ல விரும்பிய கருத்து மறதி வயப்படும் என்று **மாண் டெஸ்க்யு** கூறியுள்ளார். எனினும், அவர் காலம் காக்க வேண்டிக் கையெழுத்தெழுதுவான் ஒருவனுக்கு உரத்

துக் கூறுவதே வழக்கம். இஃது ஒரு தீய முறை என்றும், நூற்செய்யும் திறனுக்கே ஒரு வழுவாம் என்றும் யான் கருதுகின்றேன். **ஃஆர்ன் டுக்கு** என்பவர் கூறும் பொய் வாய்மைகளில் (Paradoxes) ஒன்று, அவன் குரலின் ஒலியையே கேட்கும் பழக்கமும் உரத்துப் பேசும் பழக்கமும் இல்லாத ஒரு நூற்செய்வோன் நல்ல நடையில் எழுதுதல் கூடாது என்பது. அவர், உரத்துப் படித்தாலொழிய நல்ல நடையில் எழுதப் பட்டதைச் சுவைத்துணர இயலாது என்று கூறியிருப் பின், அக்கூற்றுப் பொருத்தமுடையதாம். நூற்செய் வோர் எழுதுங்கால், எழுதுவதை மெல்லிய ஒலியாகச் செவிப்புலனில் நுகர்வதுண்டு. அதன் உண்மையை ஐயுறுதற்கேற்ற அவ்வளவு மென்மையொடு பொருந் தியதாக அவ்வொலி இருக்கும். பேசுங்காலேனும் உரத்துப் படிக்குங்காலேனும் பயன் தாராது ஒழியும் எந்நடையும் நன்னடை ஆகாது என்பது என் கருத்து.

புகழ் பெற்ற நூற்செய்வோரும், நடிகரும் அவர் தம் இல்ல வாழ்க்கையில் பேதைமை நிறைந்தோர் ஆவர் என்று சிலர் கூறுவது உண்டு. அவ்வாறு கூறுவோர் அறிவற்றவரே ஆவர். ‘உன் துணைவரைச் சொல், உன் ஒழுக்கத்தை யான் கூறுகிறேன்,’ என்பது முது மொழி. அளவளாவலில் பிறவற்றிற்போலச் செயலும் எதிர் செயலும் ஒன்றற்கொன்று யாதானும் ஓர் அள வின்படி இயைபுபட்டிருத்தல் வேண்டும்.

பெருமகன் ஒருவனுக்கு உற்ற ஒழுக்கம் ஒன்று உண்டு; அதுபோலப் புலவன் ஒருவனுக்கும் உற்ற ஒழுக்கம் ஒன்று உண்டு. அது முன்னவன் ஒழுக்கம் போல எளிதில் தெரியும் இயல்பினது. ஒருவன்பால்

சுவடிமணம் வீசும்; மற்றவன்பால் நல்லொழுக்கமணம் வீசும். மற்றவனுக்கு ஆடை அழகுடை ஆதல்போல ஒருவனுக்குக் கருத்துக்களே அழகுடையாம். பெரு மகன், தான் பிறரால் நன்கு கருதப்படத் தக்கவன் என்பதைத் தன்னுடைய நன்னடையால் புலப்படுத்து கின்றான்; புலவன் அவனது நன்னடையால், கருத்துரி மையும் தன்மானமும் கொள்ள அவனுக்குத் தகுதி இருப்பதைப் புலப்படுத்துகின்றான். ஒருவன் சிறந்த நண்பில் பழக்கப்பட்டவன்; மற்றவன் சிறந்த நூலாக் குவோருடன் நெருங்கிப் பழகுவதில் காலம் செல வழித்தவன். ஒருவன் நடையில் கீழ்த்தரமுள்ளது யாதொன்றும் இலது; மற்றவன் சொல்லில் உறுத் தும் பான்மையது யாதொன்றும் இலது. ஒருவன் கூட்டத்தில் உள்ளார் யாவரொடும் உற்றுப் பழகும் தோற்றத்தை உடையவன்; மற்றவன் மெய்ம்மறந்து மனம் மறந்து தோன்றுபவன். ஒருவன் புதுப்பொருள் ஈட்டியோன்போலத் தற்சிறப்பு நடையுடன் தோன்றும் தான்றோன்றி அல்லன்; மற்றவன், அவனுக்கு முன் சென்ற மூதறிஞர் அறிந்தன யாவற்றையும் அறி யாது, அவன் அறிந்தனவே சாலும் எனக் கொள்ளும் தற்படிப்புப் படித்தோன் போல்வன் அல்லன். ஒருவன் ஓரொருகால் குடிப்பெருமை கொள்வதையும், மற்ற வன் ஓரொருகால் குற்றமற்ற கல்விப் பெருமை கொள் வதையும் நாம் பொறுக்க வேண்டும்.

# பிறப்பின் பெருமை

*[அடிஸன் எழுதிய 'ப்ரைட் ஆஃப் பர்த்' என்னும் கட்டுரையின் சுருக்கம்]*

ஃஹொரஸ், ஜுவனல், பாய்லோ (Horace, Juvenal, Boileau) ஆயவரும், ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய நேரில்லாப் பெருமை அடைந்த எழுத்தாளர்களும், ஒருவன் அவனுடைய முன்னோர்களால்விலேபெறுவதன் வீண்பெருமையை நகைச்சுவையும் நல்லறிவும் துளும்ப வெளிப்படுத்தியிருக்கின்றனர் ; உடனே, உண்மைப் பெருமை நற்பண்பால் பெறப்படுவதேயன்றிப் பிறப்பால் பெறப்படுவதன்று எனவும் புலப்படுத்த முயன்றிருக்கின்றனர். அத்தகைய பெரியோர் பலர்க்கும், யான் அடங்கி நின்றும், எண்ணுவது யாதெனில், அவர்கள் இப்பொருளேப்பற்றிச் சற்று மிகைபடமேவ மொழிந்திருக்கின்றனர் என்பதாம். நாம் இந்நாள் மிக்க மகிழ்ச்சியும் அறிவும் அறமும் பொருந்த வாழ்தற்கு ஏற்ற முயற்சிகளே அந்நாள் செய்த பெரியோர்க்கும், அவர்தம் நாட்டின் நலனேயும் பெருமையையும் உயர்த்திய பெரியோர்க்கும், வழித்தோன்றல்களாக வந்துள்ள பின்னேரை நாம் நன்றி யறிவுடன் பெருமைப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேம். அன்றியும், இயற்கையாகக் கூறுங்கால், தாழ்வும் மறைவும் கொண்ட பெற்றேர் வழித்தோன்றலின், உடலில் நற்குருதி பாயும் தக்கோர் வழித்தோன்றலே பெருமை தங்கியோன் ஆதற்குச் சிறந்த வழியாம். இம்முன்னிலேகளால் ஒளி மிகுந்த வழி முறையின் வந்த தக்கோன் ஒருவன், அவ்வாறு வாராத தக்கோன் ஒருவனின் உயர்ந்

தோனுக நன்கு எண்ணப்படுதற்கு உரியன். தம்பால் சிறப்புடைமை இலராய், தம் முன்னோர்களுடைய நற் பண்புகள் அளவால் பிறரால் அறியப்படுபவராய் இருப்பினும், உயர்குடியின் வந்தோரே கீழ்மை வழி வந்த பொது மக்களினும் பெருமையோடு கருதப்படு தற்கு உரியர்.

இவ்வாறு பெற்றோர்க்கும் பிறப்புக்கும் தக்க பெருமை வகுத்து வைத்த பிறகு, உரிய அளவுக்கு மிகைபட இத்தகைய பெருமையை அவர்க்கு உரித் தாக ஆணவத்துடன் மேற்கொள்ளும் தகவிலரைப் பற்றி யான் முன்னறிக்கை கொள்ள வேண்டும். பிறப் பும் குடியும் ஒருவற்கு உயர்வும் ஏற்றமும் எய்து வித்தல் போன்று, ஒழுக்கமின்மையும் அறிவின்மை யும் ஒருவனது குருதியைக் குற்றப்படுத்துகின்றன என்பதையும், தகாச்செய்கை ஒருவனைக் கீழ்மைக்கும் தாழ்வுக்கும் உட்படுத்துகின்றது என்பதையும் ஏற்ற அளவு உணராதார் மேற்கூறப்பட்ட தகவிலரில் முதன் மைப்படுவார்.

நாட்டன்பர்களும் நாட்டு வீரர்களும் கொண்ட நீண்ட வரன்முறை வழியின் வந்த, தகுதியும் குறியும் அற்ற ஒருவனிலும், மிக்குயர்ந்த தகுதி வாய்ந்த புதிய வன் ஒருவன் மிகுந்த பெருமைப்படுத்தற்கு உரியனல் லன் என எண்ணுவோர், மேற்கூறப்பட்ட தகவிலரில் இரண்டாம் வகையராவர்.

பேச்சிலும் நடையிலும் அவர்தம் குடிச்சிறப்பைப் புலப்படுத்தும் தகாப்பான்மையரைப்பற்றி ஈண்டு நான் குறிப்பாகக் கருத வேண்டும். பெருங்குடியில் தோன்றின வீண் பெருமை உடையான், நன்மாறுத

னுக்குத் தகுதியற்ற கீழுயிர் போன்றவன். அவனுடைய நகைப்பிலும் தோற்றத்திலும் நோக்கிலும் அவனது பெருமைக்குரிய பழங்குடியின் குறிப்பு முனைந்து தோன்றுகின்றது. அவனுடைய நினைவில் எஞ்ஞான்றும் அவனது குடிப்பெருமையே குடிகொண்டிருக்கும். குடித்தரமும், குடிப்பிறந்தாருள் அவனது படித்தரமும், எக்காலும் அவன் மனத்துள் வைத்து ஆராயும் பொருள்களாம். எனினும், நம் நாட்டவரிடை ஓங்கி நிற்கும் நல்லறிவும், உலகியலறிவும், யாவரும் ஒத்த வகையில் கருதப்படவேண்டும் என்ற உண்மையறிவும் நிறைந்துள்ள மக்களிடை, மேற்கூறப்பட்டது போன்ற மனப்பான்மையைப் பெரும்பாலும் அழித்துவிட்டது. ஆயினும், பெண்டிர்பாலும், தாழ்ந்தவர்பாலும், முகப் புகழ்ச்சி செய்வார்பாலும் மிக்க பழக்கம் கொண்டார் பலர், பெறுதற்கு விரும்பி வலிந்து முயலும் அவ்வொரு முன்னிலையால் அவர்க்குரிய வணக்கத்தைப் பெருது ஒழிகின்றனர்.

தனது குடியின் சிறப்பே நிரம்பிய நெஞ்சினனுய் உள்ளான் ஒருவனைக் கண்டுகொள்ளுதலின் எளிது வேறின்று. தொட்டிற் பழக்கங்களே நிறைந்த மெலிந்த மனமுடையாரும், குறிக்கோள் அற்ற முறையில் வாழ்க்கை நடத்தப் பழக்கப்பட்ட இளைய ஒரு கருவினரும் (Brothers), பெருங்குடியில் உள்ள பணி செய்யும் கிழவர்களும் எக்காலும் அவர்தம் மனத்துள் குடிச் சிறப்பைப்பற்றியே எண்ணுவாராவர்.

கரு

# தொழிலும் உடற்பயிற்சியும்

[ஜோஸஃப் அடிஸன் எழுதிய 'லேபர் அண்ட் எக்ஸர் ஸைஸ்' என்னும் கட்டுரையின் சுருக்கம்]

"நோயற்ற உடம்பில் நோயற்ற மனம் வேண்டும்."

—ஜுவனல்

உடம்பாலாம் தொழில் இரு வகைப்படும்: ஒன்று, பிழைப்புக் கருதி ஒருவன் கீழ்ப்படுவது; மற்றொன்று, இன்பம் கருதி ஒருவன் மேற்கொள்வது. பின்னது தொழில் எனப் பெயர் பெருமல், பயிற்சி எனப் பெயர் பெறும்; எனினும், இரண்டுக்கும் உள்ள வேறுபாடு, அவை செய்யப்படுதற்கு ஏற்ற நோக்கங்களின் வேறு பாடேயாம்.

ஊர்ப்புற வாழ்க்கையில் இவ்விருவகைத் தொழில் களும் நிரம்பிய அளவில் உள. அம்முன்னிலையால் ஆங்கு வதியும் ஒருவனுக்கு நல்ல உடல் நலம் மிகுந்து இருக்கும். அதனுல், பிற வாழ்க்கை வகையில் அடையக் கூடிய இன்பத்தினும் மிகுந்த அளவு இன்பம் இவ் வாழ்க்கையில் அடைதல் கூடும். இவ்வுடலை நான், உயிரால் இயக்கப்படுதற்கு ஏற்றதொரு பொறியாகவே கருதுகின்றேன். இப்பொறி, குழல்களும் வடி கருவி களும் ஒன்றற்கொன்று பொருத்தப்பட்டுள்ள ஒரு மூட்டைக்கு ஒப்பிடத் தக்கது.

மானிட உடம்பு இவ்வாறு இருத்தலின், இதனை நன்கு வளர்த்தற்குத் தொழில் இன்றியமையாது வேண்டப்படுகின்றது.

உள்ளே உண்டாகும் வேறுவேறு சாறுகளை ஒன்று சேர்க்கவும், நன்கு கரைத்துப் பிரிக்கவும், கணக் கற்ற குழல்களையும் வடி கருவிகளையும் அழுக்ககற்றி வைக்கவும், கடின பாகங்களுக்கு நல்லுறுதி தரவும் உடம்பு பலகால் நகர்தலும் அசைதலும் வேண்டும். தொழிலும் பயிற்சியும் உடலுக்கு அத்தகைய நகர்வை யும் அசைவையும் தந்து, உள்ளுண்டாம் சாறுகளையும் புளிநீர்களையும், தக்க வாய்க்கால்வழிப்படுத்தியும்,கழிவு களை அப்புறப்படுத்தியும், இயற்கையொடு துணை நின்று உடம்புக்கு உரத்தையும் உயிருக்குத் தென்பையும் அளிக்கின்றன. அன்றியும், அவை மனத்தின் ஆற்றல் கள் யாவும் முனைப்புப் பெறவும் செய்கின்றன. இச் செய்கையால் அறிவுத் தெளிவும், கற்பனையாற்றலின் கலக்கமின்மையும் ஏற்படுவதுடன், அறிவுத்தொழில் நன்கு நடைபெறுதற்கு வேண்டிய சாறுகள் பிரிந்து தெளிந்து தொழிற்படுதலும் உண்டாம். தொழிலே னும் பயிற்சியேனும் இன்மையாற்றான், எஞ்ஞான்றும் அமர்ந்து படிக்கும் பான்மையோரும், அமர்ந்திருந்து நாடொறும் வேலை நடத்துவோரும் மண்ணீரல்நோயும் தென்பற்ற மனப்பான்மையும் பெறுகின்றனர். பெண் டிரும் அவை செய்யாமையால் எப்பொழுதும் துடி துடிப்புடனும், சீறி விழும் பான்மையுடனும் இருக் கின்றனர்.

நம் உடம்பின் நன்மைக்குப் பயிற்சி இன்றியமை யாமல் வேண்டப்படுவதன்றாயின், இயற்கை நம் உடம் பைப்பயிற்சிக்குஏற்றதாக அமைத்திராது. உறுப்புக்கள் மிக்க தொழில் பெற்றுள்ளமையாலும், மடக்குதலும் நீட்டுதலும் விரித்தலும் குறுக்கலும் ஆய பல அசைவு களுக்கு நெகிழ்ச்சியுடன் இசையும் பாகங்கள் உடம்பில்

அமைந்துள்ளமையாலும், அவைகொண்டு உடம்பை உரனுடையதாக்குதல் வேண்டும் என்பது புலனுகின்றது. அன்றியும், உரம் விரும்பி உடம்பின் உறுப்புக்களுக்கு வலிந்து பயிற்சி தருதல் ஏற்படாதவாறு இயற்கையாகவே எப்பொருளும் மானிடனுக்கு எளிதில் கிடைக்காவண்ணம் உலக வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கின்றது. செல்வமும் பெருமையுமன்றி, உணவும் உடையும் ஆயவையும் நெற்றி வேர்வை சிந்தக் கைத்தொழில் செய்வதனுலன்றி ஒருவர்க்குக் கிட்டா. கடவுட்செயல் பருப்பொருள்களைப் படைப்பினும், அவற்றைப் பயனுடைப் பொருள்களாக நாமே செய்துகோடல் வேண்டும். நிலம் விளைவு தருதற்கு முன் அதனிடத்துத் தொழில் செய்தல் வேண்டும். விளைந்த விளைவும் பயனுதற்கு முன் பல கைகளின் வழியாக மாற வேண்டும். பொருள்கள் செய்வோரும், வணிகரும், உழவரும் மாந்தரில் இருபதில் பத்தொன்பது பாகத்தினரைத் தொழிற்படுத்துகின்றனர். மிகுந்த ஒரு பாகத்தினர், தொழில் செய்யாரேனும், பயிற்சியேனும் செய்யாராயின், பிறர் போல நலத்துடன் வாழமாட்டாமல் மெய் வருந்துவர்.

இதனைப் படிக்கும் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் தக்க உடற்பயிற்சியாக யான் பரியேற்றத்தையே குறிப்பிடுவேன். என்னெனில், அஃது உடம்பின் பல பாகங்கட்கும் உறுப்புக்களுக்கும் தொழில் தருகின்றது; அன்றியும், உடல் நலம் மிகுதியாகக் கிடைப்பதற்குத் தக்கதாகவும் இருக்கின்றது. யான் நகரத்தில் தங்கி இருக்குங்கால், பரியேற்றம் பயில்வதற்குத் தக்க இடம் இன்மையால், உறையும் அறையிலேயே இருப்பெடை கொண்டு சற்று உடற்பயிற்சி செய்வது வழக்கம்.

ஆரவாரம் இன்றி அமைதியுடன் செய்யத் தக்கதாக லின், பிற வகைப் பயிற்சியினும் இதுவே என்னுல் நன்கு விரும்பப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர், நான் சற்றுக் கடினமான ஒரு வகைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தேன். அதனைச் செம்மையாக எழுதப்பட்ட ஒரு லாடின் நூலிலிருந்து கற்றேன். அதற்கு நிழற்சண்டை என்பது பெயர். இரு கைகளிலும் முனைகளில் ஈயத் தண்டுகள் நுழைக்கப்பட்ட இரு சிறு தடித்த தடிகளைக் கொண்டு, நிழலோடு பொய்ப்போராடல்தான் அப் பயிற்சி. அப்பயிற்சியால் மார்பு அகலும்; உறுப்புக்கள் வேண்டும் அளவு பயிற்சி பெறும். அன்றியும், கைச் சண்டை தரும் இன்பத்தையும் குத்துப் பெருமல், இதனுல் முழுதும் பெறலாம். வீண் வழக்கிலும் சொற் போரிலும் செலவழிக்கும் காலத்தை இவ்வாறு தம் நிழலோடு சண்டை செய்யும் ஒரு பயிற்சியில் கற்றவர்கள் செலவிடுவார்களாயின், நன்மையுண்டாம் என்பது என் எண்ணம். இதனுல், மண்ணீரலால் ஏற்படும் உணர்ச்சி உறக்கம் நீங்கி, அவர்க்கும் பிறர்க்கும் நன்மை ஏற்படும்.

நான் உடலும் உயிருமாகையால், உயிரைக் கல்வியாலும் நினைப்பாலும் பயிற்சியுட்படுத்துவதுபோல, உடலையும் நாடொறும் தக்க தொழிலிலேனும் பயிற்சியிலேனும் ஈடுபடுத்துதல் நான் செய்தற்கேற்ற இரு வகைக் கடனில் ஒன்ருகக் கருதுகின்றேன்.

## ‘ஆறுவது சினம்.’

**‘சுருங்கச் சொல்லல்’** என்பது எம்மொழியிலும் ஒரு சிறந்த இலக்கிய ஆக்க - அழகாகக் கருதப்படுவது. இது தமிழில், ‘நூலிற் கழகெனும் பத்தில்,’ முதலில் வைக்கப்பட்டது. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் இவ்வழகை நன்கறிந்து, தங்கள் நூன்முயற்சியில் தகுதியோடு பயன்படுத்திஞர்கள்.

பொருட்செலவில் ஆடவரிலும் மடவாரே சுருக்க முடையராதல் போல, சொற்செலவிலும் அன்னவரே முன்னவரிலும் சுருக்கமுடையர் என்று ஒருவாறு கூறக்கூடும். அக்கூற்று, தமிழ்க் கிழவியாரான அவ்வை யாரின் அளவில் மிகவும் பொருந்தும். என்னே ? திருக்குறளின் சிறப்பைக் காட்ட எண்ணிய இடைக்காடர்,

**‘கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்.’**

என வரைந்தார். ஈண்டு, திருக்குறள் ஒரு கடுகுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இதே திருக்குறளின் சிறப்பைக் காட்ட எண்ணிய அவ்வையார் கடுகு, எள் முதலியவற்றுள் ஒன்றுக்குத் திருக்குறளை ஒப்பிட விரும்பாமல், மேலும் பகுத்தற்காகாத நுண்மையுள்ள அணுவுக்கே அந்நூலை ஒப்பிட்டு,

**‘அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்.’**

என்று வரைந்தார். ஆகலான், சுருங்கச் சொல்லல் என்னும் திறமிக்க நூற்செய்முறையில் அவ்வையார் பெரிதும் விருப்பம் கொண்டவர் என்பது குறிப்பு.

அன்றியும், அவ்வையார் இயற்றின நூல்களைப் பயிலுங் கால், சொற்சுருக்கத்தில் பொருட்பெருக்கத்தை ஐய மின்றி எதிர்பார்த்தல் வேண்டும் என்னும் கருத்தும் உடனே குறிப்பாகத் தெரியக் கிடக்கின்றது.

இக்கருத்துப்பற்றி, ஈண்டு '**ஆறுவது சினம்**,' என் னும் அறிவுச் சொற்ருெடரின் நுணுக்கங்களை ஆய்ந் தறிய முயல்வாம் :

'**ஆறுவது சினம்**' என்பது, '**ஆறும் தன்மையது சினம்**' என்று பொருள் தந்து, சினத்தின் தன்மையைக் கூறும் கூற்ருய் நிற்கின்றது. எனினும், கிழவியாரின் கருத்து யாதெனில், 'சினம் இயல்பாகவே தணிவதாதலின், சினம் கொண்டார் அதனைத் தணியவிடாமல் மூளவிடு வது கூடாது,' என்பதாம். அற்ருயின், பொருள் புறந் தோன்ற, **ஆற்றுவதுசினம்** என்றே கூறியிருத்தல்வேண்டு மெனில், அது பொருந்தாது. என்னை? அத்தகைய கூற்று, சினம் தானே ஆறுதல் அரிது எனவும், அதனை ஆற்றிக்கொள்ளுதலே தகுதி எனவும் பொருள் தருமாக லானும், அப்பொருள் உண்மை நவிற்சி ஆகாதாக லானும் என்க. மற்றீண்டு, நுனித்தறிய வைக்கப்பட்ட கிழவியாரின் கருத்து யாதோவெனில், 'தானே ஆறும் தன்மையை உடைய சினத்தை ஆற விடாமல் வெம்மை சேர வைத்திருத்தல் அறிவுடைமை ஆகாது,' என்ப தாம் என்க. இதனையே **முன்றுறையரையர்** தம் **பழமொழி நானூறு** என்னும் அரிய நூலில் வெளிப் படையாக வரைந்துள்ளார். அச்செய்யுள்,

> '**ஆருச் சினத்தன் அறிவிலன்; மற்றவனை**
> **மாறி ஒழுகல் தலையென்ப;—ஏறி**
> **வளியால் திரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப!**
> **வெளியானைத் தேறல் அரிது.'**

என்பது. ஈண்டு, '**ஆருயிர்த்தன் அறிவிலன்**' என்பது நம் கருத்தை வலியுறுத்துவது காண்க!

சினம் தானே ஆறும் தன்மையை உடையது எனவும், அதனை ஆறவிடுவது நல்லது எனவும் மேற்கண்ட கருத்துக்களையே **நாலடியார்** வெண்பா ஒன்று சிறப்பாகக் குறிக்குமாறு, ஈண்டு ஓர்ந்தறிதற்கு உரியது. அவ் வெண்பா,

> **'நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி**
> **கெடுங்காலம் இன்றிப் பரக்கும்;—அடுங்காலை**
> **நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே**
> **சீர்கொண்ட சான்றோர் சினம்.'**

என்பது. இச்செய்யுளின் பிற்பாகத்தில் அமைக்கப் பட்ட உவமையில் ஒரு நுண்ணிய கருத்தைச் செய்யுளாக்கியோர் உய்த்துணர வைத்திருக்கின்றார். அது பின் வருவது :

அடுங்காலை நீர் மெல்ல மெல்லவே வெப்பம் கொள்ளும்; ஆயின், ஆறுங்கால் விரைவில் ஆறிவிடும். அதுபோலச் சான்றோர் நேர்பாடுற்ற போது பையப் பையவே சினம் கொள்ளுவார்; எனினும், அச்சினம் விரைவில் தணியப் பெறுவர். விரைவில் சினத்தைத் தணிய விடவேண்டும் என்னும் இச்சிறந்த நுண்ணிய கருத்தின் குறிப்புறவே கிழவியார் **சினம் ஆறுவது** என்பது போன்ற யாதானுமொரு தொடர் அமைக்காமல், விரைவுடன் '**ஆறுவது**' என்னும் சொல்லை முன் வைத்து, '**ஆறுவது சினம்**,' என்று வரைந்தார். இது நிற்க.

**கதம்**, **வெகுளி**, **சீற்றம்**, **சினம்** என்பன ஒரு பொருட்சொற்களாக, அவற்றுள் கிழவியார் **சினம்**

என்னும் சொல்லை எடுத்தாண்டதன் கருத்து அறிதற் குரியது. **ஆறுவது கதம்** என்றுதல், **ஆறுவது வெகுளி** என்றுதல், **ஆறுவது சீற்றம்** என்றுதல் அமைக்காமல் '**ஆறுவது சினம்,**' என்றே அமைத்தமையால், விரைவில் ஆறும் தன்மையதான சினத்துக்கே **சினம்** என்பது பெயர் எனவும், அவ்வாறு ஆறுதது வேறு பெயரது எனவும் கிழவியார் குறிப்பித்தவாறும். மேற்காட்டப் பட்ட **நாலடியார்** வெண்பாவில் **நீசர் வெகுளி** எனவும், **சான்றோர் சினம்** எனவும் வந்த சொல்லாட்சிகள் எம் கருத்தை வலியுறுத்துகின்றன.

[ஆங்கிலத்தில் Anger, Wrath, Rage, Ire என்னும் ஒரு பொருட்சொற்கள் அப்பொருளின் பல திறங் களை உணர்த்துவன ; அவ்வாறே, தமிழிலும் **கதம், சினம், சீற்றம், வெகுளி, காய்ச்சல்** என்னும் ஒரு பொருட் சொற்கள் அப்பொருளின் பல திறங்களை உணர்த்து வன என்று அறிய வேண்டும்.]

# கரு

# உட்பாடு

## (Instinct)

**உட்பாடு என்பது ஒரு நுண்ணிய உள்ள எழுச்சி.** அது பல வகைப்படும். அஃது உள்ளத்தின்கண் யாதொரு முயற்சியுமின்றித் தோன்றுவது. அது புறப் பொருள் சார்பு பற்றி நிகழும். அவ்வாறு நிகழும் ஞான்று **யாதாமொரு மெய்ப்பாட்டினை உடன் தோற்றுவிக்கும்.** பின்னர் எச்சார்பு பற்றி எழுந்ததோ, அச்சார் பினை அடையுமாறு **உடலைத் தொழிற்படுத்தும்.** அதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவோம்:

வனத்தின் வழியாகச் செல்வாளொருவன் ஒரு வேங்கையைக் கண்ணுறுகின்றான். உடனே சிறிதும் கால இடையீடின்றி அவன் உளத்தே ஓர் உட்பாடு எழுகின்றது. அதன் தன்மையைச் சுட்டியறிய நமக்கு இயல்வதில்லை. அவ்வுட்பாடு அச்சம் என்னும் மெய்ப் பாடாகத் தொடர்ந்த பின்னரே சுட்டறிவுக்கு உட் படுகின்றது. இஃது இயற்கையின் அமைப்பு. இவ் வாறே **ஒவ்வொரு மெய்ப்பாட்டுக்கும் அடிப்படையாக ஒவ்வோர் உட்பாடு உண்டு.** தன்னைத் துன்புறுத்தின சிறுவனைக் காணும் போதெல்லாம் பூனைக்கு ஓர் உட் பாடு உண்டாகின்றது. இவ்வுட்பாடு உடனே சினம் என்னும் மெய்ப்பாடாக மாறுகின்றது. ஓர் இளம் பசுவைக் கண்டவுடன் சேங்கன்றுக்கு ஓர் உட்பாடு எழுகின்றது. உடனே அவ்வுட்பாடு காமம் என்னும் மெய்ப்பாடாக மாறுகின்றது. பின்னர்க் கூட்டுறவுக்

குரிய தொழிற்பாடு நிகழ்கின்றது. எனவே, புறப்பொருள் சார்பால் முதற்கண் உட்பாடு தோன்றி, அதன் பின் மெய்ப்பாடு எழுச்சியுற்று, அதன் பின்னரே தொழிற்பாடு நிகழ்கின்றது என்பது தெளிவு.

## உட்பாட்டு வகைகள்

மாந்தர்க்கு இயல்பாய உட்பாடுகள் மூவகைப்படுவன. அவை முறையே,

1. தற்சார்பின் உட்பாடுகள்
2. இனச்சார்பின் உட்பாடுகள்
3. புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகள்

என்பன. ஆங்கிலத்தில் அவை முறையே,

1. ஸெல்ப் இன்ஸ்டிங்ட்ஸ் (Self Instincts)
2. ஹெர்ட் இன்ஸ்டிங்ட்ஸ் (Herd Instincts)
3. ஸெக்ஸ் இன்ஸ்டிங்ட்ஸ் (Sex Instincts)

எனப்படும். இம்மூவகை உட்பாடுகளும் மாந்தர் உளத்தே ஆழ்ந்து ஊன்றி நிற்பன. இவைகளை மும்முதற் பேருட்பாடுகள் எனக் கூறலாம். ஆங்கிலத்தில் இவைகளை 'தி த்ரீ க்ரேட் ப்ரைமரி இன்ஸ்டிங்ட்ஸ்' (The Three Great Primary Instincts) என்பர். இம்மூவகை உட்பாடுகளுள் ஒவ்வொன்றும் பல கூட்டு நிலைமைகளைத் தோற்றுவிக்கும். 'கூட்டு நிலைமை' என்பது, ஆங்கிலத்தில் காம்ப்ளெக்ஸ் (Complex) எனப்படும். இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவோம்:

வேளாளன் ஒருவன் தொழிற்றன்மை பற்றி வேளாள இனத்துடன் சார்ந்திருப்பான் ; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான், அறவோர் இனத்துடன் சார்ந்திருப்பான் ; அரசியல் கொள்கையான்

பொது உடைமையாளர் இனத்துடன் சார்ந்திருப்பான்; ஆகலான், இனச்சார்பின் உட்பாடு ஒன்றேயாயினும், அவ்வுட்பாட்டுக்கு உட்பட்ட மைந்தன் ஒருவன் தொழில்பற்றியும் கொள்கை பற்றியும் பல இனச்சார்புடையனுய் இருப்பன் என்பது தெளிவு. இது பற்றியே, முன்னர் ஒவ்வோர் உட்பாடும் பல கூட்டு நிலைமைகளைத் தோற்றுவிக்கும் என்றது.

சில உளநூற்புலவர் உட்பாடுகளைப் பன்னிரண்டாகப் பிரிக்கின்றனர். இவ்வுட்பாடுகளின் முதிர்ச்சிகளாகிய பன்னிரண்டு மெய்ப்பாடுகளையும் அவர்கள் குறித்திருக்கின்ருர்கள். அவை கீழ் வருவன :

| எண் | உட்பாடுகள் | மெய்ப்பாடுகள் |
|---|---|---|
| 1 | ஓட்டம் | அச்சம் |
| 2 | எதிர்ப்பு | சினம் |
| 3 | நீக்கம் | வெறுப்பு |
| 4 | வியப்பு | விந்தை |
| 5 | தன்னுறுதி | இறும்பூது |
| 6 | தன்னிழிவு | சிறுமை |
| 7 | தாய்மை | மென்மை |
| 8 | மக்கட்பேற்று வேட்கை | காமம் |
| 9 | உணவூட்டல் | |
| 10 | இனச்சார்பு விழைவு | |
| 11 | பொருள் திரட்சிவிழைவு | |
| 12 | ஆக்க விழைவு | |

இறுதியில் கூறப்பட்ட நான்கு உட்பாடுகளுக்கு உரிய மெய்ப்பாடுகளுக்கு ஏற்ற பெயர்கள் ஆங்கிலத்திலாதல் தமிழிலாதல் இல. மேற்கூறப்பட்ட உட்பாடு

களும் மெய்ப்பாடுகளும் ஆங்கிலத்தில் கீழ் வருமாறு பெயர் பெற்றிருக்கின்றன:

| No. | Instincts | Emotions |
|---|---|---|
| 1 | Flight | Fear |
| 2 | Pugnacity | Anger |
| 3 | Repulsion | Disgust |
| 4 | Curiosity | Wonder |
| 5 | Self-assertion | Elation |
| 6 | Self-abasement | Subjection |
| 7 | Parental Instinct | Tenderness |
| 8 | Reproduction | Sex |
| 9 | Feeding | |
| 10 | Gregariousness | |
| 11 | Acquisition | |
| 12 | Construction | |

இனி, மேற்கூறப்பட்ட அமைப்பில் (Table) உள்ள சிலவற்றை விளக்கும் வழியான் உட்பாட்டின் உண்மைத் தன்மையைத் தெரிப்போம்:

உண்மை வீரன் ஒருவன் ஒரு சாலை வழியாகச் செல்லும் பொழுது தன்னெதிரில் எளியாரை வாட்டும் முரடன் ஒருவன் வருவதைக் காண்கின்றான். உடனே சிறிதும் கால இடையீடின்றி, அம்முரடனைப் புடைக்க வேண்டும் என்னும் உட்பாடு உண்மை வீரன் உள்ளத்தில் எழுகின்றது. இதுதான் மேலமைப்பில் **எதிர்ப்பு** என்றது. இவ்வுட்பாடு விரைவில் **சினம்** என்னும் மெய்ப்பாடாய்த் திரிகின்றது. யாதாமொரு கலையில்

பெரும்புலமை பெற்றவன் ஒருவன் அக்கலையறிவுள்ளார் குழுமியுள்ள அவையின்கண் தன் கொள்கைகளைக் கூறும்போது ஒரு திண்ணிய உறுதியுடன் கூற விழைகின்றான்: **தன்னுறுதி** என்னும் உட்பாடு அவன் உள்ளத்தில் எழுகின்றது; உடனே அது **இறும்பூது** என்னும் மெய்ப்பாடாய் மாறுகின்றது. தன் புலமையின் பெருமையை அறிந்தவனாதலின், அவனை மீறி அவனுள்ளத்தில் தன்னுறுதி என்னும் உட்பாடு எழுகின்றது. ஒரு பெரிய **அறவோனைக் காணும் ஆன்மவறியன் ஒருவன் உளத்தில் அவனை மீறித் 'தன்னிழிவு' என்னும் உட்பாடு எழுகின்றது.** பின்னர், அது **சிறுமை** என்னும் மெய்ப்பாடாய்த் திரிகின்றது. சாலையின் வழியாகச் செல்வானொருவன் சேய்மையில் கழைக்கூத்தாடி கூட்டத்தைக் காண்கின்றான். உடனே அவன் உள்ளத்தில் அக்கூத்தாடிகளின் திறமையைக் காண வேண்டும் என்னும் விழைவு எழுகின்றது. **வியப்பு** என்னும் உட்பாட்டுக்கு அவன் உட்படுகின்றான். பின்னரே அவன் **விந்தை** என்னும் மெய்ப்பாட்டினை நுகர்கின்றான்.

இனி, யாம் தொடக்கத்திற் கூறிய **மும்முதற் பேருட்பாடுகளுக்கும்**, பின்னர்ப் பேசப்பட்ட பன்னிரு உட்பாடுகளுக்கும் உள்ள இயைபு யாதென ஆராய்வோம். மும்முதற் பேருட்பாடுகளுள் ஒவ்வொன்றும் சில பல கூட்டு நிலைமைகளைத் தோற்றுவிக்கும் என்று முன்னர்க் கூறினோம். அக்கூட்டு நிலைமை வகைகளாவன:

1. **தற்சார்புக் கூட்டு நிலைமை**
2. **இனச் சார்புக் கூட்டு நிலைமை**
3. **புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை**

என்பன. இவை ஆங்கிலத்தில் முறையே,

**1. ஈகோ காம்ப்ளெக்ஸ் (Ego - Complex)**

**2. ஹெர்ட் காம்ப்ளெக்ஸ் (Herd Complex)**

**3. ஸெக்ஸ் காம்ப்ளெக்ஸ் (Sex Complex)**

எனப்படுவன. தன்னுறுதி என்னும் உட்பாடும், தன்னிழிவு என்னும் உட்பாடும் தற்சார்புக் கூட்டு நிலைமைக்கு இயைந்தன. இனச்சார்பு விழைவு என்னும் உட்பாடு இனச்சார்புக்கூட்டு நிலைமைக்கு இயைந்தது. தாய்மை என்னும் உட்பாடும், மக்கட்பேற்று வேட்கை என்னும் உட்பாடும் புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமைக்கு இயைந்தன. மற்ற ஏழு உட்பாடுகளும் பொதுவாகத் தற்சார்புக் கூட்டு நிலைமைக்கு இயைந்தனவே. என்னெனில், அவ்வேழில் உணவூட்டல் என்னும் உட்பாடு, உடல் வன்மைக்கு இன்றியமையாதது; ஒட்டமும் எதிர்ப்பும் தற்காப்புக்கு இன்றியமையாதன; நீக்கமும் வியப்பும் உள்ளத்தின் நன்னிலைமைக்கு இன்றியமையாதன; பொருள் திரட்சி விழைவு ஒருவனுடைய இன வாழ்வுக்கு இன்றியமையாதது; ஆக்க விழைவு உடற்காப்புக்கும் பொருட்காப்புக்கும் இன்றியமையாதது. பன்னிரண்டு உட்பாடுகளுள் தற்சார்புக் கூட்டு நிலைமைக்கு உரியன ஒன்பது. அவைகளைக் கீழ் வரும் அமைப்பால் விளக்கலாம்:

தற்சார்புக் கூட்டு நிலைமை

எதிர்ப்பு
வியப்பு
தன்னுறுதி
ஆக்க விழைவு
உணவூட்டல் - பொருள் திரட்சி விழைவு
தன்னிழிவு
நீக்கம்
ஒட்டம்

மேற்கூறப்பட்ட கூட்டு நிலைமைகள் மூன்றும் ஒன்றற்கொன்று முரண்பட்டு இயங்குவன. எவன் ஒருவன் உளத்தே அவை முரண்பாடின்றி இயங்கு கின்றனவோ அவன் அறத்தாற்றின் ஒழுகுவானாவன். இம்முப்பெருங்கூட்டு நிலைமைகளைப் பற்றிச் சில குறிப் போம்:

## தற்சார்புக் கூட்டு நிலைமை

## (The Ego - Complex)

முப்பெருங்கூட்டு நிலைமைகளுள் தலையாயது தற் சார்புக் கூட்டு நிலைமையேயாகும். இதன் தோற்றமும் மானிடப் பிறவியின் தோற்றமும் ஒரு காலத்தன. இதன் முதற்றோற்றம் **தன்னுணர்ச்சி** எனப்படும். இஃது ஆங்கிலத்தில் **ஸெல்ப் கான்ஷஸ்நெஸ்** (Self-Consciousness) எனப்படும். இக்கூட்டு நிலைமையின் முதலுறுப் புக்கள் **புலனறிவுகளே**. மற்ற உறுப்புக்களாவன, **எண் ணங்கள், மெய்ப்பாடுகள், பழக்கங்கள்** என்பன. இத்தற் சார்புக் கூட்டு நிலைமையைத் தூய்மைப் படுத்தும் வழி **சிந்தித்தல்** என்பது. இதனை ஆங்கிலத்தில் **ஸெல்ப் இன்ட்ராஸ்பெக்ஷன்** (Self-Introspection) என்பர். இதுவே, **கேட்டல், சிந்தித்தல், தெளிதல், அணைதல் என் னும் நாற்பால் முத்தி நெறியுள்** கூறப்பட்ட சிந்தித்தலாம். தற்சார்புக் கூட்டு நிலைமையில் **எண்ண முயற்சிகள்** (Conations) சில உள. அவையிற்றுள் மிக்க வன்மை யுடையன இரண்டு. அவை **வாழ்வெண்ண முயற்சி, ஆற்றலெண்ண முயற்சி** என்பன. ஆங்கிலத்தில் அவை **'வில் டு லிவ்'** (Will to live), **'வில் டு பவர்'** (Will to power) எனப்படுவன. எண்ண முயற்சியாவது, எண்ணத்தால் முயறல்.

‘எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.’

என்னும் வள்ளுவர் வாய்மொழி ஈண்டு உன்னற்பாலது. இனி ‘வாழ்வெண்ண முயற்சி’ என்பது, ‘நீடு வாழ எண்ணத்தால் முயறல்’ எனும்பொருட்டு; ‘ஆற்ற லெண்ண முயற்சி’ என்பது, ‘ஆற்றல் அடைய எண்ணத்தால் முயறல்’ என்னும்பொருட்டு. மேலும் சில எண்ண முயற்சிகள் உள. அவை **அறிவெண்ண முயற்சி, தொழி லெண்ண முயற்சி** முதலியன. ஆங்கிலத்தில் மேற்கூறப்பட்ட இரண்டும் ‘**வில் டு நோ**’ (Will to know) என்றும், ‘**வில் டு டூ**’(Will to do) என்றும் கூறப்படுகின்றன. தூய எண்ண முயற்சிகளால் உள்ளத்தைச் செம்மைப் படுத்த இயலும்.

தற்சார்புக் கூட்டு நிலைமை குழவிப் பருவம் முதற் கொண்டு முதுமைப் பருவம் வரை முதிர்ச்சியும் விரிவும் பெறுகின்றது. வாழ்க்கையில் யாதோர் இடுக்கணும் நேராமலிருந்தால், இக்கூட்டு நிலைமை ஒரு திண்மையை அடைகின்றது. இடுக்கண்கள் நிறைந்த வாழ்க்கை பெற்றவனுடைய தற்சார்புக் கூட்டு நிலைமை, ஆக்க மழிந்து சிதறிவிடுகின்றது. அறத்தாற்றின் நிற் பானுடைய தற்சார்புக் கூட்டு நிலைமை, தூய்மையிற் பெருகி, வன்மையில் ஓங்கி விளங்கும்.

## இனச்சார்புக் கூட்டு நிலைமை
## (The Herd - Complex)

மனிதன் யாண்டும் இனச்சார்பு விழைவினை உடையவனாவான். ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் **இனச்சார்பு விழைவு** என்னும் **உட்பாடு** உண்டு. இனத்தின்கண் எழுகின்ற உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளும்

மனிதனுடைய உள்ளத்தில் அவனை அறியாமலே பதிகின்றன. இப்பதிவு நேர்வதற்குக் காரணம், மனித னுடைய உள்ளத்தில் இனச்சார்பின் உட்பாடுகள் உள் ளமையே. இனச்சார்பு விழைவு (Gregariousness) என்பது மனிதன் தானே மேற்கொண்ட பழக்கங்களில் ஒன்றன்று; அவனுடைய உளப்பான்மையை ஆளும் கருவிகளில் ஒன்ரும்.

தேனீக் கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு தேனீயும் தனித்தியங்கமாட்டாது. ஓநாய்க் கூட்டத்தில் உள்ள ஒவ்வோர் ஓநாயும் தனித்தியங்கமாட்டாது. இனச் சார்பினுட்பாடு இக்கூட்டங்களை வன்மையுடன் பிணிக் கின்றது. ஆறறிவுடைய மக்களினத்தில் இவ்வினச் சார்பினுட்பாடு பரவியிருக்கின்றதே ஒழிய, மிக்க வன்மையுடன் பிணிப்பதில்லை. மனிதன்,இன நலத்திற்கு ஏற்ற முறையில் தன் தொழிற்பாடுகளை அமைத்துக் கொள்ளும் திறனுடையவனுதலின், அவன் தேனீப் போலவும் ஓநாய் போலவும் வலிய இனச்சார்பினுட் பாட்டுக்கு உட்படுவதில்லை. மக்களினத்தில் இனச்சார்பி னுட்பாடு **கொள்கைத் துறையில்** (Realm of ideas) மேம்பட்டிருக்கின்றது. ஒவ்வோர் இனத்தாரிடையும் காணக்கிடக்கின்ற **மூட நம்பிக்கைகள்** (Non - rational beliefs) இனச்சார்பினுட்பாட்டால் எழுந்தனவே. ஒவ்வொரு மனிதனும் பின்பற்றும் **ஒழுக்க நெறியும்** (Moral Laws) இனச்சார்பின் உட்பாட்டின் விளக்க மும் பயனுமாம். **ஒழுக்க உணர்ச்சி** (Moral Sense) என்று சொல்லப்படுவதும் மனிதன் தன் இனத்துடன் நன்முறையில் இயைபு பட்டிருத்தற்கு அமைந்த இனச் சார்பினுட்பாட்டின் நுணுக்கமே. ஒழுக்க நெறியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஒழுகல் என்பது, தனிமனிதன்

தன் இனத்தினுல் பெற்ற இனச்சார்பினுட்பாட்டின் ஆற்றலுக்கு அடங்கி நடப்பதாம்.

இனச்சார்புக் கூட்டு நிலைமை பல வகைப்படும். எடுத்துக் காட்டாக, ஒரு மனிதன் தன் உறவினரிடை ஓர் இனச் சார்புக் கூட்டு நிலைமையையும, தன் தோழ ஊழியரிடை ஓர் இனச்சார்புக் கூட்டு நிலைமையையும், தனக்கேற்புடைய அரசியற் கொள்கையரிடை ஓர் இனச்சார்புக் கூட்டு நிலைமையையும், தனக்கேற்புடைய **பெருநெறிக்** (Religion) கொள்கையரிடை ஓர் இனச் சார்புக் கூட்டு நிலைமையையும் பெற்றிருப்பான். ஒரு நாட்டு மக்களிடைக் காணப்படுகின்ற **செல்வர், நடு வகுப்பார், ஏழைக் குழுவினர்** (Aristocrats, Bourgeouis, Proletariats) என்று கூறப்படுகின்ற ஒவ்வொரு கூட்டத்தாரிடையும் ஒவ்வோர் இனச் சார்புக் கூட்டு நிலைமை உண்டு. இதனை **வகுப்பு உணர்ச்சி** (Class Consciousness) என்பர்.

இனச்சார்புக் கூட்டு நிலைமையின் மேல் நிலை, உலகம் முழுவதையும் தன்னுட்கொண்ட இனத்தின் பாற்பட்டதாகும். இவ்வினத்தை ஆங்கிலத்தில் '**ஓர்ல்ட் ஹேர்ட்**' (World Herd) என்பர். இந்நிலை எளிதிற் கைகூடுவதன்று. சில பேரறிவாளரின் உளங்களில் கொள்கை அளவாக இந்நிலை நிற்கின்றதே ஒழியச் செயற்கை முறையில் இன்னும் அமையவில்லை. எனினும், நாளடைவில் செயற்கை முறையிலும் ஏற்படும் என்பது திண்ணம்.

### புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை (The Sex-Complex)

புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை மூன்று சார்புகளால் ஆக்கப்பட்டது. அவை, 1. **உடல் தொடர்பு**

விழைவு, 2. உள்ளத் தொடர்பு விழைவு, 3. புணர்ச்சிப் பயன் விழைவு என்பன. தலைப்பட்ட புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமையில் இவை மூன்றும் முழுதும் இயங்கி நிற்கும். சில நிலைமைகளில் உடல் தொடர்பு விழைவின்றி உள்ளத் தொடர்பு விழைவு ஒன்றே இயங்கும். இதனை, ஆங்கிலத்தில் 'ப்ளேட்டானிக் ப்ரெண்ட்ஷிப்' (Platonic Friendship) என்பர். ஒருவன் மனைவி பிறனொருவனை விரும்புகின்றாள் ; ஆனால், அவனுடன் உடற்புணர்ச்சி கொள்ள விரும்பவில்லை. தன் கணவனிடத்து உடற் புணர்ச்சியின்பம் பெறுகின்றாளாதலின், இந்நிலைமை 'ப்ளேட்டானிக் ப்ரெண்ட்ஷிப்' என்பதன் சிறந்த எடுத்துக் காட்டாம்.

புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை, பெண்பாலா ரிடத்து, காமக் காலம் தொடங்கிக் குழவி கருவினுள் முதிருங்காலம் வரை நீடித்து நிற்கும். ஆண் பாலா ரிடத்து இது மிகச் சிறிது காலமே நிறகும்.

எந்தக் கணவன் மனைவியருடைய உடல் நிலை இயையும், உள்ள நிலையியையும் ஒத்திருக்கின்றனவோ, அவர்களுடைய வாழ்க்கை சிறந்து விளங்கும்.

இனி, புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமையின் சில வியக்கத் தக்க உண்மைகளை ஆராய்வோம் :

1. ஒருவன் தன் மனைவி மக்கள்பால் ஆழ்ந்த அன்பினனாகவே இருப்பன். இருப்பினும், காமக் கிழத்தியருடன் கூடி வாழவும் விழைவன். காமக்கிழத் தியர்பால் அவன் கொண்டுள்ள அன்பு, மனைவி மக்கள் பால் அவன் கொண்டுள்ள அன்பினொடு முரண் படாது. இவ்வுள்ள இயல்பு பெண்பாலார்பால் மிகுதியாகக் காணப்படுவதில்லை.

2. சிலர்க்குப் புணர்ச்சி விழைவு மிகைப்பட்ட அளவில் எழுவதில்லை. எனினும், அவர்கள் தங்கள் மனைவியரை விடுத்து, பழகியறியாப் புறப் பெண்டிரிடம் கூடியொழுக விழைகின்றார்கள். நெருங்கிப் பழகிய மனைவியர்பால் அவர்கள் பெறும் புணர்ச்சி இன்பம் பழகியறியாப் புறப்பெண்டிர் உறவால் பெறும் இன்பத்திற்கு மிகவும் குறைபட்டிருத்தலின், அவர்கள் பின்னவரின் புணர்ச்சிப் புது இன்பத்தையே விழைகின்றார்கள். எனினும், அன்னவர் தம் மனைவியரைப் பிரிந்து செல்ல ஒருப்படுவாரல்லர்.

3. ஒரு மனைவி தன் கணவனிடத்தே உள்ளன்பு கொண்டிலள் எனினும், அவனுடன் கூடியே வாழ்வாள்.

4. சில மனைவியர் கட்டழியா இளமையினராய் இருப்பினும், தம்முடைய மக்கள்பால் கொண்ட அன்பால், தம் கணவர் தம்மால் விரும்பப்படாதவரெனினும், அவர்களைப் பிரிந்து செல்ல உடன்படுவதில்லை.

மேற்குறிப்பிட்ட நான்கு உண்மைகளால் நமக்குப் புலனுவதொன்றுண்டு. அது புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமையின் பல திறப்பட்ட தன்மையேயாம். புணர்ச்சி விழைவு ஒருவனுக்காதல் ஒருத்திக்காதல் மிக்கெழினும் பிற சார்புகளால் அது அடங்கிவிடும் என்பதும் ஈண்டு உணர்தற்பாற்று.

இனி, மேலும் சில உண்மைகளை ஆராய்வோம்:

1. காம ஆற்றலும் காம விருப்பம் மிகுதியிற் கொண்டவர்கள் வேறு துறைகளில் தங்கள் உளவன்மையைச் செலுத்துவார்களாயின், அவ்வாற்றலால் ஆகும் உடல் துன்பத்தையும், அவ்விச்சையால் ஆகும்

உள்ளத் துன்பத்தையும் நுகராதொழிவர். எனினும், இது பலர்க்கும் இயல்வதன்று. காம விருப்பமும் காம வன்மையும் கழியப் பெருது நிறைவுற்று நிற்பவர், அவைகளால் பகற்கனவு, மனமாற்றம் முதலிய நிலைகளில் உழன்று துன்புறுவர்.

2. ஆண்பாலாருள் சிலர் தம் வாழ்க்கையில் எவ்வகையாலும் காம விழைவின் எழுச்சியின்றியே வாழ்கின்றனர். அங்ஙனமே, பெண்பாலாருள் சிலரும் தம் வாழ்க்கையில் எவ்வகைப்பட்ட காம விழைவும் எழுதலின்றி வாழ்கின்றனர். இஃது இவர்களுக்கு இயல்வது, காம விழைவினையும் காம வன்மையினையும் அடக்கி வேறு துறைகளில் செலுத்தும் விழைவாலும் வன்மையாலுமேயாம். அன்றியும், கசடறக் கற்று, உடலின் தன்மை நுணுக்கங்களைத் தெரிந்து, உளவியல்பினையும் செயல்களையும் நன்கு அறிந்து, புலனடக்கம், கரண அடக்கம் முதலிய சீரிய பழக்கங்களை மேற்கொண்டு நிற்பார்க்குப் **புணர்ச்சிச் சார்பின் உட்பாடு**களும், **புணர்ச்சிக் கூட்டு நிலைமை**யும் தோன்றுவனவாகா.

3. சில வாலிபர் தம் தோழர்களைக் கட்டி அணைத்து முத்தமிடுவதும், சில பருவ மங்கையர் தம தோழிகளைக் கட்டியணைத்து முத்தமிடுவதும் இந்நாள் காணப்படுகின்றன. இவை புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமையின்பாற்பட்ட தவருன ஒழுங்கங்களேயாம். ஆங்கிலத்தில் இவைகளை **ஹோமோ ஸெக்ஷுவல் மேனிபெஸ்டேஷன்ஸ்** (Homo Sexual Manifestations) என்பர். தமிழ் மொழியில் இவைகளை '**ஓரினப் புணர்ச்சி விழைவு எழுச்சிகள்**' எனக் கூறலாம். சில உளநூற்புலவர், ஒவ்வொருவருடைய உள்ளத்தும் **ஓரினப் புணர்ச்சிச் சார்புப் பகுதி** (Homo Sexual Component)

விகளை அழைப்பினும் குழவிகள் இவனை விரும்பி அணுகாமைக்குரிய **தன்மை** உள்ளவன் இவன்," எனவும் வழக்காற்றிலுள்ள பொது மாற்றங்களை நாம் மிகுதியும் கேள்வி வாயிலாக அறிந்திருக்கின்றோம்.

மேற்சென்ற எடுத்துக்காட்டுக்களில் கூறப்பட்ட **தன்மை**யே ஆங்கிலத்தில் **பெர்ஸனலிட்டி** எனப்படுவது. இத்தன்மையின் ஒரு வகையே இக்காலத் தமிழ் நாட்டு வழக்காற்றில் 'முகராசி' எனப்படுகின்றது. "**திருவுடை மன்னரைக் காணின், திருமாலைக் கண்டேனே என்னும்,**" என்ற இடத்தும், "**திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்,**" என்னும் **திருக்கோவையார் உரை**யிடத்தும் கூறப்பட்ட **திரு** என்பது, தன்மையின் உயர்வெல்லையாம். (Thiru is the culmination of Personality.) **திருவாளன்** என்னும் இறைப் பெயரும் நிறைந்த **தன்மை**யினைக் (Absolute Personality) காட்டுவதேயாம். (The word Thiruvalan signifies the absoluteness of Personality inherent in God-Hood.) திருக்கோவையார் உரையாசிரியர் திருவையும் தன்மையையும் இயைத்துக் கூறியது எம் கொள்கையை வலியுறுத்துகின்றது.

மேற்சென்ற எடுத்துக்காட்டுக்களில் உள்ள தன்மையின் வகைகளைத் திரட்டி அறியின், தன்மையின் ஆக்கம் சிறிது புலனும். இன்சொல்லாடல், பணிவு, பயனில மொழியாமை, பெரியாரைச் சார்ந்தொழுகல், அமைந்த உள்ள இயல்பு, வணங்கிய வாய்மை, நுணங்கிய கேள்வி, இன்முகத்தொடு கூடல் என்பனவும் பிறவும் தன்மையாக்கத்தின் பகுதிகளாம். "ஆயின், மேற்கூறப்பட்டவை யாவும் ஒழுக்கத்தின்பாற்பட்டவை ஆதலின், ஒழுக்கமுடைமையே தன்மை உடைமை

யாம் எனக் கூறல் அமையாதோ?" எனின், சிறிதே அமையுமன்றி, முழுவதும் அமையாதென்பதே துணிபு. என்னை? தன்மை என்பது நற்பண்புகளையாதல் தீய பண்புகளையாதல் தன்னுள் கொண்டிருத்தலன்றி யும், அவையிற்றின் வேருய், பிரித்தறிதற்கியலாத ஒரு சிறப்பையும் உடைத்தாயிருக்கின்றது. ஒருவற் குப் பல நற்பண்புகளிருந்தும் அவனைக் கண்ட வுடனே இவன் **வன்றன்மை** (Forceful Personality) உடையான் என்றுதல், இவன் **இன்றன்மை** (Pleasing Personality) உடையன் என்றுதல், இவன் **அச்சந் தரும் தன்மை** (Awe - inspiring Personality) உடையன் என்றுதல் துணிந்து கூறல் இயல்வதில்லை. எனவே, ஈண்டு, வெறும்பண்புக் கூட்டமே தன்மையாக்கமாம் எனத் துணிதல் ஏற்புடைத்தன்று. "ஆயின், தன்மையின் சிறப்பியல்புதானியாதோ?" எனின், அது கலையாராய்ச்சி அறிவிற்குப் புலனுகாத, நுகர்ச்சியினுக்கே (Experience) புலனும் ஒன்றும் எனவே கூறல் வேண்டும். மேனுட்டு உளநூற்புலவர்கள் நுண் பொருள்களையும் பருப்பொருள்களால் அறிய விழையும் இயல்பினர்களாதலின், நுகர்ச்சியின்பாற்பட்டவைகளையும் அறிவின்பாற்படுத்தி ஆராய்ந்தறிய விழைபவர்களாதலின், தன்மையின் இயல்பை ஒருவாறு துணிந்துள்ளார்கள். அஃதாவது, ஒருவனுடைய ஒழுக்க முறைகள் அவனிடத்துள்ள எச்சிறப்பினைச் சார்ந்து நிற்கின்றனவோ, அச்சிறப்பாம் தன்மையே தன்மை எனப்படும் என்பது. ஒருவனுடைய தன்மையைத் துணிய வேண்டின், அவன் பல காலத்தும் பல இடத்தும் ஒழுகின முறைகளையெல்லாம் ஓர்ந்தே துணிய வேண்டும் என்பது உளநூற்புலவர்தம் கொள்கையாம்.

temperament) எனவும் பேசப்படும் **உளமீதூர்வு மீப்பண்பு, உளஅயர்வு மீப்பண்பு** என்னும் மீப்பண்புகளும் உள.

பழைய உள்நூற்புலவர்கள் மீப்பண்புகளையும் மகனின் உடலிலுள்ள சில நீர்ப்பொருள்களையும் தொடர்புடையனவாகக் கருதியிருந்தார்கள், **குருதி** (Blood) மிகுதியாயுள்ளவர்கள் **துன்புறுத்தும் மீப்பண்பினர்கள்** (Individuals with a sanguine temperament) எனவும், **பித்த நீர்** மிகுதியாயுள்ளவர்கள் **சின மீப்பண்பை** (Choleric temperament) உடையவர்கள் எனவும், **சளி நீர்** மிகுதியாகயுள்ளவர்கள் **கூச்சம்** என்னும் **மீப்பண்பை** (Bashfulness or phlegmatic temperament) உடையவர்கள் எனவும், **மண்ணீரலின் நீர்ப்பொருளை** மிகுதியாகப் பெற்றுள்ளவர்கள் **உளச்சோர்வு** (Melancholic temperament) என்னும் **மீப்பண்பை** உடையவர்கள் எனவும் அவர்கள் கருதியிருந்தார்கள். நந்தமிழ் நாடடுத் தனி மருத்துவர்தம் கொள்கைகளும் ஈண்டு உன்னற்பாலன. **கோழை** (சளி அல்லது ஸ்லேஷ்மம்) உடலினன் தன்மைகளைக் கூற வந்த **தேரையர்**, "அறம் பொறை **நாணம்** மத்திய ஞாபகம்" எனக் கூறு மாற்றால், **சளி** நீருடையான் **கூச்சம்** என்னும் மீப்பண்பினையுடையான் எனத் தெரிந்திருக்கின்றமையும், "போதவே **கோப**முள்ளே பொருமினல் நாடி **பித்தம்**," என **அகத்தியர்** தம் **இரத்தினச் சுருக்கத்தில்** கூறுமாற்றால்," **பித்தநீர்** மிக்குடையான் **சினம்** எனும் மீப்பண்பை உடையான்," எனத் தெரிவித்திருக்கின்றமையும், '**ப்லீகம்** (Spleen) மலத்தையிறுக்கி **மந்திக்கும்**' என **அகத்தியர்** தம் **சம்பிரதாய வைத்தியம்** என்னும் நூலில் கூறுமாற்றால், **மண்ணீரலின் நீர்ப்பொருள் மந்தம்** என்னும் **உளச்**

சோர்வாம் மீப்பண்பினைத் தோற்றுவிக்கும் எனத் தெரித்திருக்கின்றமையும் நாம் அறியத் தக்கன.

இக்கால உளநூற்புலவர் சிலர் மீப்பண்புகளுக்கும், **எண்டொகிரைன் கிளாண்ட்ஸ்** (Endocrine glands) என்னும் **உட்சுரப்புறுப்புக்க**ளின் நீர்ப்பொருள்களுக்கும் தொடர்பைக் கற்பிக்கின்றனர். எடுத்துக்காட்டாகக் கூறுமிடத்துத் **தைராய்ட்** (Thyroid) என்னும் **உட்சுரப் புறுப்பு** மிகுதியாகச் சுரந்தால், ஒருவனுக்கு **முன் கோபம்** என்னும் **மீப்பண்பு** (Irritable temperament) தோன்றும் என்பது அவர் கொள்கை.

தன்மையின் உறுப்புக்களுட் சிறந்தது **அறிவாம்.** தெள்ளிய அறிவுடையான் **ஒள்ளிய தன்மையினன்** (Graceful Personality) ஆவான். அறிவுடையான் தன் சுற்றத்துடன் (Environment) ஒழுக வேண்டிய முறையில் ஒழுகுவான்: அவ்வாற்றான் தன் தன்மை நல்லாக்கம் அடையப் பெறுவான். ஆயின், அறிவிலாதான் தன் சுற்றத்துடன் ஒழுகலாற்றான் ஒழுகானாய்த் தன் தன்மையாக்கம் சிதைவுறப் பெறுவான். 'கூர்த்த அறிவுடையாரும் தன்மை நல்லாக்கமின்றி இருப்பக் காண்கின்றோமே?' எனின், அதன் அமைவு கூறுதும். கூர்த்த அறிவுடையாருட்சிலர் பள்ளிச் சிறாராய் இருந்த ஞான்று அவர்தம் பெற்றோரால் நன்கு வளர்க்கப் பெறாதவராவார். ஒரு தந்தை, தன் மைந்தன் கூர்த்த அறிவினனாயிருத்தலின் பிற சிறுவர்களுடன் அவன் பழகிக் கெடா வண்ணம் வளர்க்க வேண்டும் எனக் கருதி, மிகைபட அடக்கி வளர்ப்பானேயாயின், அம்மைந்தன் தன்மை நல்லாக்கம் பெறுமாறு யாது? பல்வகைச் சுற்றத்துடனும் பழகி, நன்மை தீமைகளைத் தன் அறிவாலும், பெரியாரின் கண்ணோட்டத்தாலும்

சில் வகை நிலைமைகளில் அக விழைவுத் தன்மையனு யும், பல்வகை நிலைமைகளில் புற விழைவுத் தன்மை யனுயும் நிற்கக் காண்கின்றோம். மற்றொருவன், சில் வகை நிலைமைகளில் புற விழைவுத் தன்மையனுயும், பல்வகை நிலைமைகளில் அக விழைவுத் தன்மையனு யும் நிற்கக் காண்கின்றோம். அன்றியும், புற விழைவுத் தன்மையருட்சிலர் சில்வகைப் புறப்பொருள்களை ஆராய விழைதலில்லை. எடுத்துக்காட்டாகக் கூறு மிடத்து, விலங்கினங்களை ஆராய விழைவார், மக்களு டைய உளப்பான்மை வகைகளை ஆராய விழைவதில்லை. மரஞ்செடி கொடியினங்களை ஆராய்வார், விலங்கினங் களையாதல் மக்களையாதல் ஆராய விழைவதில்லை. இன்ன நிலைமைகள் மேலும் பலவுள. ஆகலான், வரை யறைப்படுத்தி மக்களை மூவகைத் தன்மை முறையின் பாற்படுத்தல் ஏற்புடைத்தன்று.

உளநூற்புலவர் சிலர், தன்மை வகைகள் இரண் டென்பர். அவை, **சுழற்சித் தன்மை** என்பதொன்றும், **ஒழிவுத்தன்மை** என்பதொன்றுமாம். **சுழற்சித் தன்மை** என்பது, ஆங்கிலத்தில் **ஸைக்ளாய்ட் பெர்ஸனுலிட்டி** (Cycloid Personality) எனப்படும். **ஒழிவுத் தன்மை** என் பது, ஆங்கிலத்தில் **ஷிஸாய்ட் பெர்ஸனுலிட்டி** (Schizoid Personality) எனப்படும். சுழற்சித் தன்மையன், நிலையுள்ள பண்பில்லாதவனுவன். ஒரு பகல் கழிவதற் குள் அவன் பல மனப்பான்மைகளுக்கு ஆளாவான்; சில நாழிகை இன்பப் பான்மையுடனிருப்பன்; சில நாழிகை துன்பப் பான்மையுடனிருப்பன்; சில நாழி கை விருப்புப் பான்மையுடனிருப்பன்; சில நாழிகை வெறுப்புப் பான்மையுடனிருப்பன்; சில பொழுது இன்சொல்லாடும் இன்முகப் பான்மையுடனிருப்பன்;

சில பொழுது கடுஞ்சொல்லாடும் கடுமுகப்பான்மை யுடனிருப்பன். மனப்பான்மைகள் மாறி மாறிச் சுழன்று சுழன்று அவனது அகவொழுக்கத்துட் படு தலின், அவன் சுழற்சித் தன்மையன் எனப்படுவன். ஒழிவுத் தன்மையன், பிறரொடு புற வகையானும் அக வகையானும் கூடியொழுகாது ஒழிவுற்ற தன்மை யனுய் இருப்பன். மக்களுட்சிலர், தம் மனைவி மக் களுடனும் உரையாடார்; தம் இல்லம் நாடி வரும் விருந்தினரொடும் இன்முகமலர்ந்து இன்மொழி பக ரார்; தம் உற்ற நண்பரொடும் உரிமை மொழி கூறுர்; தம் அலுவற்கூடத்துள்ளாரொடும் உவகை மொழி உரையார்: இவர்தாம் ஒழிவுத் தன்மையராவர்.

ஒழிவுத் தன்மை என்னும் பெயரும், சுழற்சித் தன்மை என்னும் பெயரும் இரு வகைப்பட்ட பைத் திய நோய்களின் (Two kinds of Insanity) பெயர் களிலிருந்து கொள்ளப்பட்டனவாம். **சுழற்சிப் பைத் தியம்** கொண்டவனது மனநிலைமை, ஒரு பகலுக்குள் பலப்பலவாக மாறும். அவன் சில பொழுது பெருஞ் சிரிப்புச் செய்து ஆரவாரிப்பான்; சில பொழுது கண் ணீர் உகுத்து அழுவான்; சில பொழுது காதல் மொழி வரையின்றிக் கூறி மகிழ்வான்போலத் தோன்று வான்; சில பொழுது வருத்தந்தருஞ் செய்திகளையே கூறி உளம் துன்புறுவான் போலத் தோன்றுவான். எனவே, அவனது பைத்தியம் சுழற்சிப் பைத்தி யம் எனப்படும். **ஒழிவுப் பைத்தியம்** கொண்டவன், பிறரொடு கூடாமல் தனியிடத்திலிருந்து, மனித உணர்ச்சியின்றி, ஒரு வகைப்பட்ட சோர்வுடன், சோம்பலில் மூழ்கியிருப்பவன். இவனது உட்கரணங் கள் பிறரிடத்துத் தொழிற்படுதல் போலத் தொழிற்

கடப்பாடுகளும் மேலும் பெருக்கம் அடைகின்றன. இப்பெருகிய **கடப்பாடுகளை ஆற்றுமாற்றால் தனி மகனும் குழுவும் தன்மை ஆக்கம்பெறுகின்றனர்.** ஆயின், குழவிக்கும் ஒரு தன்மையுளதோ எனும் ஐயம் ஈண்டு எழும். குழுவிற்கும் தன்மையுண்டு; இறைப்பொருட்கும் தன்மையுண்டு என்பதே உளநூல் புலவர்தங் கொள்கையாம். (Note such sayings as "The whole army acted as one person.")

தொழில் வாழ்க்கையோடு இயைந்து மனவாழ்க்கை எழுங்கால், இல்லானும் இல்லாளும் ஐம்புலத்தார்க் காற்ற வேண்டிய கடப்பாடுகளும், அவ்வைம்புலத்தார் இல்லறத்தார்க்கு எதிராற்ற வேண்டிய கடப்பாடுகளும் பெருகுகின்றன. இக்கடப்பாடுகளை அவ்வவர் ஆற்றுமாற்றால் அவ்வவர்க்கும் எதிரவர்க்கும் தன்மையாக்கம் நிலைபெறு எய்துகின்றது.

இதுகாறும் கூறியவற்றால், ஒருவனது தன்மை ஆக்கமடையுமாறு நன்கு புலனாகின்றது. தனி மகனாய் ஒருவன் தன் மாட்டுப் பிறர் இன்னின்ன கடப்பாடுகள் ஆற்றற்குரியர் என எதிர் பார்த்தலும், தான் பிறர் மாட்டு இன்னின்ன கடப்பாடுகள் ஆற்றற்குரியன் என அறிதலும் ஆய இவ்விரு வகை முறையில் ஒழுகலாற்றான் ஒருவனது தன்மை தேற்றம் எய்துகின்றது என்பது துணிபு. தனி மகற்கும் குழுவிற்கும் இடையுள்ள உளச் சார்பான இயைபு அமைவு உடைத்தாயின் அன்றி, தனி மகனின் தன்மை ஆக்கம் அடையாது எனும் உண்மை ஈண்டு அறிதற்பாலது. (The Personality of an individual depends upon the adjustment (அமைவு) which he maintains with reference to the demands of society on him.)

## தன்மையின் அமைவின்மைகளும் அவையிற்றை அமைவு படுத்துமாறும்

## (Maladjustments in Personality and their treatment)

குழுவின் உளப்பான்மையுடன் தம் உளப்பான்மையை இயைபு படுத்த இயலாதார், அமைவிலாத் தன்மையினராவர். தன்மையின் அமைவின்மை (Maladjustments in personality) பல வகைப்படும். அவையிற்றுள் **(1) உண்ணிலைத்தன்மை, (2) தகவின்மைத் தன்மை, (3) சிற்றீட்டுத் தன்மை** என்பன மூன்று. இவை ஆங்கிலத்தில் முறையே (1) (Shut-in-personality, (2) Invalidism, (3) Poor compensation **(1. ஷட் இன் பெர்ஸனலிட்டி, 2. இன்வேலிடிஸ்ம், 3. பூர் காம்பென் ஸேஷன்)** எனப்படுகின்றன. தனி மகனுய தன்னிடத்திருந்து குழு எதிர் பார்க்கும் தன் கடமைகளை ஆற்ற இயலாதவனுய், அக்காரணம் பற்றிக் குழுவுடன் கலந்து வாழ மாட்டாதவனுய் நிற்பானெருவன், உண்ணிலைத் தன்மையனுவன். மிகுந்த செல்வம் படைத்தவன் ஒருவன், தன்னைச் சூழ்ந்து வாழும் பிறர் வறுமையாற் பீடிக்கப்படுவதை நன்குணர்கின்றுன் ; ஆயினும், ஒரு வாசியில்லாக் காசும் அவர்தம் அவ்வறுமையைப் போக்குவதிற பயன்படுத்த ஒருப்படுகின்றுனல்லன். தனது இச்செய்கையால் பிறர் தன்னை விரும்பார் என்பதை அறிந்து, அச்செல்வன் அப்பிறருடன் கலந்து வாழ மாட்டாதவனுய்த் தனித்து வாழ்கின்றுன். அவ்வாறு வாழுங்கால் அவனது உள வாழ்க்கையும், பிறர் உளங்களுடைய கலவி இன்மையான், தனித்த தொன்றுகின்றது. எனவே, அவனது தன்மை ஒரு

பயனற்ற உண்ணிலைத் தன்மையாகின்றது. ஓர் ஆராய்ச்சியாளன் பல்லாண்டுகள் பல்வகைக் கலைகளை ஆராய்ந்ததன் பயனாகக் கடவுளின்மைக் கொள்கையன் (Atheist) ஆகின்றான்; இக்கொள்கையினை முடிந்ததொரு கொள்கையாகவும் கருதுகின்றான். இன்னவன் தன் கொள்கைகளைப் பிறர்க்குப் பலகால் பன்னிப் பன்னிக் கூறியும், ஒருவரும் இவன் கொள்கையை ஏற்றுக்கொள்ளாமை கண்டு, உள்ளம் கவல்கின்றான்; அன்றியும், தன் கொள்கையைக் கொள்ளா யாவரையும் அறிவிலிகளாகக் கருதி அவர்களுடன் உளங்கலந்து வாழ இசையானாகின்றான். இவன் மொழி கேட்டாரும் இவனுடன் உளமியைந்து வாழ ஒருப்படுகின்றாரல்லர். எனவே, இவன் தனித்த வாழ்க்கையில் நிற்கின்றான். ஆகலான், இவனது தன்மையும் நல்லாக்கம் பெறுமாறின்றி, உண்ணிலைப்ப தொன்றாகின்றது. இவன் ஓர் உண்ணிலைத் தன்மையனாகின்றான்.

**தகவின்மைத் தன்மையை** இனி அறிதல் வேண்டும். ஒரு போர் வீரன் போர்க்களத்தில் நின்று மாற்றார்களைத் தன் சுடு கருவியால் சுட்டுவீழ்த்தத் தொடங்குகின்றான். அஞ்ஞான்று மாற்றார் அணியினின்றும் பல வெடிகுண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாய் அவனருகில் வந்து விழுந்து வெடிக்கின்றன. அந்நிகழ்ச்சியால் உண்டாம் மின்னொளிகளும் அதிரொலிகளும் அவனது கட்புலனையும் செவிப்புலனையும் மிக அயர்விக்கின்றன. அவ்வயர்வைப் பொறுக்க மாட்டாதவனாய் அவன் கட்பார்வை இழந்துவிடுகின்றான். அப்போர் வீரன் களத்துக்கு வரு முன்னர்த் தன் உயிரை இழக்கத் துணிந்திருந்தும, களத்தில் தனக்கு நேரக் கூடிய இன்னல்களின்

வகைகளையும் அளவினையும் நன்கு அறியாமையினுல், தன்னுல் எதிர் பார்க்கப்படாத வகையினதும் அளவினதுமாய இன்னல் நேர்ந்த ஞான்று, அங்கிலேயுடன் தன் வீரச் சார்பான உளப்பான்மையை இயைபு படுத்தத் தகவிலனுய், உளம் மருளவும், தன் வீரம் குன்றவும், அதனுல் தன் தன்மையாக்கம் சிதைவுறவும் பெற்றுத் தன் கட்பார்வையை இழந்துவிடுகின்ருன். போர் நிலைமை அப்போர் வீரன் மாட்டு உயரிய பான்மையுள்ள வீர உளத்திட்பத்தை எதிர் பார்த்திருக்க, அவன் அத்தகைய உளத்திட்பத்தைத் தோற்றுவிக்கும் தகவின்மையினனுயினமையின், தன் கட்பார்வையை இழக்க நேரிட்டது. சுருங்கக் கூறுமிடத்து, அவன் தகவின்மைத் தன்மைக்கு ஆளாய், அதனுலாம் கேட்டினைப் பெற்ருன் என்பது விளக்கம்.

**சிற்றீட்டுத் தன்மையை** இனி அறிதல் வேண்டும். **ஒரு வகையால் நேர்ந்த உளப்பான்மை சார் இழப்பினை ஈடு செய்யுங்கால் சிறுமையுள்ள வகையால் ஈடு செய்ய முயல்வார் தன்மை சிற்றீட்டுத் தன்மை எனப்படும்.** இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவாம் :

ஒரு செல்வச் செருக்குள்ள மனைவி, ஏழையாகிய தன் கணவன் என்றும் தனக்கு அடிமைப்பட்டு நிற்க வேண்டும் என்று விழைகின்ருள். கணவனே, அதற்கு ஒருப்படாமல், அவளை முற்றப் புறக்கணித்து நிற்கின்ருன். இஃது ஆற்ருத மனைவி, தான் விரும்பிய வகையில் தன்மை அமைவு பெற இயலாமைக்கு மனங் கவன்று, வேறு வகையில் உள நிறைவு பெறக் கருதிக் களவொழுக்கத்தில் ஈடுபடுகின்ருள். அஃதாவது, அவள் சிற்றீட்டுத் தன்மையள் ஆகின்ருள் என்பது. **நல்லிசை** அரிதிற்பெற முயலகில்லான் **பெருஞ்சுட்டு** எளிதிற்

பெறவே முயல்வான் எனும் பொருள்படும் 'He who cannot obtain fame can easily earn notoriety' என்னும் ஆங்கிலப் பொதுமொழி மேற்கூறப்பட்ட சிற்றீட்டுத் தன்மையை விளக்குவதேயாம்.

இனித் தன்மையின் அமைவின்மைகளை அமைவு படுத்துமாறு அறிவாம்: தன்மையின் சிதைவுகளை அமைவு படுத்தும் முறைகளைக் கூறும் நூல் ஆங்கிலத்தில் **ஸைக்கோ தெராபி** (Psycho-therapy) எனப்படும். இதனைத் தமிழில் **உளமருத்து நூல்** எனக் கூறலாம். உள மருத்துவத்தில் நாம் நன்கு அறியத் தக்கன இரண்டு உள. தன்மைச் சிதைவுள்ளவனது முழு உள வாழ்க்கையின் வரலாற்றை அறிந்து, அச்சிதைவு நேர்ந்ததன் காரணத்தைத் தெரிதல், ஒன்று: தன்மைச் சிதைவினனது நிகழ்கால உளப்பான்மையின் அமைப்பை நன்கு அறிந்து, அதை வருங்காலத்தில் சீர்படுத்தும் முறைகளை ஆராய்ந்து தெளிதல், பிறிதொன்று.

உள மருத்துவ முறைகள் பல உள. அவையிற்றுள் சிறந்தன சில. அவை ஆங்கிலத்தில்,

**1.** **ஸஜ்ஜெஷன்** (Suggestion)

**2.** **ஹிப்னடிக் ஸஜ்ஜெஷன்** (Hypnotic Suggestion)

**3.** **ஆட்டோ ஸஜ்ஜெஷன்** அல்லது **ஸெல்ஃப் ஸஜ்ஜெஷன்** (Auto - Suggestion or Self - Suggestion)

**4.** **கௌண்டர் ஸஜ்ஜெஷன்** (Counter Suggestion)

**5.** **ஸைக்கோ அனலிஸிஸ்** (Psycho - analysis) எனப் பேசப்படுகின்றன. தமிழ் மொழியில் இவை முறையே,

1. எண்ண ஏற்றம்
2. அறிதுயில் சார் எண்ண ஏற்றம்
3. தற்செய் எண்ண ஏற்றம்
4. எதிர் எண்ண ஏற்றம்
5. உள ஆராய்வு

எனப் பேசப்படும்.

## 1. எண்ண ஏற்றம்

ஒருவன் ஒரு வினை செய்யுங்கால் பல்வகைச் சார்புகளால் உளத்தளர்ச்சி அடைகின்றான். இந்நிலையை அவனால் நன்கு மதிக்கப்பட்டவன் ஒருவன் கண்டு, அவனை நண்ணி, '**இவ்வினையை மீண்டும் வலிதின் முயன்று செய்; இம்முறை நீ வெற்றி பெறுவாய்,**' என அன்புடன் கூறுகின்றான். இக்கூற்றினைக் கேட்ட முன்னவன் உள்ளத்தில் '**இம்முறை முயன்றால் உண்மையில் வெற்றி பெறுவோம்,**' என்னும் எண்ணம் ஏற்றம் எய்துகின்றது. இவ்வெண்ண ஏற்றத்தின் பயனாக அவன் தன் வினையை இனிது முடிக்கின்றான். ஒருவனுக்கு எண்ண ஏற்றத்தினால் உண்டாம் பயன் அவ்வெண்ண ஏற்றத்தினைத் தோற்றுவித்தவனது உள வன்மை, செந்தண்மை, பெருமிதம் முதலியவற்றுடன் இயைந்து நிற்கும். இவ்வுண்மையைச் சற்று விளக்குவாம் :

உலகத்தில் மாந்தரிடை நிகழும் உளத்தொடர்புகளுள் மதிப்பு என்பதொன்று. ஒருவன் பலர்பால் மதிப்பினைக் கொண்டுள்ளான் எனக் கொள்வோம். ஆயின், அவற்கு அப்பலர் மாட்டும் ஓரே அளவினதாய மதிப்பு நிலைப்பதில்லை.

ஒருவர் மாட்டு ஒரு பகுதி மதிப்பினைக் கொண்டுள்ள அவன் மற்றொருவர் மாட்டு இரு பகுதி மதிப்



3550

பினைக் கொண்டவனாய் இருப்பன்; பிறரொருவர் மாட்டு மூன்று பகுதி மதிப்பினைக் கொண்டவனாய் இருப்பன். அவன் உளத்தின்கண் மேற்கூறப்பட்ட மூவருள் முதல்வரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றம் இரண்டாமவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றத்தின் குறைந்த வன்புடையதாகவே இருக்கும். மூன்றுமவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றம் இரண்டாமவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றத்தின் மேற்பட்ட வன்புடையதாக இருக்கும். இது கண்கூடு.

ஆராய்ச்சி அறிவுடையார்க்கு, உலகியல் வாழ்க்கையில், இவ்வெண்ண ஏற்றத்தின்பாற்பட்ட பல நிகழ்ச்சிகள் நன்கு புலனும். நல்லாசிரியர்கள் தங்கள் மாணுக்கர்களைக் கல்வியறிவொழுக்கங்களில் தலை சிறந்தவர்களாகப் பழக்கும் முறைகளும், தங்கள் போர் மறவர்களால் மிக்கு மதிக்கப்பட்ட ஏறுதிகள் அம்மற வர்களைத் திண்ணிய வீரர்களாகப் பழக்கும் முறை களும், ஓவியம் முதலிய தொழில்களில் மிகுந்த ஆற்றல் பெற்றவர்கள் தங்கள் மாணுக்கர்களை அவ்வத்துறை களில் சிறந்தவர்களாகப் பழக்கும் முறைகளும், சீரிய யோகியர் தம் புது மாணுக்கர்களை அத்துறையில் பழக்கும் முறைகளும், சொல்வன்மையிற் சிறந்தவர் தம் நண்பர்களையும் மாணவர்களையும் அத்துறையில் தேர்ச்சி பெறுவிக்கக் கையாளும் முறைகளும், இன்னேரன்ன பிறவும் எண்ண ஏற்றத்தின்பாற்பட்டனவாம்.

எண்ண ஏற்றத்தின் வன்பு அதனைத் தோற்றுவித்தவரது உள வன்மை முதலியவற்றுடன் இயைந்து நிற்கும் என முன்னர்க் கூறினேம். எண்ண ஏற்றத்தின்

வன்பு பிறிதொரு சார்புடனும் இயைந்து நிற்கும். அச் சார்பாவது, எண்ண ஏற்றத்தை ஏற்பவனது உளப் பான்மையாம். சிலர் எண்ண ஏற்றத்தை எளிதில் ஏற் பவராய் இருப்பர்: அவர் உள மென்மையுடையவர். வேறு சிலர், எண்ண ஏற்றத்தை ஒருகாலும் ஏலாதவ ராய் இருப்பர்: அவர் உள வன்மையுடையவர். இனி, ஒருவரே ஒரு நிலையில் எண்ண ஏற்றத்தை எளிதில் ஏற்பர்; பிறிதொரு நிலையில் அதனை ஏலாதொழிவர்.

## 2. அறிதுயில் சார் எண்ண ஏற்றம்

ஒருவன் அறிதுயில் நிலையில் இருக்குஞான்று எண்ண ஏற்றத்தினை எளிதில் ஏற்கின்றான். இஃது உளநூற்புலவர் ஆய்ந்தறிந்த உண்மை. **அறிதுயில் என்பது உணர்வு விளங்கும் விழிப்பு நிலைக்கும், உணர்வு விளங்கா உறக்க நிலைக்கும் நடுவண் உள்ள ஒரு தனி உணர்வு நிலை** (Hypnosis is a passive and sleep like state that is nevertheles attentive and concentrated). இந்நிலையில் உள்ளவனுக்குப் புற வுணர்வு சிறிதும் இன்றெனினும், **அறிதுயில்ஏவியின்** (Hypnotiser) **உள ஆணைகளை** (Mental Commands) மட்டும் அறியும் தனி உணர்வு உண்டு. அறிதுயில் நிலையினனது உணர்வு விழிப்பு நிலையில் பலபடப் படர்ந்து இருந்தது போலன்றி, மிகவும் குறுகி, ஒரு புள்ளி அள விற்கு அஃகும். எனினும், அவ்வளவிற்கு அஃது ஆழ்ந்த தன்மையினதாய் நிற்கும். விளக்கிக் கூறுமிடத்து, அறிதுயில் நிலையினனது உணர்வின் தொழிற்பாடு அறிதுயிலேவியின் உளவாணைகளை அறிந்து அவற்றின் படி நடத்தல் என்னும் அவ்வொரே ஆற்றான் நிகழ்வ தெனினும், அந்நிலையில் ஏவியின் மிகவும் நுண்ணிய

உள ஆணைகளையும் அறிந்து அவையிற்றின்படி நடத்த லால், அறிதுயில் நிலையினனது அஃகிய உணர்வு ஆழம் உடைத்து என்பது போதரும்.

அறிதுயிலேவியின் ஆற்றல் யாவர்மாட்டும் ஒரே அளவினதாகச் செல்லாது. சிலரே எளிதாகவும் விரைவாகவும் அவனது ஆற்றற்கு உட்பட்டு அறிதுயில் நிலையை அடைவர். அவருள்ளும் சிலர், எளிதில் அந் நிலையினின்று நீங்குவர்; பிற சிலர் அந்நிலையினின்று அரிதில் நீங்குவர். இனி, அறிதுயில் ஏற்போனது உட னிகழ் உதவியின்றி அறிதுயிலேவியின் முயற்சி ஒரு சிறிதும் பயன் தாராது என்பதும் ஈண்டு அறியத் தக்கது.

அறிதுயிலைத் தோற்றுவிக்கும் வழிகள் பல. அவையிற்றின் அடிப்படையான படிமுறைகள் கீழ்க் கூறப் படுவன:

1. அறிதுயிலேற்பானது உளத்துள்ள பயனற்ற எண்ணங்களையெல்லாம் அறவே **உணர்வு வட்டத்தி லிருந்து** (from the circle of consciousness) நீக்கி, **ஏற்பு விருப்பு** (receptive attitude) என்னும் அமைதி சார்ந்த நிலையினைத் தோற்றுவித்தல் அறிதுயிலேவி யின் முதற்றொழில். இஃது **ஏற்பு நிலை தோற்றுவித்தலாம்.**

2. ஏற்பு நிலையைத் தோற்றுவித்த பின்னர் அறி துயிலேவி செயற்பாலது **எண்ண ஏற்றம் புரிதலாம்.**

அறிதுயிலினன் மாட்டு எண்ண ஏற்றம் புரிவதால் அறிதுயிலேவி ஆற்றும் வினைகள் இரு வகையினவாம். பல்வகை உள **நிலைமைகளைத் தோற்றுவித்தல்** ஒன்று; **சில்வகைத் தொழிற்பாடுகளைத் தோற்றுவித்தல்** பிறி தொன்று. முதல் வகையைச் சார்ந்த சில எடுத்துக்

காட்டுக்களை ஈண்டுக் கூறுவாம்: **அறிதுயில் இயக்குநன்** (Hypnosis-operator) என்னும் அறிதுயிலேவி, ஏற்பானது கையில் ஒரு தீய நாற்றமுள்ள பொருளைக் கொடுத்து, "**இஃது ஒரு நறுநாற்றமுள்ள மல்லிகை மலர்; இதனை நீ மோந்திடு,**" எனக்கூறி ஏவுதலும், அவன் அதனைப் பலகாலும் மோந்து இன்பமே நுகர்கின்றான். தன் கையிலுள்ள பொருள் நறுநாற்றமுள்ளது என எண்ணும் உளநிலைமையை ஏற்பானது உளத்தே ஏவி தோற்றுவித்தல் காண்க. இது நிற்க.

ஏற்பானை நோக்கி, '**உன் வலக்கை தன் புலனுணர்ச்சியை (Sensation) இழந்துவிட்டது. இனி உனக்கு ஊசிக் குத்தினால் நோய் தோன்றாது,**' எனக்கூறி, அவனது வலக்கையை ஊசிகொண்டு பலகால் குத்துகின்றான். ஏற்பான் ஒரு சிறிதும் நோய் நுகராமலே இருக்கின்றான். '**ஊசிக் குத்தினால் இனி நாம் ஒரு சிறிதும் நோய் நுகரமாட்டோம்,**' என எண்ணும் உளப்பான்மையை ஏற்பானிடத்தே ஏவி தோற்றுவித்தல் காண்க.

இனி இரண்டாம் வகையைச் சார்ந்த ஓர் எடுத்துக் காட்டினை ஈண்டுக் கூறுவாம்: ஏற்பானது கையில் இயக்குநன் ஓர் அட்டையாற் செய்யப்பட்ட வாளைக் கொடுத்து, '**இது கூரிய ஓர் எஃகு வாள்; இதனால் உன்னைச் சூழ்ந்து நிற்கும் பகைவர்களைத் தாக்கு,**' எனக் கூறி ஏவுகின்றான். ஏற்பான், உடனே யாதொரு தயக்கமுமின்றி, நாற்புறமும் வாளை வீசி, எவரையோ உண்மையில் தாக்குவதுபோல முனைந்து முயல்கின்றான்.

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும்வன்மையுள்ள ஆழ்ந்த அறிதுயிலில் மட்டே நிகழ்வன. மெல்லிய அறிதுயிலில் இயக்குநனால் ஆற்றத் தகுந்தது நோய் நீங்கக்

கருதிய எண்ண ஏற்றங்களைத் தோற்றுவித்தலேயாம். பேரச்சத்தால் விளைந்த **பேய் வலிப்பு** (Hysterical paralysis), எதிர்பாராத கொடிய நிகழ்ச்சியைக் கண்டதனால் நேர்ந்த கண்குருடு முதலிய நோய்களை அறிதுயில் சார் எண்ண ஏற்றத்தினால் நீக்குவது, தேர்ந்த அறிதுயில் இயங்குநரால் இயல்வதொன்றே. முதற்கண் நோயாளியை அறிதுயிற்படுத்தி, அவனது பழைய நுகர்ச்சிகளையெல்லாம் நினைவுபடுத்திக் கூறுமாறு ஏவி, அவன் கூறும் அவ்வுண்மைகளை ஆராய்ந்து, அதனால் நோய்ச் சார்புகளைத் தெளிந்து, அச்சார்புகளை அறவே ஒழிக்கும் புது எண்ணங்களை ஏற்பானுளத்தே வன்மையுடன் பலகால் ஏற்றினால், சிறிது சிறிதாக அவனது நோயைத் தவிர்த்தல் கூடும். இஃது **உள மருத்துவர்** (Psycho-therapists) பழகி அறிந்து கூறிய உண்மை. எனினும், சில உளமருத்துவர் இம்முறையால் ஆழ்ந்த நன்மை ஏற்படுவதில்லை எனக் கூறுகின்றனர். நோயின் முதற்சார்பை இம்முறையால் அறிந்து ஒழித்தல் இயலாது என அவர் கருதுகின்றனர்.

## 3. தற்செய் எண்ண ஏற்றம்

ஒருவன் ஓர் உயர்ந்த இடத்திலிருந்து கீழே விழுந்து விடுகிறான். விழுந்த அதிர்ச்சியால் அவனுடைய கால்கள் அசைக்க முடியாத நிலையில் இருக்கின்றன. இதைக் கண்டஅவன், "இனி இக்கால்கள் பயன்படாபோலும்!" என எண்ணுகின்றான். இவ்வெண்ணம் இடையறுது பலகால் எழுமாற்றால் அவனுடைய கால்கள் உண்மையாகவே பயன்படா நிலையை அடைகின்றன. தானாகவே செய்துகொண்ட (தற்செய்) எண்ண ஏற்றத்தால் அவன் தீங்கெய்தி நின்றான்.

ஒரு பள்ளி மாணவன் தன் பாடங்களையெல்லாம் நன்கு கற்றுத் தேர்வுக்குச் (**Examination**) செல்கின்றான். போகூழ் இருந்தவாறு அவன் தேர்வில் தவறி விடுகின்றான். அடுத்த முறையும் நன்கு தன் பாடங்களையெல்லாம் ஓதித் தேர்வுக்குச் செல்கின்றான்; மீண்டும் தவறி விடுகின்றான். எனவே, அவனுளத்தில், "**இனி எத்துணை முயன்று பாடமோதினும் நாம் தேர்வில் தேர்ச்சியுறுதல் இயலாது போலும்!**" என்னும் எண்ணம் ஏற்றமெய்துகின்றது, இறுதியில் அவன் தேர்ச்சியுறாமலே ஒழிகின்றான். தற்செய் எண்ண ஏற்றத்தால் அவன் தீங்குறுகின்றான். தற்செய் எண்ண ஏற்றத்தால் நன்மைப் பேறும் உண்டாம். "**இம்முறை முயன்றால் இவ்வினையைச் செய்தே தீர்வோம்,**" என்னும் எண்ண ஏற்றம் பலகால் இடையறாது நிகழுமாயின், எவ்வினையும் நன்கு ஆற்றப்படும். இவ்வுண்மையினையே **ஆசிரியர் திருவள்ளுவர்,**

***'வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்;***
***மற்றைய வெல்லாம் பிற.'***

என்னும் குறளில் விதந்தோதினார். இக்கால உளநூல் முறையில் தற்செய் எண்ண ஏற்றம் எனப்படுவது, பண்டைத் தமிழான்றோர் கூறியுள்ள **மனத்திட்பத்தின்** ஒரு படி முறையேயாம். இதனைத் திருவள்ளுவனார் '**திண்ணிய எண்ணமுடைமை**' என வேண்டுவர் போலும்! அன்றேல், '**எண்ணத் திட்பமுடைமை**' என வேண்டுவர் போலும்!

***'எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்***
***திண்ணிய ராகப் பெறின்.'***

என்னும் குறளை நன்கு ஆராய்வார்க்கு இது புலனும்.

## 4. எதிர் எண்ண ஏற்றம்

மாந்தருட்சிலர் விலக்கியனவே செய்தலில் விழைவுடையராய் இருக்கின்றனர். இத்தகையவருள் ஒருவன், தன் நண்பன் ஒருவனால் 'இவ்வினை இன்ன முறையாற்றான் செய்தற்பாற்று,' எனக் கூறப்படுவானாயின், அம்முறைக்கு நேர் மாறான முறையிலேயே அவ்வினையை ஆற்ற முயல்வன். அவன் தன் நண்பன் வாய்மொழியைக் கேளாதிருப்பின், அவ்வினையை நேர் முறையாற்றான் செய்திருப்பன். நண்பனது வாய்மொழியைக் கேட்டவுடன் அவனுள்ளத்தில், **"இவன் கூறும் முறைக்கு மாறான முறையால் இவ்வினையை ஆற்ற இயலாதோ! காண்பாம்!"** என ஒரு முரண்பட்ட விழைவு தோற்றமுறுகின்றது. **"வேண்டா என்பதை வேண்டும் எனச் செய்கின்றவன் இவன்,"** என்னும் பொது மாற்றம் உலகியலில் வழங்க நாம் காண்கின்றோம். இது மேற்கூறப்பட்ட உண்மையினையே புலப்படுத்துகின்றது. இது நிற்க.

இத்தகையவரது இன்ன தன்மையமைவின்மையை அமைவு படுத்தற்கு உளநூற்புலவர்கள் கண்டறிந்த ஒரு முறையே **எதிர் எண்ண ஏற்றம்** என்பது. இதனை ஓர் எடுத்துக்காட்டான் விளக்குவாம்: ஒருவன் சிலருடன் இணக்கங் கொள்ளும் தறுவாயில் இருக்கின்றான். அச்சிலரோ, மிகவும் தீய ஒழுக்கத்தினர். இதனை அறிந்த அவ்வொருவனது நண்பன் அவனைக் காக்க விரும்புகின்றான். வேண்டா என்பதை வேண்டும் எனச்செய்யும் தன்மை அவனுக்குண்டு என்பதை அந் நண்பன் அறிந்திருக்கிறான். எனவே, அந்நண்பன் அவனை நண்ணிப் பலகால், **"அவருடன் இணக்கங் கொண்டால் உனக்கு நன்மையுண்டு,"** என எதிர் எண்ண ஏற்றம்

புரிகின்றான். பலகாலும் இம்மொழியைக் கேட்ட முன்னவன், "**அவர் இணக்கம் இன்றேல் நன்மை உளதாகாதோ! காண்பாம்!**" எனத் தனதுள்ளத்துள் பன்முறையும் கருதத்தொடங்கி இறுதியில் அத்தீயவொழுக்கத்தினருடன் இணக்கம் கொள்ளாது ஒழிகின்றான். தாய் தந்தையர் மொழியை மீறும் குழவிகளைச் சீர்படுத்தற்கும் இவ்வெதிர் எண்ண ஏற்றம் மிகவும் பயன்படுகின்றது.

## 5. உள ஆராய்வு

**உள ஆராய்வு** எனத் தமிழ்மொழியிலும், **ஸைக்கோ அனலிஸிஸ்** என ஆங்கிலத்திலும் கூறப்படும் உள மருத்துவ முறையை மேனாட்டில் முதன்முதல் கண்டவர் **ஃப்ரூட் (Freud)** என்பவர். இவர் காட்டிய வழியில் உழைத்தவர்களுள் சிறந்தவர் **ஜங் (Jung), ஜேனட் (Janet), ஆட்லர் (Adler)** என்பவர். **எர்னஸ்ட் ஜோன்ஸ் (Ernest Jones) மாரிஸ் நிக்கால் (Maurice Nicoll), கான்ஸ்டன்ஸ் லாங் (Constance Long)** முதலிய சிலரும் **ஃப்ரூட்** ஆசிரியரைப் பெரும்பாலும் பின்பற்றினவர்களே.

உள ஆராய்வுக் கொள்கை தோன்றின காலந்தொட்டு இதுகாறும் அது வளர்ந்த வரலாற்றைக் கூறுவதெனின், அஃது ஒரு தனி நூலுக்குரிய பொருளாம். மிக மிகச் சுருங்கிய அளவில் அது சார்ந்த சில உண்மைகளை ஈண்டு மொழிவாம்: ஒருவனது தன்மைச் சிதைவினை ஒழித்து அவனுக்கு உள நல்லாக்கத்தைத் தோற்றுவித்தற்கு முதன்முதல் செயற்பாலது அன்னவனுக்கு அத்தன்மைச் சிதைவு நேர்ந்த தன் சார்புகளை அறிதலாம். அச்சார்புகளை அறிதற்கு ஏற்ற வழி அவனது உள்ளத்திருந்த பழைய நினைவு

களையெல்லாம் மீண்டும் உணர்வு வட்டத்திற்குக் (Circle of consciousness) கொணர்தலேயாம். உள்ளத்தின்கண் புதைந்துள்ள பழைய நினைவுகளை யெல்லாம் மீண்டும் புறப்படுத்தற்கு **ஃப்ரூட்** ஆசிரியர் மேற்கொண்ட வழி **ஃப்ரீ அஸோஸியேஷன் மெத்தட்** (**Free Association Method**) எனப்படும். இது தமிழில் **பிணையிலா இனநினைவு முறை** எனப்படும். **ஜங்** என்பார் கையாண்ட முறை **வொர்ட் அஸோஸியேஷன் மெத்தட்** (**Word Association Method**) எனப்படும். இது தமிழில் **சொல் இன நினைவு முறை** எனப்படும்.

அமைவில்லாத தன்மையையுடையானது பழைய நினைவுகளைத் தொடர்புடைய தகுந்த கேள்விகளுக்கு விடை கூறுவிக்கும் முகத்தான், மீண்டும் நிகழ்கால உணர்வு வட்டத்திற்குக் கொணர்ந்து, அந்நினைவுகளை ஆராய்ந்து, அத்தன்மை அமைவின்மைக்குரிய காரணங்களையறிதல் பிணையிலா இன நினைவு முறையின் பாற்படும். தன்மைச் சிதைவினன் முன்னரே தன்னை அணுகிக் கூறியிருந்த குறிகளையெல்லாம் நன்கு தெரிந்த உள ஆராய்வாளன் (Psycho-analyst), ஒன்றற்கொன்று நெருங்கிய இயைபும் தொடர்பும் உடைய ஒரு நீண்ட கேள்விக் கோவையைத் தன் மனத்தகத்தில் அமைத்துக்கொண்டு, பின்னர் அத்தன்மைச் சிதைவினனை ஓரிடத்தே ஓய்வு பெற இருத்தி, கேள்வியைக் கேட்குங்கால் அவனுக்குத் தோன்றும் எண்ணங்களை மறைக்காமல் கூறுமாறு அவனுக்கு அறிவுறுத்திப் பிறகு ஒன்றன்பின் ஒன்ருகப் பல கேள்விகளைக் கேட்கின்ருன். தன்மைச் சிதைவினன் எப்பொழுதேனும் தயங்குவதாக அவனுக்குப் புலப்படின், அவனது தயக்கத்திற்குரிய காரணத்தைக் கேட்டறிகின்ருன். இன்ன

வகையில் அத்தன்மைச் சிதைவினனது பண்டை நினைவு களையெல்லாம் நன்கு அறிந்து அவனது தன்மை அமை வின்மைக்குரிய காரணம் யாதாயிருக்கலாம் என உள ஆராய்வாளன் கருதுகின்றான். பல முறை ஆராய்ந்து இஃதே இதற்குக் காரணம் என ஒன்றைத் தெளிகின் றான். இனப்பட்ட பண்டை நினைவுகளை யாதொரு பிணைப்புமின்றி வெளிப்படுமாறு ஏற்ற கேள்விகளைக் கேட்கும் காரணத்தால், இம்முறை **பிணையிலா இன நினைவு முறை** எனப்படும். பல முறை உள ஆராய்வாளன் வினவும் வினாக்களுக்குத் தான் விடை கூறுமுகத் தானும், அவ்வப்போது அந்தவுள ஆராய்வாளன், 'இன்ன முந்திய நினைவால் இன்ன பிந்திய நினைவு நீ அறியாமலே உன் உளத்தே தோன்றி வளர்ந்தது,' என் பது போன்ற பல காரணங்களைக் கூறித் தன் தன்மைச் சிதைவினைத் தனக்கு விளக்குமுகத்தானும், ஒரு தன்மைச் சிதைவினன் தன் தன்மைச்சிதைவினுக்குரிய காரணங்களை அறிவதன்றியும், அவ்வறியு முகத்தான் சிதைவு ஒழிந்து தன்மை நல்லாக்கப் பேறும் எய்து கின்றான்.

இனிச் **சொல் இன நினைவு முறை**யைச் சற்று விளக் குவாம்: பொதுப்பட்ட வழக்காற்றிலுள்ள நூறு சொற்களை உள ஆராய்வாளன் தன் மனத்தகத்தே அமைத்துக்கொள்கின்றான்; பின்னர்த் தன்மைச் சிதைவினனை ஓய்வு பெற ஓரிடத்து இருத்துகின்றான்; பிறகு தான் கூறும் ஒவ்வொரு சொல்லிற்கும் தன் உளத்தே முதற்கண் எழும் இயைபுடைய ஒரு சொல் லைத் தயங்காமல் கூறுமாறு அச்சிதைவினனுக்கு அறி வுறுத்திப் பின்னர்த் தான் முன்னரே கருதியிருந்த சொற்களை ஒவ்வொன்றாகக் கூறி, அதனதனுக்கு மற்ற

வன் கூறும் இயைபுடைய சொல்லைக் குறித்துக்கொள்கின்றான்; அன்றியும், ஒவ்வொரு வினா விடைக்கும் இடைப்பட்ட கால இடையீட்டையும் குறித்துக் கொள்கின்றான். இவ்வாறு ஒரு முறை நூறு சொற்களையும் கூறி விடை பெற்ற பிறகு, மீண்டும் அவையிற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் கூறி, அதனதனுக்கு மற்றவன் முன்னர்க் கூறிய விடைச் சொல்லையே கூறுமாறு கேட்டுக் குறித்துக்கொள்கின்றான்; பின்னர்த் தன் குறிப்புக்களை ஆராய்கின்றான். ஆராய்ந்து சில உண்மைகளை அவன் அறிகின்றான்.

1. சில வினாச் சொற்களுக்கு விரைவில் இயைபுடைய விடைச் சொல்லைக்கூறும் தன்மைச் சிதைவினன் சிற்சில வினாச் சொற்களுக்குச் சிறிது காலம் தாழ்த்து இயைபுடைய விடைச்சொல்லைக் கூறுகின்றான். ஒரு வினாச்சொல்லை இருமுறையாதல் மும்முறையாதல் கூறிய பின்னரே, அவன் தன் விடைச் சொல்லை மொழிகின்றான்.

2. சில சமயங்களில் நான்கு அல்லது ஐந்து வேறு வினாச் சொற்களுக்கு ஒரு குறிப்பிட்ட சொல்லையே விடைச் சொல்லாக இயம்புகின்றான்.

3. சில சமயங்களில் அவன் முதன்முறை ஒரு வினாச்சொல்லுக்கு இயைபுடையதாகக் கூறிய ஒரு விடைச்சொல்லை மறு முறை அதே வினாச்சொல்லைக் கூறும்போது உரிய விடைச் சொல்லாகக் கூறாது ஒழிகின்றான்.

மேற்கூறிய உண்மைகளையும் அன்ன பிற உண்மைகளையும் உள ஆராய்வாளன் ஆய்ந்தறிந்து, தன்மைச் சிதைவினனது அச்சிதைவுக்குரிய காரணங்களைத் தேர்கின்றான்; தேர்ந்து, அவையிற்றை விளக்கமாக அவ

னுக்கு எடுத்து மொழிகின்ருன். தன் தன்மைச் சிதைவுக்குரிய காரணங்களை அதுகாறும் அறியாதிருந்த அவன் அவையிற்றை அறிந்த பின்னர், அச்சிதைவு அக்காரணத்தாலேயே நீங்கப் பெற்றுத் தன்மை நல்லாக்கப் பேறு எய்துகின்ருன்.

## தன்மையின் பிளவு
## (Disintegration of Personality)

எக்காலத்தும் எவ்விடத்தும் தம் தன்மையாக்கம் பிறழாது ஒருபடித்தாய் விளங்க நிற்பார் **தன்மைக்கட்டு** (Integrated Personality) உடையார் எனப்படுவர். அஃதிலார், **தன்மைப் பிளவு** உடையார் (Disintegrated Personality) எனப்படுவர். இதனை ஈண்டு விளக்குவாம்:

ஒருவன் தன் அலுவற்சாலையில் ஒரு தன்மை விளக்கத்துடன் இருப்பன்; தன் மனைவி மக்கள் சுற்றத்தாரிடைப் பிறிதொரு தன்மை விளக்கத்துடன் இருப்பன். அலுவற்சாலையில் தன் வேலையாட்களிடை உண்மையிலேயே மிகுந்த கொடுந்தன்மை இயல்பாகவே தோன்ற நிற்பானுய அவன், தன்னகத்தில் தன் மனைவி மக்களிடை இயல்பாகவே மிகுந்த இனிய தன்மை விளங்க நிற்பன். எனவே, அவனது தன்மையாக்கம் பிளவுடைத்தாகின்றது. இஃது உலகில் நாம் பல்லாரிடத்தும் காண்பதொரு நிகழ்ச்சியே. இது நிற்க.

ஒரு சிலர் தம் உணர்வு இன்றியே இரு வகைத் தன்மையினரராய் இருப்பவும் காண்கின்ருேம். இவ்விருவகைத் தன்மைகளுள் முதலதாகிய **வழக்குத் தன்மையில்** (Usual Personality) மிகவும் பொறுமை முதலிய நற்பண்புகளுடன் கூடியிருந்த ஒருவன், இரண்

டாவதாகிய முரண்தன்மை(Morbid Personality)மேற் படுங்கால் குறும்புமுதலிய தீப்பண்புகளுடன் கூடியிருக் கக் காண்கின்ருேம். மேற்பட்ட இம்முரண் தன்மை நீங்கி மீண்டும் வழக்குத் தன்மை மீறுகின்ற காலத்து, அவன் முன் தன்மை நிலையில் செய்த குறும்புச் செயலை முற்றும் மறந்தவனுகின்ருன். அவனுடைய உளத்தில் இரு வகைத் தன்மைகளும் உடனுறைகின்றன என் பதும், ஓரொருகால் முரண் தன்மை மேற்படுகின்றது என்பதும், அஞ்ஞான்று அவன் செய்த வினைகளை மீண்டு வழக்குத் தன்மை தோன்றின காலத்து அவன் மறந்துவிடுகின்ருன் என்பதும் ஈண்டு அறியத் தக்கன.

## கீழுள்ளம்
## (The Unconscious)

தன்னைச் சூழ்ந்து உள்ளார் யாவராலும் நற் றன்மையாளன் என மதிக்கப்பட்ட ஒருவன், ஓரொரு கால், தன்னையறியாமலே சில தாழ்ந்த செயல்களைச் செய்ய விழைகின்ருன். இவ்விழைவு மற்றக் காலங்களில் யாண்டு உறைந்திருந்தது? ஒருவன் சில திங்கள் களுக்கு முன்னர் ஒரு நீண்ட பாச்செய்யுளைப் பாடம் போற்றியிருந்தான். இன்று அவன் அச்செய்யுளை யாதொரு தவறும் இன்றி மீண்டு மொழிகின்ருன். இச் செய்யுள் நினைவு இச்சில திங்கள்களாக யாண்டுறைந் திருந்தது? ஒரு நண்பன் பெயரை நாம் முன்னர் அறிந் திருந்தோம்; இப்பொழுது அப்பெயரை நினைவுக்குக் கொணர முயன்றும் அப்பெயர் நினைவுக்கு வரவில்லை; சில நாழிகை கழித்து, நாம் வேறு அலுவலுடன் இருக் குங்கால் அப்பெயா நினைவு வட்டத்தில் மின்னெனத் தோன்றுகின்றது. அப்பெயர் நினைவு இதுகாறும்

யாண்டுறைந்திருந்தது? நம்முடைய பெயரை ஒரு தாளில் எழுத நாம் எழுதுகோலை ஊன்றுகின்றோம்; நம் பெயர் இத்தனை எழுத்துக்களால் ஆயது என்பதாதல், ஒவ்வோர் எழுத்தின் வடிவம் இஃது என்பதாதல் நம் நினைவு வட்டத்தில் தோன்றவில்லை; எனினும், கண்ணிமைப் பொழுதுள் பெயரை எழுதி முடிக்கின்றோம். ஆயின், எழுத்துக்களின் செவ்வெண்ணும் எழுத்தின் வடிவமும் யாண்டுறைந்திருந்தன? ஈருருளை (Bicycle) ஏற்றம் முதற்கண் பழகினவன் ஒருவன், பின்னர் அவ்வீருருளை ஊர்ந்து செல்லுங்கால் தொடக்கத்தில் கையாண்ட சிறுசிறு முறைகளையெல்லாம் நினைவுடன் கூடிச் செய்கின்றனல்லன்; இருக்கையின்மீது குதித்து அமர்கின்றான்; எதிர் வரும் பொருள்களையெல்லாம் காணுமற்கண்டு விலகி, ஊர்ந்து செல்கின்றான்; கைப்பிடியை அசைத்தல், மணியை ஒலித்தல், உருளையைக் காலாற்சுழற்றல் முதலிய தொழில்களையெல்லாம் அவன் நினைவின்றியே செய்கின்றான். ஆயின், அத்தொழில்களின் நினைவு அக்கால் யாண்டுறைந்திருந்தது?

மேற்சென்ற வினாக்களுக்கு எல்லாம் ஒரே விடை **கீழுள்ளம்** என்பதே. இஃது ஆங்கிலத்தில் **தி அன்கான்ஷியஸ்** (The Unconscious) எனவும், **தி சப்.கான்ஷியஸ் மைண்டு** (The Sub-conscious Mind) எனவும் கூறப்படும். ஒருவனுடைய விழைவுகளும், நினைவுகளும், வினைசெய் முறைப்பதிவுகளும் அவனது கீழுள்ளத்தே உறைகின்றன என்பது உளநூற்புலவர்தங் கொள்கை. இக்கீழுள்ளம் என்பது உள்ளத்துக்கு வேறுபட்ட ஒரு தனிப் பொருளன்று; ஒரு மனையின் அடித்தளம் போன்று உளத்தின் அடி நிலைக்குக் கீழுள்ளம் என்பது குறியீடு

# உயர்நிலை மாடம் தரும் எழுச்சி

(ஸாம்யல் ஜான்ஸன் எழுதிய 'ஆஃப் தி இன்ஸ்பிரேஷன் ஆஃப் எ காரெட்' என்னும் கட்டுரையின் சுருங்கிய தமிழ் அமைப்பு)

இலக்கியக் குரவர் பொதுவாக மாடங்களின் உயர்நிலைகளில் வதிகின்றனர் என்னுமுண்மை தொன்று தொட்டுக் காணப்படுவதொன்றும். உயர்ந்த இருக்கையால் உண்டாம் அறிவு மேன்மையைப் பற்றி அறிஞரான முன்னோர் நன்கு தெரிந்திருந்தனர். அன்றியும், பல புனைகதைகளால் பழம்பெருங்குரவர் பின்னோர்க்கு மாட வாழ்க்கையின் மாண்பைப்பற்றி எடுத்துக் கூற முயன்றிருக்கின்றனர். **பிதகோராஸ்** கூறிச் சென்ற, "காற்று வீசுங்கால் அதன் எதிரொலியை வழிபடுமின்," என்ற உட்பொருள் வாக்கியம் ஈண்டு நினைவு கோடற்கு உரியது. இதனை, மாட வாழ்க்கையை மேற்கொள்ளுமாறு இடப்பட்ட மீறுதற்காகாத கட்டளையாக அவர்தம் மாணவர் அறியக் கடமைப்பட்டிருக்கின்றனர்; என்னெனில், உயர்ந்த மாடத்தில் காற்று வலிந்து வீசுதலும், அதனால் எதிரொலி மிகுந்து கேட்டலும் பலகால் நிகழும்.

இவ்வேறுபாடு இந்நாள் வரை தொடர்ந்திருக்கின்றது; மெய்யறிவாளனுக்கும் பாவலனுக்கும் உயர்நிலை மாடம் இன்றும் பழக்கமான இருக்கையாய் இருக்கின்றது; ஆயின், இதுவும் பல பழைய வழக்கங்கள் போல, முதற்றோற்றத்தின் முன்னிலை அறியாமல், தற்செயலாகப் பின்பற்றுமாற்றால் நிலைத்திருப்பதாம்.

'முன்னிலை மறைவேயாயினும் பின்விளைவு தெளிவேயாம்.'

—அடிஸன்

குறைந்த குடிக்கூலிக்குக் கிடைக்குமாற்றால், உயர் நிலைமாடம் அறிவுடையோரால் விரும்பப்படுகின்றது என்று சிலர் நினைத்திருந்தனர்; காண வருவோரின் காட்சிக்கு நேராகும் தலை வாயிலுக்கு நெடுந்தொலைவில் உள்ளதால் உயர்நிலை மாடம் தக்க இடமாதல் கூடும் என்று சிலர் ஐயுறுகின்றனர்; நோக்கத்தை ஈர்க்கும களியாட்டங்களுக்கும் வேலைகளுக்கும் அப்பாற்பட்டும், ஓசையின் பாய்ச்சலுக்கு அப்பாற்பட்டும் இருத்தலால், இது தக்கதாம் என ஒரு சிலர் கூறுகின்றனர்; மிகத் தெளிந்த காட்சியர் சிலர், மாடத்தில் உள்ள திறந்த வெளியால் புலவர்தம் அறிவுத்திறன் பெருகும் பான்மையதாகவும், கற்பனைத்திறன் தடையற்றதாகவும், பார்வையின் பரப்பு எல்லையற்றதாகவும் ஆதலால், இஃது அன்னவரால் விரும்பப்படும் என்பர்.

மனத்தின் ஆற்றல்கள் உடம்பின் நிலையால் வன்மை பெறுதலும் மென்மை பெறுதலும யாவரும் அறிந்தவை; அவ்வுடம்பு, சூழ்ந்துள்ள காற்றின் பல வகைப்பட்ட நெருக்கங்களால் பெரும்பாலும் நன்மை தீமை எய்துகின்றது என்பதும் யாவரும் அறிந்ததே. **ஃஇப்பொக்ரேட்டஸ்** காலத்திலிருந்து, உடம்புநோயை ஆக்குதற்கும் நீக்குதற்கும் காற்று வல்லது என்ற உண்மை உடன்பாடாய் இருக்கின்றது. ஒருசில புலவர்கள் அவர்கட்குப் பழக்கமான இடத்தில் இருக்குங்கால் கூர்த்த அறிவுடனும் நுனித்தறியும் பகுதியுடனும் இருத்தலும், அவ்விடம் விட்டுப் பெயர்ந்தக்கால் மூடமும் அசைவின்மையும் சூழ ஆழ்ந்துவிடலும் நாடொறும்

காணக்கிடப்பனவாக, இன்றளவும், காற்று அறிவின் தொழிலை அளவுபடுத்தும் எல்லையை வரையறுத்தார் ஒருவரும் இலர். பல முறையும் பல நாளும் கூர்ந்து நோக்கிய வகையால், யான் கண்ட உண்மைகள் சில உள: ஆக்கத்திறனும் சொல் வன்மையும் தூய்மையற்ற கனவிய ஆவிகளால் தடைபடுகின்றன என்பதும், நிலப் பரப்புக்கு மேல் ஏற்ற உயரத்தில் அசைதரும் தெளிந்த காற்றின் நொய்ம்மை கற்பனையாற்றலை விரைவுறச் செய்கின்றது என்பதும், கனவிய காற்றின் அழுத்தத்தாலும், வலிய ஈர்ப்பாற்றலாலும் தாளூற்றிருந்த அறிவுத்திறன்களை விடுவிக்கின்றது என்பதும் அவை.

உயர்மாடத்து உறைவோர்தம் மகிழ்ச்சிக்கும் சுறு சுறுப்புக்கும் தக்க முன்னிலையாக, ஒரு கால் இருத்தற்குத் தக்கது யாதெனில், இந்நிலவுலகம் நாடொறும் சுழலுங்கால் இதன் பரப்புக்கு மிக்க உயரத்தில் உள்ள பொருள்கள் மிக்க நேரசைவு பெறுகின்றன என்னும் உண்மையாம். அசைவால் உணர்ச்சி மாறுமாறு நன்கு தெரிந்ததே. விரைந்து செல்லும் வண்டியிலும் பாய்ந்து செல்லும் பரிமேலும் இருப்பார்தம் நெஞ்சம் களிப்பெய்துமாறு ஒவ்வொருவரும் உணர்ந்ததே. மாடத்தின் ஐந்தாம் நிலைக்கு உயர்ந்து செல்வோர் அடிநிலைக்குச் செல்வோரினும் மிக்க இடத்தின் வழியாகச் சுழற்றப்படுவது யாவர்க்கும் மிகு தெளிவு. நிலவுலகின் மிக அகன்ற பாகமாகிய நடுப்பாகத்தே வாழும் நாட்டினர் அதன் நுனிகளில் வாழும் நாட்டினரிலும் மிகு சுறுசுறுப்பை உடையவர்களாயும், கற்பனைத் திறனை உடையவர்களாயும் இருத்தற்கு முன்னிலை யாதெனில், அகன்றுள்ள நடுப்பாகம் நுனிப்புடைய கடைப் பாகங்களிலும் மிக விரைவுபடச் சுழல்வதேயாம்.

உயர்நிலைமாட வாழ்க்கை ஒருவனை அறிஞனுக்கும் எனக் கொள்ளுதல் எனக்குத் தொலை. ஒரு சிலர் உயர்ந்த குன்றின் நுனியில் வைக்கப்படினும், கனவிய தலையராகவே இருப்பர் என்பது யான் அறிவேன். எனினும், உயர்நிலையில் வைத்து நோக்காமல் ஒருவனை விளக்கம் எய்தான் எனக்கருதல் எவர்க்கும் கூடாது.

ஒரு நடுப்பட்ட இடத்திலிருந்து பல தொலைகளில் உள்ள இடங்கட்குப் பல முறை செல்லுதல், ஒருவனுடைய அறிவுத்திறன்களைச் சீர்தூக்கி அளந்தறிதற்கு இன்றியமையாமல் வேண்டப்படும் என்றும், அது கல்விக்குப் பெரும்பயன் அளிக்கும் என்றும் யான் கருதுகின்றேன். ஆதலால், மாந்தர் என் சொற்கேட்டு ஒரு பெரிய ஆராய்ச்சி முறைக்கு உடன்படுவராயின், யான் ஒரு முறையை நன்கு கூறுவேன். ஓர் ஆழ்ந்த பள்ளத்தையும் ஓர் உயர்ந்த கொடுமுடியையும் அமைத்தல்வேண்டும்; இவற்றில் வதிதல் ஒருவனுக்கு முறையே அறிவு நெருக்கத்தையும் அறிவு விரிவையும் உண்டாக்கும். அவைதாமும் அவனுடைய மன ஆக்கத்துக்கு ஏற்றவாறும் நிகழும். கொடுமுடியின் நுனியில் வதியுங்கால், காலத்தைப்பற்றியும் இடத்தைப்பற்றியும் எண்ணுதனவெலாம் எண்ணிமனமும் அறிவும் கரைந்து நிற்போர், ஒருகால் ஆழத்தின் அடித்தளத்தே வதியுங்கால் பயன் தரும் எண்ணால் ஏதேனும் செய்தல் கூடும். ஒத்த நிலப்பரப்பில் அமைதியுடன் தேங்கி நின்று வெற்று வரலாறு கூறும் தன்மையோர், ஒரு கால், உயரிடத்தே வதிய நேர்ந்தால் களிப்புத் தோன்றவும், அறிவு முனைப்புடன் அளவளாவியும், விரிவுரைகள் பொங்கி எழவும் விளங்குவர்.

**விர்ஜில்** என்பாரின் இருப்பிடத்தின் வெம்மை அவர் எழுதிய **ஜார்ஜிக்** என்னும் நூலின் சில வரிகளில் நன்கு தோன்றும் என்று **அடிஸன்** கூறியுள்ளார். அதனால் யாதானுமொரு செய்யுளைப் படிக்குங்கால் உடனே அதனை எழுதியோர் வதிந்திருக்கக் கூடிய உயரத்தை நுனித்தறிவேன். ஒருவர் எதைப் பற்றியேனும் அளவுக்கு மேல் நீண்ட செய்யுளை இயற்றினால், அதனை விளக்கு நாற்றம் நிரம்பியது என்று கூறுவது வழக்கம். அதுபோல யான் ஓர் உயர்ந்த கருத்தையேனும், ஒரு களிப்புள்ள சொற்பாய்ச்சலையேனும், ஓர் உயர்ந்த உவமையையேனும் கேட்பின், அஃது உயர்நிலை மாடத்திருந்து பசுமையுடன் வந்தெய்தியது என்று கூறுவது வழக்கம்.

# சில மேனாட்டுக் கட்டுரையாளர் வரலாற்றுக் குறிப்புக்கள்

## 1. மைக்கல் டி மாண்டெய்ன்

**மைக்கல் டி மாண்டெய்ன்** 1533-ஆம் ஆண்டில் பிறந்து 1592-ஆம் ஆண்டில் இறந்தார். அவர் **ஃப்ரான்ஸ்** நாட்டவர். அவர்தாம் முதன்முதலில் கட்டுரை எழுதத் தொடங்கியவர். கட்டுரை என்பதை அவர் **எஸ்ஸே** என்று வழங்கினார்; அச்சொல் அப்படியே இங்கிலிஷ் சொல்லாய் வழங்கியது. **எஸ்ஸே** என்பது முயற்சி. ஒரு முயற்சியில் எழுதப்படும் ஓர் உரைச்செய்யுளுக்கு **எஸ்ஸே** என்பது பெயர். மாண்டெய்ன் எழுதிய கட்டுரைகளின் இங்கிலிஷ் மொழி பெயர்ப்பு 1603-ஆம் ஆண்டில் **ஜான் ஃப்ளோரியோ** என்பவரால் எழுதி வெளியிடப்பட்டது.

மாண்டெய்ன் நுண்ணிய அறிவுடையவர்; அதனுடன் ஊர் பல சென்று கண்டு கேட்டறிந்தவற்றால் பெருகிய உலகியலறிவும் கூடியவர். தாம் பெற்ற அறிவை உலகத்தாரும் பெறுதல் வேண்டும் என்னும் உயர்ந்த கருத்தொடு அவர் ஒரு நூல் எழுதத்தொடங்கினார். அதன் பிரிவு ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனி முயற்சியாய் அமைந்தமையின், அதற்கு **எஸ்ஸேஸ்** என்று பெயரிட்டார். அவற்றின் வாயிலாகத் தம்மை உலகத்துக்கு அறிவித்துக்கொண்டார், 1580-ஆம் ஆண்டில் அவர் இயற்றிய கட்டுரைகள் இரண்டு சுவடிகளாய் வெளியிடப்பட்டன. பின்னர் 1588-ஆம் ஆண்டில் மூன்றும் சுவடி வெளியிடப்பட்டது.

அவர் எழுத்து நடை, கற்றவர் கையாளும் நடையன்று; உலகியலறிவும் ஆழ்ந்த அறிவும் பரந்த கேள்வியறிவும் நிரம்பிய ஒருவர்பிறர்க்கு எளிதில் புலப்படுமாறு எடுத்து மொழிதல் போல எழுதப்பட்ட நடை. விந்தையான பழக்கங்கள், பழமொழிகள், நிகழ்ச்சி வரலாறுகள், விந்தையான கருத்துககள், ஆன்றோர் நூற்பயிற்சி முதலிய பல கொண்ட ஒரு குவையாகவே அவருடைய மனத்தை நாம் நினைக்க வேண்டும்.

## 2. ஃப்ரான்ஸிஸ் பேக்கன்

இங்கிலிஷ் உரைச்செய்யுள் எழுதிய மிகச் சிறந்த புலவர் சிலருள் **பேக்கன்** ஒருவர். அவர் 1561-ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் பிறந்தார்: புலமையிற் சிறந்த ஷேக்ஸ்பியர் அவருக்கு மூன்று ஆண்டுகள் இளையவர். பேக்கன் 1626-ஆம் ஆண்டில் 65-ஆம் அகவையில் இறந்தார். **கேம்பிரிட்ஜ்** நகரில் **ட்ரினிட்டிக்** கல்லூரியில் படித்த பிறகு 1582-ஆம் ஆண்டில் வழக்குரை தொழிலில் ஈடுபட்டார். இரண்டு ஆண்டுகள் கழிந்த பிறகு ஆட்சி மன்றத்தின் உறுப்பினராய்ச் சேர்ந்தார்.

அவருடைய தந்தையார் **எலிஸபெத்து** இறைவியின் ஆட்சியில் பெரிய ஆள்வினை உடையராய் இருந்தவர். அன்றியும், அவருடைய புகழ் பெருகிய அமைச்சரான **ராபர்ட் செஸில்** என்பவருடைய தாயத்தாராயும் இருந்தார். இம்முன்னிலைகளால் ஆட்சி மன்றத்தில் புகுந்த பேக்கன் இறைவியின் நன்ஞேக்குள்ள **எஸ்ஸக்ஸ்** பெருமகனுருடைய கட்சியில் சேர்ந்தனர்; சேர்ந்தும், பிற்றை நாளில் அப்பெரியாருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதில்

முனைந்தார். இக்குற்றத்தை மக்கள் நீண்ட காலம் மறவாமலும் மன்னித்திடாமலும் இருந்தார்கள். முதல் ஜேம்ஸ் மன்னரின் ஆட்சியில் அவர் 'வழக்குரையாளர் தலைவர்' என்னும் ஆள்வினை அளிக்கப்பட்டார். பிறகு 1618-ஆம் ஆண்டில் பொருட்காப்பாளராக அமர்த்தப் பட்டார்; மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தகா முறையில் கைப்பொருள் பெற்றதாகக் குற்றம் காட்டப்பட்டு, சிறுமை அடைந்தார். பின்னுயுள் முழுதும் அவர் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டனர்.

அவர் இயற்றிய சிறந்த நூல்களில் முற்பட்டது, **கட்டுரைகள்** என்பது. 1597ல் வெளியிடப்பட்ட அதன் முதற்பதிப்பில் பத்துக்கட்டுரைகளே இருந்தன; பேக்கன் அவற்றுடன் புதுக்கட்டுரைகளை அவ்வப் போது சேர்த்துக்கொண்டே இருந்தனர்; இறுதியில் 1625ல் வெளியிடப்பட்ட பதிப்பில் ஐம்பத்தெட்டு கட்டுரைகள் இருந்தன. **கல்வியின் முற்போக்கு** (1605) (Advancement of Learning), நோவம் ஆர்கானம் (Novum Organum), நியு அட்லாண்டிஸ் (New Atlantis) முதலிய வேறு சில நூல்களையும் அவர் இயற்றினர்.

பேக்கனுடைய புகழ் கட்டுரைகளால் ஏற்பட்டதே. அவைசிறந்த, திறமையான நடையில் எழுதப்பட்டவை; உயர்ந்த கருத்துக்களும் சிறந்த அறிவுரைகளும் நிரம்பியவை. அவற்றில் பல சொற்கள் பழம்பொருள்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பேக்கனுடைய உரைச் செய்யுளின் நடை, சுருங்கச் சொல்லல், முதுமொழியுடைமை, துலை நேர் வாக்கியமுடைமை, வாக்கிய எதிர் நிரனிறையமைப்பு ஆய முன்னிலைகளால் மிக்க

சிறப்புடன் விளங்குகின்றது. உவமையுடைமையும் மறைநூல் மேற்கோளுடைமையும் பேக்கனுடைய நடையை நன்கு சிறக்கச் செய்தன.

பெரிய உண்மைகளையும் ஞாலத்தார் யார்க்கும் ஏற்ற உண்மைகளையும் எடுத்து எழுதினமையே பேக்க னுடைய பெருமைக்கு முன்னிலையாயிற்று.

## 3. எப்ரஹ்ஆம் கவ்லி

**எப்ரஹ்ஆம் கவ்லி,** லண்டன் பட்டணத்தில் 1618-ஆம் ஆண்டில் பிறந்தார்; இளமையில், **வெஸ்ட் மின்ஸ்டர்** பள்ளியில் கல்வி பயின்றார். அவர் அமைதி பொருந் திய இயல்புடையராயும், கற்றலில் மிகு ஊக்கம் கொண்டவராயும் இளமை முதற்கொண்டே விளங் கினர். இளமையிலேயே அவர் பாச்செய்யுள் யாக்கும் பயிற்சி கொண்டிருந்தார். உயர்தரக்கல்வியை அவர் **கேம்ப்ரிட்ஜ்** பட்டணத்தில் **ட்ரினிட்டிக்** கல்லூரியில் பெற்றார். பின்னர் 1643-ஆம் ஆண்டில் **ஆக்ஸ்ஃபர்ட்** பட்டணத்துக்குச் சென்று தங்கினார்.

இங்கிலாந்தில் **உட்போர்** நேர்ந்த காலத்தில் அவர் மன்னர் கட்சியில் பற்றுடையவராய் இருந்தார்: பிறகு ஏற்பட்ட ஆட்சியின் தன்மையைக் கண்டு, தம் கருத் தை மாற்றிக்கொண்டார்; பிற்றை நாளில் **இரண்டாம் சார்லஸ்** மன்னன் ஆட்சியில் தாம் எதிர் பார்த்த மன்னர் பாராட்டுக் கிட்டாமையின், பட்டண வாழ்க் கையை விட்டு, ஊர்ப்புறம் சென்று, இலக்கிய முயற்சி யில் ஈடுபட்டார்.

கட்டுரை இலக்கியம் இயற்றிய புலவர் வரிசையில் மூன்றும் இடத்துக்கு உரியவர் **கவ்லி:** முதல்வர் மாண்

டெய்ன்; இரண்டாமவர் பேக்கன். இருப்பினும், அதன் இலக்கணத்துக்கு ஏற்ப முதன்முதலில் இங்கிலிஷ் மொழியில் கட்டுரை எழுதியவர் **கவ்லி**தாம் என்பது அறிஞர் கொள்கை. தம் எழுத்தைப் படிப்போர்க்கு மாண்டெய்ன் நெருக்கமற்ற நண்பராகவும், பேக்கன் கடினமான குரவராகவும தோன்றின், கவ்லி நெஞ்சுற வுக்கு ஏற்ற தோழராகக் கொள்ளத்தக்கவர்.

கவ்லியின் நடை இளம்பாங்குடையது; இரக்கம் ததும்பியது; தன்மை நவிற்சி உள்ளது; காரண காரிய முறையாகக் கருத்தின் பின் கருத்துத் தோன்றக் கடின வகையில் எழுதப்பட்டதன்று.

## 4. வில்லியம் ஃஆஸ்லிட்

**வில்லியம் ஃஆஸ்லிட்** 'மெய்ட் ஸ்டோன்' என்னும் இடத்தில் 1778-ஆம் ஆண்டில் பிறந்தார்: 1830-ஆம் ஆண்டில் இறந்தார். அவருடைய சிறந்த நூல்களிற் சில, (Lectures on English Poetry and Comic Writers) **லெக்சர்ஸ் ஆன் இங்கிலிஷ் பொயட்ரி அண்ட் காமிக் ரைட்டர்ஸ்** என்பதும், (Characters of Shakespeare's Plays) **ஷேக்ஸ்பியர் நாடக நடர்கள்** என்பதும், **கட்டுரைகள்** என்பதுமாம். இங்கிலிஷ் ஓர்ப்பாளர்களில் (Critics) அவர் முதன்மையிடம் பெற்றவர். உரை நடை எழுதுவதில் அவரின் மிக்கவர் எவருமிலர் என்பது **ஸ்டீவன்ஸன்** புலவரின் கருத்து.

அவர் நடை குற்றமற்ற நடை; ஏலா உயர்வு அதில் இலது. அடிஸன் போலவும் ஜான்ஸன் போலவும் பெருமை தங்கிய நடையில் எழுதும் திறன் அவர்க்கு உண்டு. மென்மையுடன் எள்ளி

நகைக்கும் திறன் அவர் எழுத்தில் புலனும். சிறந்த மேற்கோள் காட்டுவதில் அவர்க்கு விருப்பம் மிகுதி. எதிர் பாராத உண்மைகளை நவில்வதிலும், இரட்டுற மொழிவதிலும் அவர் மிக்க திறம் படைத்தவராவர்.

## 5. ஜோஸஃப் அடிஸன்

**ஜோஸஃப் அடிஸன், ரிச்சர்ட் ஸ்டீல்** பிறந்த ஆண்டாகிய 1672ல் பிறந்தார். இருவரும் இளமைக் கல்வியை ஒரே பள்ளியில் பெற்றனர்; முதிர்ந்த கல்வியையும் **ஆக்ஸ்ஃபர்ட் பல்கலைக் கழகத்தில்** ஒருங்கு பெற்றனர்.

1699-ஆம் ஆண்டில் அடிஸன் ஊர்ச் செலவு சென்று கல்வி கற்கத்தக்க மாணவராகக் கருதப்பட்டு, **யூரப்** முழுதும் சென்று காணும் வாய்ப்பினைப் பெற்றார்; 1703-ஆம் ஆண்டில் **தி காம்பெய்ன்** என்னும் பாச் செய்யுளை இயற்றினர். அது **மார்ல்பரோ ட்யூக்** பெற்ற **ப்ளென்ஹீம்** நகர வெற்றியைப் புகழ்ந்து இயற்றப்பட்டது. அச்செய்யுளின் திறத்தால் அடிஸனுக்கு உயர்ந்த ஆள்வினை கிடைத்தது. 1713-ஆம் ஆண்டில் அவர் **கேட்டோ** என்ற துன்ப நாடகத்தை இயற்றினர். **ஸ்டீல்** புலவருடன் சேர்ந்து **டேட்ளர்** என்னும் போதுத்தாளிலும், **ஸ்பெக்டேட்டர்** என்னும் போதுத்தாளிலும் செய்த இலக்கிய முயற்சியே அவருக்குச் சிறந்த புலமைப் புகழை அளித்தது.

ஸ்டீல் உணர்ச்சி ததும்ப எழுதுவர்; அவ்வெழுத்தில் அடிஸன் கருத்து என்னும் எடையை நிரம்பச் சேர்ப்பர். ஸ்டீல் கற்பனை ஆற்றலோடு புதுப்புது வழி

களை அமைத்து எழுதுவர்; அவ்வெழுத்தில் அடிஸன் துலை போன்றதும் எழிலுடையதுமான நடையையும், கருத்தாழத்தையும், கோட்பாட்டாழத்தையும் நன்கு கலப்பர். சுவடிச் சாலைகளிலும் கல்லூரிகளிலும் பெறப் படும் கருத்துக்களும், உண்மைகளும், உண்டிச் சாலை களிலும், எளியவர் கூடும் பிற இடங்களிலும் கிடைக்கு மாறு செய்தல் வேண்டும் என்பது அடிஸன் கொண்ட விருப்பம்.

பேக்கனுடைய சுருக்க நடையின் விளக்கம் அடிஸ னுடைய நடையில் காணப்படுவது அரிது. எனினும், துலைநேராகவும் எதிர்நிரனிறையாகவும் வாக்கியங்கள் அமைத்து எழுதுவதில் அவரைப் பேக்கனுக்கு ஒப் பாகக் கருதலாம். பேக்கன் போல உயர் நடையில், பெருந்தகவுடன், சொல்லடக்கமாக எழுதுவதில் அவருக்குத் திறமை உண்டு. பேக்கனைப்போல எஞ் ஞான்றும் முனைப்புள்ள நடையிலேயே எழுதுவது அவருக்கு இயல்பன்று; இடையிடையே நகைச்சுவை தோன்றவும் எழுதுவது அவர் வழக்கு.

## 6. ஸாம்யல் ஜான்ஸன்

**டாக்டர் ஸாம்யல் ஜான்ஸன்** பதினெட்டாம் நூற் றுண்டின் இங்கிலீஷ் புலவர்-மன்னர். அவர் 1709-ஆம் ஆண்டில் **லிச்ஃபீல்ட்** என்னும் ஊரில் பிறந்தார்; **ஆக்ஸ்ஃபர்ட்** பட்டணத்தில் **பெம்ப்ரோக்** கல்லூரியில் உயர்தரக் கல்வி பெற்றுர். 1749-ஆம் ஆண்டில் அவர் இயற்றிய **தி வானிட்டி ஆஃப் ஹ்யூமன் விஷஸ்** என்னும் பாச்செய்யுள் வெளி வந்தது. அதன் பிறகு **ராம்ப்ளர், ஐட் ளர்** என்னும் போதுத்தாள்களில் வரிசையாகப் பல கட்

டுரைகள் வெளி வந்தன. 1749-ஆம் ஆண்டில் **ராஸிலஸ்** என்ற சிறந்த நூல் வெளியிடப்பட்டது. பின்னர்ப் **பாவலர் வாழ்க்கை வரலாறு** (Lives of the Poets) என்ற நூல் வெளி வந்தது. அந்நூல் வெளி வந்து மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர் அவர் உயிர் நீத்தார். அவர் இயற்றிய பிற நூல்களில் சிறந்தது **அகர வரிசை** (Dictionary). அவர் பதிப்பித்த ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நற்பாராட்டுக்கு ஏற்றன.

ஜான்ஸனுடைய உரைநடை சொற்பெருக்குக் கொண்டது; வாக்கியங்கள் நன்கு அமைக்கப் பெற்றது; செறிவைப் பொதுவாகக் கொண்டது; பெருமையை எப்பொழுதும் உடன் கொண்டது; எப்பொழுதும் தெளிவு உடன் நிறைந்தது. ஓரொருகால் முணைந்து நடக்கும் நடையும் எதிர் நிரனிறையாக அமைக்கப்பட்ட வாக்கிய மிகுதியும், ஒலியமைதியும் அவர் எழுத்தில் விளங்கும். அவர் எழுத்தால் எழும் உணர்ச்சிகள் தூயன; குற்றமற்றன. தெளிந்த அறிவே அவர் எழுத்தில் கலக்கமின்றிப் புலனாகும். பேக்கனைப்போல அவரும் நகைச்சுவை விரும்பாதவர்; அது தோன்ற எழுதும் பழக்கமுமற்றவர்.

---

The B. N. Press, Mount Road, Madras.